
www.tamilarangam.net

# மனிதம்

19



RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
SEINE ; FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பொங்கல்

மேனி சிலிர்க்கின்ற தை காலை
குளிர் சேர்ந்து வீசிற காற்றோடு
எரிந்த சாம்பல்கள் நீறாக
பனிப் புதர்களில் பூ க்கும் பூ வாகும்

மீண்டும் தொடங்கும் மிருக்கோடு
சூரியன் மேலே வருகிற வேளையிலே
உயிர்கள் இருப்பவர் நடமாட
உள்ளம் கேள்வியில் அலைமோதும்

குண்டுத் தாக்குதல் உயிர் பறிக்கும் – பயம்
உயிரைக் கொண்டு உடலோடும்
முதலில் அளவெட்டி சுழிபுரமும்
அடுத்த தாக்குதல் எமை நகர்த்த
புத்தூர் யாழ்நகர் என்றோடும்

பச்சை மாவிலை தோரணங்கள் – பாதம்
படுகிற இடத்தில் மாக்கோலம் – இலை
இனிக்கும் சர்க்கரைப் பொங்கல் – வாழ்வு
இருண்டே போகுது எங்களுக்கு

கெலிகள் போடும் வானவெடி – உடன்பிறப்புக்கள்
எரியும் பூ ந்திரிபோல் – ஒருபிடி
சோறே கிடைக்காத போதிலே – கேள்வி
இயக்க(ம்) மறுக்கும் – உண்மை மரணிக்கும்

எமக்குள் எழுகிற கேள்வியெல்லாம் அமர்ந்து
போகிற புஸ்வாணம் – மீதி வெடிக்கும்
உயிர்குடிக்கும் – வீதியில் கிடந்து பிணம் நாறும்
தினம் வேதனை வேட்கையில் மனம் பொங்கும்!

தேவன்

www.tamilarangam.net

# மனிதம்



கார்த்திகை
+
மார்கழி

1992
(இரு மாதத்திற்கு
ஒருமுறை)

வாசகர்களே!
விமர்சனங்களையும்
ஆக்கங்களையும்
வரவேற்கிறோம்

Nur für
Freundkreise

தொடர்புகளிற்கு:

MANITHAM
POSTFACH 12
3000 BERN 11
SWITZERLAND

வழமை போலவே இறுதி நேரத்தில் ஆசிரியர் தலையங்கத்துக்கான வாதம்,விவாதம்.... எதை எழுதுவது!

மங்கள முனசிங்கா தலைமையில் இனப்பிரச்சனை தீர்வுக்கான பாராளுமன்ற தெரிவுக்குழு இதுவரை நடாத்திய பஜனையில் பயன் ஏதும் இல்லையே... என்று கொள்கைப் பிறழ்வில் கோலோச்சும் கொழும்பு வாழ் நம் மன்னர்கள் குழம்பிப் போய் இருக்கும் போது.....

புலிகள் அரசுடன் நிபந்தனையற்ற பேச்சு வார்த்தைக்கு தயார் என்ற செய்தி வெளிவந்திருக்கிறது. அரசு-புலிகள் ஊடலும் கூடலும் புதிதல்ல. மறுபுறம் புலி எதிர்ப்பாளர்களை வைத்துக்கொண்டு பிரேமதாசா அரசு காய் நகர்த்தலை நன்றாகவே செய்கிறது.

இனப்பிரச்சனைக்கான தீர்வு என்பது சிங்கள பேரினவாத சக்திகளுக்கு நஞ்சு போன்றதுதான். 48-92 வரலாறும் இதைத்தான் நிரூபிக்கின்றது. போதாக்குறைக்கு இன்னுமோர் புதிய சிங்கள பாதுகாப்பு இயக்கம் (சிங்கள ஆராக்சனய சங்க விதானய) தமிழருக்கு சமஷ்டி கொடுக்கக் கூடாது என்று கொதித்தெழுந்துள்ளது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை போராட்டம் வாழ்வாகிப் போயுள்ளது. தலைக்கு மேலே குண்டு போடும் விமானமும் வாய்க்கு நேரே துவக்குமாகத்தான் வாழ்வு. போரோடு கூடவே யாழ்ப்பாணத்தில் புலிகள் வைத்ததுதான் சட்டம். ஜனநாயக மறுப்பு என்பது எம்மக்களுக்கு பழகிப் போன ஒன்று. ஆயினும் முசுலீம் மக்களை துரத்தி துரத்தி தொடர்ச்சியாக நிகழ்த்தும் கோரக் கொலைகளைத்தான் ஜீரணிக்க முடியவில்லை.

ஒடுக்கப்படும் தேசிய இனம் என்று போர்க்கோலம் பூண்ட நம் இயக்கங்கள் 80 களின் நடுப்பகுதியில் தொடக்கி வைத்த முசுலீம் மக்கள் மீதான அழிப்பு நடவடிக்கை புலிகளினால் பூமியைவிட்டே விரட்டுவது, ஊரோடே அழிப்பதாகி பொலனறுவையில் நான்கு கிராமங்களையே குருதிச்சேற்றில் மிதக்க வைக்கும் அளவிற்கு கோரமாய் வளர்ந்துள்ளது. புலிகளின் கோரச்செயல்களுக்கு முகம் கொடுக்க முடியாத நிலையில் முசுலீம்மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாக கருதி ஜிகாத் போன்ற அமைப்புக்கள் அப்பாவி தமிழ் மக்களை கொல்லுவதும்.... பழிக்குப்பழியாய் கொலைகள் தொடர்வதையும் பார்க்கும் போது

ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம் என்ற பழமொழியைத்தான் நாமும் சொல்லித்தீர்க்க வேண்டியிருக்கிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பொலனறுவை கொலைகள்.

பொலனறுவை மாவட்டத்தில் உள்ள அக்போபுர, பம்புரான, அகமட்புர, பள்ளியகொடல்ல ஆகிய நான்கு கிராமங்கள் 15. 10. 92 வியாழன் அதிகாலை 3மணியளவில் புலிகளால் தாக்கப்பட்டது. பெண்கள் குழந்தைகள் உட்பட 117 பேர் சுட்டும், வெட்டியும் கொல்லப்பட்டனர் இக்கிராமங்களில் பம்புரான கிராமம் முசுலீம் மக்களையும், சிங்கள மக்களையும் கொண்ட கிராமமாகும். ஏனைய 3 கிராமங்களும் முசுலீம் கிராமங்களாகும். இக்கிராமங்கள் நான்கும் மகாவலியின் மேற்குப்புறத்தில் அமைந்த குடியேற்றக்கிராமங்களாகும்.

பொலனறுவையில் இருந்து கிடைத்த செய்திகளின்படி அதிகாலை 3 மணியளவில் 150 க்கும் மேற்பட்ட புலிகள் நான்கு கிராமத்துக்குள்ளும் நுழைந்து கண்ணுக்குத் தெரிந்த பொதுமக்கள்யாவரையும் வெட்டியும், சுட்டும் கொன்றுள்ளனர். இவர்களுடைய கொலை வெறித்தனத்தைக்கண்ட மக்கள் நாலாபக்கமும் முதலில் சிதறி ஓடினர். கொலை வெறியாட்டம் தொடங்கி ஒரு மணிநேரத்தின் பின்னர் புலிகள் போய்விட்டனர் எனக்கருதி திரும்பி வந்தபோது புலிகள் மறைந்திருந்து மீண்டும் தாக்கினர். மக்கள் மீண்டும் சிதறி ஓடியுள்ளனர். புலிகள் பள்ளியகொடல்லயில் இருந்த இராணுவக் காப்பரணையே முதலில் தாக்கினர் அதில் எட்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டதோடு எஞ்சியவர்களும் ஊர்காவற்படையினரும் ஆயுதங்களைப் போட்டுவிட்டு ஓட்டமெடுத்துள்ளனர். காலை 8 மணியளவில் மதுரகிரிய பொலிசு நிலையத்திலிருந்து இரு ஜீப் வண்டிகளில் பொலிசார் வந்தபோது அவர்களையும் புலிகள் மறைந்திருந்து தாக்கினர் ஜீப் வண்டிகள் நிர்மூலமாகியதோடு அதில் வந்த 11 பொலீசார் கொல்லப்பட்டுள்ளனர் பின்னர் பகல் 12 மணிக்கு இராணுவத்தினர் வந்ததன் பின்னரே கிராமங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன.

உண்மையில் பகல் 12 மணிவரை இராணுவம் அங்கு வரவில்லை அதுவரை புலிகள் அங்கு நின்றிருக்கிறார்கள் என்பதே உண்மைச் செய்தியாகும் கொழும்பிலிருந்து வரும் செய்திப் பத்திரிகைகள் உண்மைக்கு மாறான செய்திகளே வெளியிட்டுள்ளன.
காயமடைந்தவர் வெகுநேரத்தின் பின்னரே ஆசுபத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். ஆசுபத்திரிக்கு கொண்டுசெல்லப்பட்டவர்களில் ஒரு 9 மாத கர்ப்பினித் தாயும் அடங்குவர். அங்கு அவர் இறந்தார். சத்திரைசிகிச்சை செய்யப்பட்டு குழந்தை வெளியில் எடுக்கப்பட்டபோது 3 மணிநேரம் குழந்தை உயிருடன் இருந்துவிட்டு இறந்துவிட்டது.

இக்கோரக் கெலைகள் தொடர்பில் வழக்கம்போலவே புலிகள் தங்களுக்கு தொடர்பில்லை என மறுப்பறிக்கை விட்டுள்ளனர். பாரிசில் உள்ள புலிகளின் செயலகத்திலிருந்து லோறன்சு திலகரினால் மறுப்பறிகை விடப்பட்டுள்ளது.

மட்டக்கிளப்பு மாவட்டத்தின் எல்லைப் பகுதிகளில் இருந்து முசுலீம்களை வெளியேற்றும் நோக்கிலும், வடக்கிலிருக்கும் இராணுவத்தினரை எல்லைப்பகுதிகளுக்கு அனுப்புவதன்மூலமும் வடக்கில் இராணுவ பலத்தை குறைப்பதை நோக்கமாகக் கொண்டும் இத்தாக்குதல் நடைபெற்றிருக்கலாமென அவதானிகள் கருதுகின்றனர்.


புலிகளின் நோக்கு எவ்வாறு இருந்த போதும் தமிழ் தேசிய இனத்துக்கும், தமிழ் தேசிய போராட்டத்துக்கும் இக்கொலைகள் பெருந் தலைகுனிவே! அரசியல் ரீதியாக வென்றெடுக்கமுடியாமல், ஒரு சமூகத்தைக் கொலை செய்வது மன்னிக்க முடியாத மனித உரிமை மறுப்பாகும்.

## குழைந்தைகள் சாவு

கறுப்பின மக்கள் வாழும் ஆபிரிக்க நாடுகளில் கடந்த 5 வருடங்களில் 4.6 மில்லியன் குழந்தைகள் இறந்ததைத்தொடர்ந்து சர்வதேசரீதியில் குழந்தைகள் பெருமளவு சாகும் நாடுகள் என்ற நிலைக்கு ஆபிரிக்கா உயர்ந்து இருப்பதாக ஐ.நா வின் குழந்தைகள் நிறுவனம் unisef அறிவுத்துள்ளது.

இப்போது 2 மில்லியன் குழந்தைகள் எயிட்ஸ் நோயின் தாக்குதலிற்கு இரையாகி யிருப்பாதாகவும் இவர்கள் வரும் ஆண்டுகளில் இறந்துவிடுவார்கள் என்றும் இதுவரை எயிட்ஸ் இன் தாக்குதலினால் 5–10 இலட்சம் குழந்தைகள் பெற்றோரை இழந்து அநாதைகள் ஆகிவிட்டதாகவும் unisef அறிவித்துள்ளது .

www.tamilarangam.net



# EWR
## Nein !

**ஐரோப்பிய பொருளாதார சமூகத்தில்** சுவிஸ் இணைவதற்கான அபிப்பிராய வாக்கெடுப்பு டிசம்பர் மாதம் ஆரம்பத்தில் நடந்தேறியது. 50.3 வீதத்தினர் இணைவது இல்லையெனவும் 49.7 வீதத்தில் இணைவதே சரியானது எனவும் வாக்களித்திருந்தனர். 100 வருடங்களுக்குப் பின்பு தேர்தலிலியே முதன்முதலாக 78 வீதமானவர்கள் வாக்களித்துள்ளது குறிப்பிடத்தக்க அம்சமாகும். சுவிற்சர்லாந்து மக்கள் அரசியல் விடயங்களில் ஈடுபாடு காட்டும் விதம் குன்றிவந்துள்ளதை கடந்த கால அபிப்பிராய வாக்கெடுப்புக்கள் நிரூபித்துள்ளன.

ஆனால் பொருளாதார சமூகம், தமது (சுவிஸ் மக்களது) எதிர்கால வாழ்நிலையை தீர்மானிப்பதை சரியாகவோ பிழையாகவோ புரிந்ததினாலே இவ்வாக்கெடுப்பில் பெரும்பான்மையினர் கலந்து கொண்டுள்ளனர். இத் தேர்தல் முடிவுகள் சுவிற்சர்லாந்தின் பல அரசியல்வாதிகளையும், பாரிய தொழில் அதிபர்களையும் துயரத்துள் ஆழ்த்தியுள்ளது. பிரஞ்சுமொழி பேசும் 'கன்ரோன்களில்' (Cantons) "இணைவதே சரியானது" என பெரும்பான்மையினர் வாக்களித்திருப்பதும் ஜேர்மன் மொழிபேசும் கன்ரோன்களில் இரண்டு 'அரைக் கன்ரோன்கள்' (Basel Land Basel stadt) மட்டுமே "இணைவதே சரியானது" என பெரும்பான்மையினர் வாக்களித்துள்ளனர். இவ் வாக்கெடுப்பு ஜேர்மன்மொழி பேசும் கன்ரோன்களையும் பிரஞ்சுமொழி பேசும் கன்ரோன்களையும் துண்டாடியுள்ளது. இத் தேர்தல் முடிவுகளிலிருந்து இவ் இரு மொழிபேசும் மக்களிடையே உள்ள அரசியல் வேறுபாட்டினைப் புரிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது.

**ம. நரேந்திரன்**

பிரெஞ்சுமொழி பேசும் சுவிற்சர்லாந்து மக்கள் தற்பொழுது இந்நாட்டில் அதிகரித்துவரும் வேலையில்லாத் திண்டாட்டம், மற்றும் எதிர்கால பொருளாதார மேம்பாட்டினைக் கணக்கெடுத்தே வாக்களித்துள்ளதை அறியக் கூடியதாக உள்ளது. ஜேர்மன்மொழி பேசும் சுவிற்சர்லாந்து மக்கள் ஐரோப்பிய பொருளாதார சமூகத்தில் (EWR) இணைவதினால் தமது 'சுயம்' இழக்கப்பட்டுவிடும் என்ற பயம் கொண்டவர்கள். ஆதலால் வலது அதிதீவிரவாதிகளின் பிரச்சாரம் இவ் இணைப்பிற்கு எதிராகவே இருந்தது.

இந்நாட்டு மக்களிடையே இலகுவில் எடுபடக்கூடிய இரு விடயங்களே இவ்விணைப்பை மறுப்பதற்குப் பயன்படுத்தப்பட்டன. வரியும் (Tax), வெளிநாட்டவர் வருகையுமே இம் மக்களுக்கு பயிற்றுவிக்கப்பட்ட இலகு அரசியல். இப் பொருளாதார சமூகத்தில் இணைந்தால் வெளிநாட்டு தொழிலாளர்களின் (ஐரோப்பிய தொழிலாளர்) வருகை அதிகரிக்கும். வெளிநாட்டுத் தொழிலாளர்கள் குறைந்த ஊதியத்திற்கே வேலை செய்வார்கள், இதனால் சம்பளம் இயல்பாக குறைந்து விடும் எனவும் வெளிநாட்டு தொழிலாளர்களின் வருகையால் வீட்டுத் தட்டுப்பாடு ஏற்பட்டு வீட்டு வாடகை அதிகரிக்கும் எனவும் ஏனைய நாடுகளின் பொருளாதார நட்டங்களில் தாமும் பங்கு கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு தமது கஜானா காலியாகிவிடும் போன்ற வகையிலேயே அதிதீவிர வலதுசாரிகளும் தேசியவாதிகளும் பிரச்சாரப்படுத்தினர். இம் மலிவுப் பிரச்சாரங்கள் கூடுதலாக மக்களைக் கவர்ந்தன.

பல பாரிய நிறுவனங்கள் ஐரோப்பிய சமூகத்தில் இணைவதின் மூலமே தமது விற்பனைச் சந்தையை சுங்க வரியில்லாமல் பெருக்கலாம் எனவும் குறைந்த விலையில் மூலப்பொருட்களை கொள்வனவு செய்யலாம் எனவும் கனவு கண்டு கொண்டிருந்தனர். இக் கனவை இத் தேர்தல் முடிவுகள் தகர்த்தெறிந்துள்ளது. பல பாரிய தொழில் நிறுவனங்கள் இத் தேர்தல் பெறுபேறுகளின்பின் பல தொழிலாளர்களை உடனடியாக வேலையிலிருந்து நிறுத்தியுள்ளன. இதனால் வேலையில்லாத் திண்டாட்டம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | ஆம் | இல்லை |
|---|---|---|
| **ஜேர்மன் மொழி பேசும் கன்ரோன்கள்** | | |
| Aargau | 40.0 | 60.0 |
| Basel-Land | 53.2 | 46.8 |
| Basel-Stadt | 55.5 | 44.5 |
| Bern | 47.6 | 52.4 |
| Luzern | 39.4 | 60.6 |
| Solothurn | 42.6 | 57.4 |
| St.Gallen | 38.5 | 61.5 |
| Zürich | 48.5 | 51.5 |
| Zug | 50.0 | 50.0 |
| **ஜேர்மன் மொழி பேசும் கால்நடை விவசாய கன்ரோன்கள்** | | |
| Appenzell AR | 36.8 | 63.2 |
| Appenzell IR | 29.1 | 70.9 |
| Glaraus | 32.0 | 68.0 |
| Graubünden | 32.5 | 67.5 |
| Nidwalden | 33.9 | 66.1 |
| Obwalden | 28.2 | 71.8 |
| Scaffhausen | 38.6 | 61.4 |
| Schwyz | 26.7 | 73.3 |
| Thurgau | 36.4 | 63.6 |
| Uri | 25.5 | 74.5 |
| **பிரெஞ்சுமொழி பேசும் கன்ரோன்கள்** | | |
| Freiburg | 64.9 | 35.1 |
| Geneva | 78.2 | 21.8 |
| Jura | 77.2 | 22.8 |
| Neuenburg | 80.0 | 20.0 |
| Waadt | 78.4 | 21.6 |
| Wallis | 55.9 | 44.1 |
| **இத்தாலி மொழி பேசும் கன்ரோன்கள்** | | |
| Tessin | 38.5 | 61.5 |
| | 49.7 | 50.3 |


மேலும் அதிகரித்துள்ளது. அதுமட்டுமல்லாமல் ஒருசில தொழிற்சாலைகள் உற்பத்திகளை இடைநிறுத்தி ஐரோப்பிய சமூகத்தில் அங்கம் வகிக்கும் நாட்டினுள் அவ் உற்பத்திப் பகுதியை தொடரலாம் என திட்டமிடுகின்றனர்.

சுவிற்சர்லாந்து பாராளுமன்றம் இப் பொருளாதார சமூகத்தில் இணைவதற்காக எல்லா வழி வகைகளையும் துருவித் துருவி ஆராயத் தொடங்கியுள்ளது. இவ்வளவு காலமும் கிடப்பில் கிடந்த 'ஐரோப்பிய வர்த்தக கூட்டமைப்பினை' (EFTA) உயிர்ப்பித்து, அதன்மூலம் ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்தி ஐரோப்பிய பொருளாதார சமூகத்தில் இணையலாம் என ஆலோசித்து வருகின்றது.

சுவிற்சர்லாந்தில் ஆஸ்திரியா(Austria) அருகே 'மன்னர் ஆட்சி நடைபெறும் Lichtenstein எனும் நாட்டிலும் இப் பொருளாதார உடன்படிக்கை சம்பந்தமாக அபிப்பிராய வாக்கெடுப்பு நடந்தேறியது. Lihtenstein மக்கள் ஐரோப்பிய பொருளாதார சமூகத்தில் இணைவதே சரியானது என பெரும்பான்மையினர் வாக்களித்துள்ளனர். இந் நாட்டில் சுவிற்சர்லாந்தின் முத்திரையும் பணமும் புழக்கத்தில் உள்ளது. நாட்டின் பாதுகாப்பை சுவிற்சர்லாந்தே வழங்கிவருகிறது. எவ்வித சர்வதேச ஒப்பந்தங்களும் சுவிற்சர்லாந்தின் அனுமதியின்றி மேற்கொள்ள இயலாது. ஐரோப்பிய பொருளாதார சமூகம் பற்றி Lichtenstein க்கு எவ்விதமான முடிவு கொடுக்கலாம் என சுவிற்சர்லாந்து ஆலோசித்து வருகின்றது. ஐ.நா (UNO) சபையில் சுவிற்சர்லாந்து இணையாதபோதும் Lichtenstein இணைந்திருப்பது போல் , ஐரோப்பிய பொருளாதார சமூகத்தில் (EWR) Lichtenstein இணைவதற்கு சுவிஸ் அனுமதி கொடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஜேர்மன்மொழி பேசும் கன்ரோன்களில், கால் நடை விவசாயிகள் கடுமையாக இப் பொருளாதார சமூகத்தில் இணைவதை மறுத்ததை தேர்தல் முடிவுகளிலிருந்து அறியக்கூடியதாக உள்ளது. இவ் விவசாயிகளே இந்நாட்டில் பெரும்பான்மையான நிலச் சொந்தக்காரர்கள். பணபலம் உள்ளவர்களும் கடுமையான உழைப்பாளிகளும் ஆவார்கள். Uri, Schwyz, Appenzellar போன்ற கன்ரோன்களிலேயே இவர்கள் அதிகம் உள்ளவர்கள். இக் கன்ரோன்களே ஆரம்பத்தில் சமஷ்டி சுவிற்சர்லாந்து ஆரம்பித்ததிற்கு மூலமாக இருந்த கன்ரோன்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் இக் கன்ரோன்கள் பழமைபேணிகள் என்பதால், தமது (சமஷ்டியின்) தனித்துவம் இழந்துவிடக் கூடாது எனும் மனோபாவம் கொண்டவர்கள்.

ஐரோப்பிய பொருளாதார சமூகத்தில் இணைவதை அங்கீகரித்த அனைத்து பிரெஞ்சுமொழி பேசும் மக்களின் அபிலாசைகள் இச் சமஷ்டி முறையின் கீழ் தீர்க்கப்படுமா? என்ற கேள்வி பலரிடம் இயல்பாக எழுவது நியாயமானதே. இன்று பெருகிவருகின்ற சந்தைப் பொருளாதாரத்துடன் தனி நிதிமூலதனத்தை மட்டுமே கொண்டுள்ள சுவிற்சர்லாந்து போட்டிபோட முடியுமா ? –சுவிற்சர்லாந்தின் பொருளாதாரம் வீழ்ச்சிக்கு உட்படுவதே சாத்தியம் என பல





தொடர் பக்கம் 14

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நூல் அறிமுகம்

விமர்சனம்

# காகம் கலைத்த கனவு

**சோ**லைக்கிளி – மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட முஸ்லீம் சமூகத்தைச் சேர்ந்தவர். இவரது கவிதைகள் தமிழ்க் கவிதை உலகில் ஒரு புதிய பரிமாணத்தைச் சுட்டிநிற்கிறது. இது ஒரு மிகையான கூற்றல்ல. சோலைக்கிளியின் இப் புதிய பரிமாணம் எங்கிருந்து உதயமாகிறது ?. அதற்கு இயைபுடைய கலை இலக்கிய கோட்பாடுதான் என்ன ? என்பது பற்றிய ஒரு மேலோட்டப்பார்வையினூடாக அப்பால் செல்வது அவசியமாகிறது.

'சர்ரியலிசம்' (Surrealism) ஐரோப்பிய கலை இலக்கிய உலகில் நூற்றாண்டு காலமாகப் பாதிப்பை உண்டுபண்ணிக்கொண்டிருக்கும் ஒரு கலை இலக்கியக் கோட்பாடு. தமிழில் ஞானக்கூத்தன், ரகுமான், அபி போன்றோரது கவிதைகளிலும், ஈழத்தில் சேரனின் அண்மைக்காலக் கவிதைகள் சிலவற்றிலும் இச் சர்ரியலிசப் பண்புகள் (முழுமைபெறாவிட்டாலும்) தழுவிச் செல்வதைக் கண்டுகொள்ளலாம்.

அதிசயத்துடன்கூடிய அதீத (கனவுத்தனமான) கற்பனையும் யதார்த்தத்திலிருந்து பிறக்கின்ற வினோத (Fantasy) காட்சிப் பண்பும், முரண்பட்ட படிமக் கையாள்கையும் சர்ரியலிசத்தின் பிரதான கூறுகள் எனலாம்.

## கவிதைத் தொகுதி

இச் சர்ரியலிசப் பண்புகளை உள்ளடக்கிய விதமான நவீன ஓவியம் ஒன்றினை உதாரணித்துப் பார்ப்போம். ஈழத்துச் சிறுவன் ஒருவனின் மூளையிலிருந்து வளரும் ஒரு மரம், அதுவும் துப்பாக்கி வகைகளையும் ரவைகளையும் குலைகுலையாகக் காய்ப்பதை ஒரு ஓவியன் உருவகப்படுத்துவானானால் அது சர்ரியலிசப் பண்புகளை உள்ளடக்குவதுடன் அத்தகைய ஓவியம் எமது சிந்தையில் பல பரிமாண அர்த்தங்களைக் கொடுக்குமல்லவா ?

இதே கற்பனையை சோலைக்கிளியின் '**தொப்பி சப்பாத்து சிசு**' எனும் கவிதை வெளிப்படுத்தும் திறனை நோக்குவோம்.

சோளம் மீசையுடன் நிற்காது
மனிதனைச் சுட்டுப் புழுப்போலக் குவிக்கின்ற
துவக்கை ஓலைக்குள் ஒளித்து வைத்து ஈனும்
. . . . . . . . . . . . . . . . .

பூ மரங்கள்கூட
சமயத்திற்கேற்றாற்போல் துப்பாக்கிச் சன்னத்தை
அரும்பி அரும்பி
வாசலெல்லாம் சும்மா தேவையின்றிச் சொரியும்.
. . . . . . . . . . . . . . . .
குண்டு குலை குலையாய்த் தென்னையில் தொங்கும்
. . . . . . . . . . . . . . . . . .
வற்றாளைக் கொடி நட்டால்
அதில் விளையும் நிலக்கண்ணி

இதே இயல்புடைய இன்னொரு கவிதையை குடும்பத்தில் ஒரு தாய் எப்படி பெண்ணடிமைத்தனத்துக்கு உட்படுகிறாள் என்பதை வெளிப்படுத்தும் ஞானக்கூத்தனின் கவிதையினூடே பார்ப்போம்.



Suvadugal Pathippagam
Hersli Gt. 43
0578 Oslo
Norway



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அப்பாவும் பிள்ளைகளும்
உட்கார்ந்திருந்தார்கள்
உடுப்புகளைப் புறம்போக்கி
படுத்துக்கொண்டனர்
வள்ளிக் கிழங்கின்
பதமாக
வெந்துபோன
அவள்' உடம்பைப்
பிட்டுத்தின்ன
தொடங்கிற்று
ஒவ்வொன்றாக
அவையெல்லாம் !

என்று தாயை கணவனும் குழந்தைகளுமாக உண்பதாகக் காட்சிப்படுத்துகிறார் ஞானக்கூத்தன். மேற்படி கவிதை வரிகளை உதாரணித்ததின்மூலம் இவைகள்தாம் சர்ரியலிசக் கவிதைகள் என்று அர்த்தமாகிவிடா. ஆனால் சர்ரியலிசக் கூறுகளை உள்வாங்கியுள்ளமைக்கு இவை நல்ல உதாரணங்களாகும்.

இத்தகைய சர்ரியலிசப் பண்புகளை சோலைக்கிளியின் 'காகம் கலைத்த கனவுகள்' கவிதை நியாயமான அளவுக்கு உள்வாங்கியிருக்கிறது.

**வி. லோகதாஸ்**

தமிழ்க் கவிதை வரலாற்றை நுனித்து நோக்கின், அது வெவ்வேறு காலப் பகுதியில் வெவ்வேறு இயல்பை அல்லது பண்பை (உருவம், உள்ளடக்கம், படிமச்சேர்க்கை) அடித்தளமாகக் கொண்டு இயங்கி வந்துள்ளமையை அவதானிக்க முடியும். குறிப்பிட்ட காலம்வரை குறிப்பிட்ட இயல்புகள் அல்லது பண்புகளே கவிதையுலகில் மேலாண்மை செலுத்திவந்துள்ளமையும் கண்கூடு. மேலாண்மைக்குட்பட்ட இக் கவிதை இயல்பை அல்லது பண்பை கவிதையுலகின் தளமாகக் கணித்து இக் கட்டுரையைத் தொடர்கிறேன்.

பக்தி இலக்கிய கால பாடல்கள் ஒருவகைத் தளத்தில் நின்று இயங்கின. தமிழ்ச் செய்யுள்கள் மன்னரைப் போற்றிப் புகழ்ந்தமை, நீதி நெறிகளை ஊட்டியமை வேறொரு தளம். கம்பனின் வருகையுடன் புதிய தளம் ஒன்று உருவாகிறது. கம்பன் கவியரசன் ஆனான். இதே தளத்தில் நின்று கவிதை எழுதுபவர்கள் பலரை நாம் இன்றும் காணமுடிகிறது. தமிழகத்தில் கவிஞர்கள் சுரதா, கண்ணதாசன் போன்றோரையும், ஈழத்தில் கவிஞர்கள் காரை செ.இசுந்தரம்பிள்ளை, அம்பி போன்றோரைக் குறிப்படலாம்.

பாரதியுடன் தமிழ்க் கவிதையுலகு மாறுபட்ட வேறொரு தளத்துக்கு மாற்றம் பெறுகிறது. காலத்தின், சமூகத்தின் தேவையுடன் கூடி விடுதலை, சுதந்திரம், பெண்ணடிமை போன்றவை உள்ளடக்கங்கள் ஆகின்றன. புதிய படிமங்களுடன்கூடி கவிதை எளிமை பெறுகிறது. வீரம்,காதல் வேறு பரிமாணத்தில் உள்ளடக்கம் ஆகிறது. பாரதி மகாகவி ஆகிறான். சுமார் 10,15 வருடங்களுக்கு முற்பட்ட காலம்வரை பாரதி தோற்றிய இதே தளத்தில் நின்றுதான் தமிழ்க் கவிதையுலகு இயங்கியது.

ஈழத்தில் அண்மைக் காலம்வரை காலம் சென்ற கவிஞர்கள் பசுபதி, சுபத்திரன் ஆகியோரது சாதீய எதிர்ப்புக் கவிதைகளும் சில்லையூர் செல்வராசன், புதுவை இரத்தினதுரை போன்றோரது கவிதைகள் பலவும் இதே தளத்தை ஒத்தவையே.

புதுக்கவிதை செல்வாக்குப் பெற்றுள்ள இன்றைய காலத்திலும் சிலரது கவிதைகள் (உ–ம் : சிவசேகரத்தின் 'தேவி எழுந்தாள்' கவிதைத் தொகுதியில் பல கவிதைகள்) பாரதியின் தளத்தை ஒற்றி இருப்பதை சாதாரணமாகக் கண்டுகொள்ளலாம். பாரதிதாசனின் கவிதைகளும் பாரதியின் கவிதைத் தளத்தில் நின்றே இயங்கின.

"ஈழத்து நவீன தமிழ்க் கவிதை முன்னோடிகளில் முதன்மையானவர் மகாகவி" என்பது எம்.ஏ. நுஃமானின் கூற்று. ஆனால் அவரது தனித்துவமான நவீனத்துவப் பண்பு கவிதையுலகில் மேலாண்மைக்கு வரவில்லை. அக்கால விமர்சகர்களின் கவிதை பற்றிய குறுகிய பார்வை அவரது தனித்துவம் விசாலிப்பதற்குத் துணைநிற்காமல் போயிருக்கலாம்.

70 க்குப் பிந்திய காலப் பகுதியில் இருந்து புதுக்கவிதை ஆளுமை செலுத்தத் தொடங்கியது. அதுவும் ஈழத்துப் போராட்டச் சூழலுடன் தமிழ்க் கவிதையுலகு புதுக்கவிதைத் தளத்தில் கால்பதிக்கிறது. "கவிதையில் அரசியல் பிரக்ஞை என்பது ஈழத்துக் கவிஞர்களால்தான் வளம் பெற்றது." என்பது தமிழ்நாட்டு விமர்சகர்களது ஆழமான கூற்று. இதில் ஈழத்துக் கவிஞர்கள் எம்.ஏ நுஃமான், முருகையன், சிவசேகரம், சேரன், ஜெயபாலன் போன்றவர்களின் பங்கு முதன்மையானதே. இன்று ஈழத்துத் தமிழ்க் கவிதையின் தளம் இதுவாகவே தொடர்கின்றபோது இத் தளத்தில் இருந்து தனித்துவத்துடன் விடுபடுகின்றான் ஒரு கவிஞன். அவன்தான் 'சோலைக்கிளி' ! சோலைக்கிளியின் கவிதையின் தனித்துவத்திற்கு அவரது கற்பனைத்திறன், படிமக்கையாள்கை, மண்வாசனை ஆகியன காரணமாகின்றன. அவரது தனித்துவத்திற்கு இத் தொகுதியின் கவிதைகள் முழுவதுமே சான்றுகள் என்றபோதும் ......



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுதந்திரமற்ற இன்றைய எமது மண்ணின் வாழ்வியலை வெளிப்படுத்த சுதந்திரமான மேகத்தைப் படிமமாகக் கொண்டு அற்புதக் கற்பனையை வெளிக்கொணர்கிறது. **"இதயத்துள் உணர்கின்ற மேகம்"** எனும் கவிதை (வாசகர்கள் சோலைக்கிளியின் கவிதையினை புரிந்து கொள்ளும் நோக்கில் கவிதையை முழுமையாகத் தருகின்றேன்.

**ஒரு சிறகு முளைத்த கவிஞனைப்போல**
**மேகம்**
**சுதந்திரமாய்த் திரிகிறது.**
**ஆகா**
**அது வானம்.**
**அடியும் முடியும் தெரியவே மாட்டாத**
**திறந்து கிடக்கின்ற கவளம்.**

**அதைப்பார்த்து மயங்குவதா ?**
**இல்லை**
**மேகத்தைப் பார்த்து மனம் ஏங்குவதா ?**
**நான் நினைக்கின்றேன்**
**இந்த நூற்றாண்டில் வெண்மேகம் மட்டும் தான்**
**பரிபூரணமான சுதந்திரத்தை**
**அனுபவிக்கின்ற ஒன்றென்று.**

**இது**
**தும்பிக்குக் கூட**
**சிறகுகள் நோண்டப்பட்டு**
**வாலில் கடதாசி முடியப்பட்ட யுகம்**

**'மேகம்'**
**அதற்கு வாலும் இல்லை**
**சிறகும் இல்லை**
**வெட்டுவதற்கு,**
**அதனால்தான் அது**
**சிறு குழந்தையின் மனம்போல பூக்கிள்ளி**
**முகருவதும்**
**பிறகு கழிப்பதுமாய்**
**வானப் பூந்தோப்பில் மேய்கிறது மேய்ச்சல் . . . .**

**இந்த வகையில்தான்**
**நான் வெண்மேகத்தை விரும்புகிறேன்**
**அதைப்போல நானுமொரு பஞ்சுப் பொதியாகி**
**நினைத்தால் நின்று**

**தேவையென்றால் நடைகட்டி**
**யாரின் கெடுபிடிக்கும் வால்முறுக்க மாட்டாமல்**
**வாழும் நிலையொன்று எனக்கும் கிடைக்குமென்றால்**
**எப்படி இனிக்கும் சுகம் !**

**இன்று**
**மிகவும் சுதந்திரமாய்,**
**ஒன்றுக்கு ஒன்று குதிநக்கும் கொடுமைக்கே**
**இடமற்றுக் காற்றுப் போல**
**திரிகின்ற ஒன்றென்றால்**
**நான்**
**மீண்டும் வலியுறுத்த நேர்கிறது**
**அது வெண்மேகமாகத்தான் இருக்க முடியுமென்று**

**என் பிரிய வெண்மேகத்தைப் பற்றி**
**இனியாச்சும் நானொரு**
**கவிதை எழுத வேண்டும்.**

**மனம்**
**அதிகாலையைப் போல குளிர்ந்து கிடக்கையில்**
**இருக்கின்ற கற்பனை அனைத்தையும்**
**அள்ளித் தெளித்து**
**பஞ்சு மேகத்தைப் பாடி**
**சிம்மாசனமேற்றிப் பார்க்கத்தான் வேண்டும்.**

இக்கால உலகு எப்படி இருக்கும் என்பதை கனவில் காண்பதாகத் கற்பனை செய்யும் இன்னொரு கவிதை. **'காகம் கலைத்த கனவு'**.

**கைவேறு**
**கால்வேறாய்**
**அங்கங்கள் பொருத்திப் பொருத்திப்**
**மனிதர்கள் தயாரிக்கப்படுவதை**
**நேற்று என் கனவில் கண்டேன்.**

**கண்கள் இருந்தன ஒரு பைக்குள்**
**முக்கும் இருந்தன இன்னொன்றில்**
**முழங்கால் பின் மூட்டு**
**விலா குதி எல்லாமே**
**ஏற்கனவே செய்து கடைகளிலே தொங்க**
**தம்பதியார் வந்தார்கள்**
**புரட்டிப் புரட்டிச் சிலதைப்**

www.tamilarangam.net

**பார்த்தார்கள் பின்னர்**
**விரும்பியதை எடுத்தார்கள்**
**கொண்டுபோய்க் கோர்வை செய்யக் கொடுத்தார்கள்.**

**வானம் புடவையாய் வெட்டுண்டு**
**கிடந்தது வீதியாய்**
**நான் நின்ற பாதை.**

**ஒருவன் வந்தான்**
**துவக்கோடு பூனை எலி தேடி அலைவதனைப்**
**பார்த்துப் புன்னகைத்தான்**
**அப்புறமாய் வீட்டுக்குள் நுழைந்து**
**காலில் இருந்த இருதயத்தைக் கழற்றி**
**மனைவியிடம் கொடுத்துவிட்டுப் படுத்தான்.**

**வெயிலோ கொடுமை**
**எரிச்சல் தாங்கவில்லை**
**அவன் பெண்டாட்டி எழுந்தாள் போனாள் அங்கிருந்த**
**பொத்தானை அழுத்திவிட்டு நிமிர்ந்தாள்**
**இரவு !**
**உடனே சூரியன் மறைந்தது**
**நிலவு !**

**நான் இன்னும் கொஞ்சம் கண்ணயர்ந்து போயிருந்தால்**
**ஆண்டவனைக் குடும்பியிலே இழுத்து**
**தன்னுடைய புறங்காலை வணங்கச் செய்திருப்பாள்**
**மனிசி !**
**காலம் எனக்கு அவ்வளவு மோசமில்லை**
**எங்கிருந்தோ இந்த நூற்றாண்டுக் காகம்**
**கத்தியது**
**இடையிலே நின்று முக்கியது**
**கா . . . கா . . .**

பொதுவாகக் கோழி கூவித்தான் கனவு கலைவது. ஆனால் சோலைக்கிளிக்கு காகம் கரைந்து கனவு கலைகிறது. ஒரு முரண்பட்ட படிமம். இக் கவிதை முழுவதுமே அதிர்ச்சியூட்டும் படிமத்தையும் அதிசயக் கற்பனையையும் கொண்டுள்ளது. இது சர்ரியலிசப் பாதிப்பின் முழுமையான வெளிப்பாடு எனலாம்.

மேற்படி கவிதைகள் சிலருக்கு அதீத கற்பனையாகத் தோன்றலாம். ஆனால் இவைபற்றிய யதார்த்தத்தில் சமூக அவலங்களிலிருந்து பிறப்பெடுக்கின்ற அற்புதக் கற்பனைகளே ! சோலைக்கிளியன் கவிதைகள் பற்றி எம்.ஏ.நுஃமான் இத்தொகுதியின் முன்னுரையில் குறிப்பிடுவது போன்று. .......

**'சோலைக்கிளியின் கவிதைகள் கருத்து நிலைப்பட்டவை, ஒரு வெளிப்படையான கருத்தை நாம் அவரது கவிதைகளில் காணமுடியாது. பதிலாக அவை அனுபவ உணர்வுகளின் வெளிப்பாடுகளாகவே உள்ளன. பெரும்பாலும் அவரது கவிதைகள் அவரது சொந்த அனுபவங்களும் உணர்களுமே.**

. . . . . . . . . .

இவ்வளவு பரிச்சயங்கள் இருந்தாலும்கூட சோலைக்கிளியின் கவிதைகளுடன் எல்லோருக்கும் ஒரு அத்தியந்த உறவு ஏற்பட்டுவிடும் என்று சொல்வதற்கில்லை. கவிதை பற்றி நம்மில் பலருக்கு பல முற்கற்பிதங்களும் மனத்தடைகளும் உண்டு. கவிதைகளில் வெளிப்படையான கருத்துக்களையே தேடுவோர் பலர். அவர்களுக்கு சோலைக்கிளியின் கவிதைகளுடன் நல்லுறவு ஏற்பட வாய்ப்பில்லை. அறிவியல்போல் கவிதையிலும் ஒரு ஒற்றைப் பரிமாண மொழியினைத் தேடுவோர்க்கும் சோலைக்கிளியின் கவிதைகளுடன் நல்லுறவு ஏற்பட முடியாது. கவிதை பிற எல்லாக் கலைகளையும்போலவே அடிப்படையில் உணர்வுலகு சார்ந்தது. கற்பனை சேர்ந்து கலை வெளிப்பாடு கொள்வது. அவ்வகையில் சோலைக்கிளியின் கவிதைகள் நம்மிடத்திலும் உணர்திறனையும் கற்பனை வளத்தையும் வேண்டிநிற்கின்றன. அவை நம்மிடமும் இருந்தாலே நாம் அவருடைய கவிதை உலகுள் நுழைய முடியும். இந்நிலை அவரை ஒரு கவிஞனாக உறுதிப:படுத்துகிறது.'

இக் கவிதைத் தொகுதி ஈழத்து நவீன கவிதை உலகில் ஒரு தனித்துவம் மிக்க கவிஞராக சோலைக்கிளியை இனங்காட்டியபோதும், அவரது கவிதைகள் சமூக அவலங்களைக்கண்டு 'திகைத்துப்போன' ஒரு கவிஞனின் அனுபவ உணர்வாகவே வெளிப்படுகின்றன. அரசியல், போராட்ட, இனவெறிக்கொடுமைகளினால் அவதியுறும் இச் சமூகத்திற்கு, வாழ்வின்மீது நம்பிக்கையூட்டுகின்ற தடயங்கள் எதனையும் இக் கவிதைகளில் காணமுடியாமை பாரிய குறைபாடாகவே இருக்கின்றது.

இதற்கு திசைமாறிப்போய், தேக்கநிலைமைக்கு உட்பட்டிருக்கும் எமது அரசியல் போராட்ட சூழ்நிலையும், சமூக அவலங்களும் – குறிப்பாக முஸ்லீம்கள்மீதான இரட்டைத் (தமிழ்,சிங்கள இனவெறியர்களின்) தாக்குதல்கள் சமூகத்தின் சாதாரண மனிதனைப்போன்றே கவிஞனுக்கும் வாழ்வின்மீது, சமூகத்தின்மீது அவநம்பிக்கையை உண்டு பண்ணியிருக்கலாம் என்று கூறுவதற்கும் இடமுண்டு. இதனால் 'இருதயத்தை காலுக்குள் வைக்கும் மனிதராக சமூகத்தை நோக்குகிறான் கவிஞன். ஆனால் தமிழ்–

தொடர் பக்கம் 14



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஜேர்மனியில் இனவாத சிந்தனைகள்

26. 08. 92 ஜேர்மனியில் Rostock எனும் இடத்தில் வெளிநாட்டவர் மீது புதிய நாஜிகள் தொடர்ச்சியாக மூன்று நாட்களாக வன்முறையில் ஈடுபட்டனர். இவ் வன்முறையின் போது வியட்நாமியர்களின் வீடுகள் தீக்கிரையாகின. மேலும் 150 வியட்நாமியர்கள் வீடிழந்தனர். இவ்வகையில் பல தாக்குதல்கள் தொடர்ச்சியாக நடைபெற்றுவருகின்றன. Rostock கலவரத்தில் ஈடுபட்ட புதிய நாஜிகள் நால்வரை சுவிற்சர்லாந்து Stern பத்திரிகை சந்தித்து பேட்டிகண்டது. இப்பேட்டியினை நாம் கீழே பிரசுரிக்கின்றோம். இப்பேட்டியின் மூலம் ஐரோப்பிய இளைஞர்களின் மனோநிலையினை குறிப்பாக பழைய DDR இளைஞர்களின் மனோநிலையினை குறைந்தபட்சம் இனம் கண்டு கொள்ளலாம் என நம்புகின்றோம்.

**?** Rostock இல் வெளிநாட்வர்களிற்கு எதிராக நடந்த கலகத்திற்கு தலைவர் யாரும் உள்ளனரா?

**Raiko:-** இல்லை. நாங்கள் Mecklen பிரஜைகள் வெளிநாட்டவர்களின் பிரச்சனையை நாங்களே தனியாக தீர்ப்போம். அதாவது அல்தான்சின் பின்பற்றலின் மூலம் தீர்ப்போம். (அல்தான்சு புதிய நாஜிகளின் München பகுதி தலைவன்) அல்தான்சு தனது நாட்டைப் பற்றி பெருமைப்படுபவர். ஆனால் அவர் நாஜி அல்ல.

**Ralf:-** நான் ஓர் வெற்றிக்காக ஓலமிடுகின்றேன், அது மக்களை பயப்படுத்துகின்றது.

**Ramona:-** Hitler ஓர் பன்றி, யூதர்களை ஓர் அறைக்குள் அடைத்து Gas ஐ அறைக்குள் விட்டு கொலை செய்தவன்.

**?** Gas ஐ அறைக்குள் விட்டு கொலை செய்வதற்கும் வீடுகளை கொழுத்துவதற்கும் எதும் வித்தியாசம் இருக்கின்றதா? இது மனிதாபிமான செயலாகுமா?

**Ramona:-** ஜிப்சிகளை எரிப்பது என்னைப்பாதிக்கவில்லை. வியட்நாமியர்களை எரிப்பது என்னைப்பாதிக்கின்றது ஆனால் Sinthi Roma (வட இந்தியாவில் இருந்து புலம்பெயர்ந்து ஜேர்மனியில் வாழும் இனத்தவர். எரித்தாலோ கொலைசெய்தாலோ நான் பொருட்படுத்தமாட்டேன்.

**Paule:-** Fiji களும் சனியன்கள்

**Ralf:-** நாங்கள் ஓர் வீட்டின் முன் நின்று கொண்டிருந்த பொழுதே கைது செய்யப்பட்டோம். அவ் வீட்டினுள் யார் யார் இருந்தனர் என்று எமக்கு தெரியாது.

**?** தீய நோக்கோடு தீ வைத்தல், கொலைசெய்தல், கிறிமினல் குற்றங்கள் அல்லவா? அப்படியாயின் நீங்கள் கிறிமினல்கள் இல்லையா?

**Paule:-** ம்ம்... இன்னும் ? ஓர் அகதிக்காக நான் ஜெயிலுக்குப்போவதா?

**Ramona:-** ஒருவரை அழிப்பதையிட்டு அக்கறைப்படுவதற்கு ஏதும் இல்லை.

**Ralf:-** நான் முதலில் வெளிநாட்டவர்களிற்கு மட்டுமே எதிரானவன். இப்போது பொலிசுகாரனிற்கும் எதிரானவன். ஏனெனில் இக்கலவரத்தின் போது பொலிசார் என் மீது குண்டடிபிரயோகம் செய்தனர்.

**Ramona:-** பொலிசுகாரன்கள் என்னுடைய முகத்தில அடித்தவர்கள். இதனால் நான் அவங்களை அடியோடு வெறுக்கிறன்.

**Rolf:-** நான் BGS வாகனத்தின் மீது ராக்கெற்றினால் தாக்கினேன். வாகனம் வெடித்தது. இதில் பொலிசார் பலர் காயமுற்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**Raiko:-** பொலிசார் மீது வன்முறையை பிரயோகிப்பது ஜேர்மனியர் மீது வன்முறையை பிரயோகிப்பது போன்றதாகும். அது ஒரு தரித்திரமே.

**Ralf:-** அது சரியானதே.

**?** ஏன் வெளிநாட்டவர்களை நீங்கள் வெறுக்கின்றீர்கள்?

**Ramono:-** அகதிகளும் வெளிநாட்டவர்களும் ஜேர்மனியரை கத்தியால் பயமுறுத்துவதும், ஜேர்மனிய தெருக்களில் பிச்சை எடுப்பதும், புல்வெளிகளை அசிங்கப்படுத்துவது போன்ற செய்கைகளினால் நாங்கள் வெளிநாட்டவர்களை எதிர்க்கின்றோம்.

**Paule:-** அகதிகளிற்கு ஒரு நாள் தேவை முழுவதும் அரசினால் நிவர்த்தி செய்யப்படுகின்றது. ஒரு நாளிற்கு 10 மார்க்குகள் கொடுக்கப்படுகின்றது. இவ்வாறு வேலையற்றோர் கருதுகின்றனர்.

**?** இதனால் மனிதர்களை எரித்தல் கூடாது.

**Raiko:-** இங்கு நாம் கிழக்கில் அசுத்தமான களையை அகற்றுவதற்காக போராடி வருகின்றோம். ஜேர்மனியில் சிந்து,ரோமனியா மக்கள் இருந்தது போல் இங்கில்லை.

**Ralf:-** வெளிநாட்டவர் தன்னிச்சையாக வெளியேற மாட்டார்கள்.

**Raiko:-** இந்த அரசியல்வாதிகள் செய்யாத வேலையினை நாம் செய்வதில் என்ன பிழை இருக்கின்றது?

**?** 1989 கூடுதலான DDR மக்கள் Ungarn இற்கு அகதிகளாக சென்றனர். அப்போது அந்த நாட்டு மக்கள் DDR மக்களை அடித்துத் துரத்தவில்லையே!

**Ramona:-** அவர்கள் அங்கு நீண்ட காலம் இருக்க விரும்பாதவர்கள்.

**Raiko:-** சோமாலியா மக்கள் இங்கு வந்தால் நாம் அவர்களுக்கு எதிரானவர்கள் இல்லை.

**Ralf:-** ஏனெனில் அவர்கள் ஒன்றிற்கும் வழி இல்லாதவர்களாக இருப்பதனால்.

**Raiko:-** ஆனால் அவர்களும் இங்கு வந்து தம்மை ஆரோக்கியமாக்கிவிட்டு திரும்பி செல்ல வேண்டும்.

**Ralf:-** யார் இவர்களுக்கு உணவளிப்பது? ஆறு மில்லியன் வெளிநாட்டவரை நாட்டைவிட்டு துரத்தினாலேயே இரண்டு மில்லியன் வேலையற்ற ஜேர்மனியர் வேலை எடுக்க முடியும்.

**?** வீட்டில் அரசியல் கதைப்பது உண்டா?

**Paule:-** என்னுடைய பெற்றோரும் என்னைப் போல் சிந்தனை உடையவர்கள். என்னுடைய அம்மாவும் வெளிநாட்டவரை நாட்டை விட்டு துரத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டவ.

**Ralf:-** என்னுடைய அப்பாவையும் நான் கலவரத்தின் போது சந்தித்தேன். அவரும் கூட்டத்தில் மும்முரமாய் வெளிநாட்டவர்களுக்கு எதிராக கூச்சலிட்டுக் கொண்டு இருந்தார்.

**Paule:-** வயோதிபர்களும் நாம் செய்வது,சொல்வது சரியென்றே கருதுகின்றனர். என்னுடைய அப்பா தற்போது வேலை இல்லாமலேயே இருக்கின்றார். ஏனெனில் அப்பாவின் வேலையை குறைந்த கூலியில் ஓர் துருக்கியன் செய்கின்றான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**Ralf:-** நான் இறுதியாக ஒரு கூட்டத்திற்கு சென்றிருந்தேன். அக்கூட்டத்தில் Dr. Gerhard Frey (வலது தீவிரவாதிகளின் தலைவர்) கலந்து கொண்டார். வெளிநாட்டவர்களுக்கு 14 மில்லியன் மார்க் செலவழிக்கப்படுகின்றது. இதனை எம் மக்களுக்காக பயன்படுத்த வேண்டும் என தெரிவித்திருந்தார்.

**Paule:-** நியாயமான Rostock வாசிகள் ஒரு வீடு வாடகைக்கு எடுப்பதற்கு ஒரு வருடம் காக்க வேண்டியுள்ளது. ஆனால் வெளிநாட்டவர்கள் உடனடியாக வீடுகளை வாடகைக்கு எடுக்கின்றனர். இக்கலவரத்தினால் பல வீடுகள் தற்போது காலியாகி உள்ளன.

**Ralf:-** இந்தப் பிரச்சனை பள்ளிக்கூடத்திலேயே ஆரம்பமாகிறது. பாடசாலை ஆசிரியர்கள் சொல்லுகின்றார்கள் நீங்கள் படிக்காவிடின் வேலை செய்ய முடியாது, தலையெடுக்க முடியாது.

**Ramona:-** 13 வருடங்கள் தொடர்ச்சியாக படிக்கின்றோம். படித்த பின்பு வேலை எடுக்க முடியாத நிலைமை. முன்பு இவ்வாறு நிலைமை இருக்கவில்லை.

**?** அப்ப எப்படி இருந்தது?

**Ramona:-** DDR ஆக இருக்கும் போது நாம் உணர்ச்சியற்றே இருந்தோம். நான் கடுமையாக படித்துக் கொண்டு இருந்தேன். 1,2 மட்டுமே எழுதிக் கொண்டிருந்தேன். ஆனால் இன்று அதுகூட எனக்கு வடிவாக விளங்கவில்லை.

**Raiko:-** சுவர் எமக்கு முகில்திரை கொண்டு மூடியிருந்தது. இன்று இத்திரை விலக்கப்பட்டுள்ளது.

**Ramona:-** நாங்கள் பாடசாலைக்கு பக்கத்தில் இருக்கும் சிறுவர் பாடசாலையில் சந்திப்பதுண்டு. இறுதியாக ஒரு நாள் எம்மில் சிலர் கண்ணாடிகளை உடைத்து இனிப்புப் பண்டங்களை எடுத்தனர். எமக்கு எமது உண்மையான பலம் வரவேண்டுமாயின் நாம் புகைக்க வேண்டும்,மது அருந்த வேண்டும்.

**Paule:-** போராட்டத்தில் நான் முன்வரிசையில் நிற்க வேண்டுமாயின் உசார் வேண்டும். இவ் உசார் வருவதற்கு நான் குடிக்க வேண்டும்.

**?** எப்படி உங்கள் வாழ்க்கையை தொடரப் போகின்றீர்கள்?

**Ramona:-** வேலை இருந்தால் சந்தோசம். பிரச்சனையுமில்லை. கலவரம் பற்றியும் சிந்திக்க நேரம் இருக்காது. சிலவேளை நான் என்னைப் பற்றியே எண்ணி பயப்படுகின்றேன். ஒரு நாள் நான் ரோட்டிற்கு அல்லது சிறைக்கு செல்வேன் என்று.

**Ralf:-** இளைஞர்களைப் பராமரியுங்கள். நாமே இந் நாட்டின் எதிர்காலம்.

**Raiko:-** ஜேர்மனியில் இளைஞர்களுக்கு எதிர்காலம் இல்லை.

**?** அரசியல்வாதிகள் தோல்வியுறுவார்களா?

**Ramona:-** அவர்களுக்கு எங்களுடைய பிரச்சனைகள் ஒன்றும் விளங்குவதில்லை. அவர்கள் நிர்வாகத்தில் மூழ்கியுள்ளனர்.

**Ralf:-** முதல் தடவையாக Mecklen பகுதி உள்நாட்டு அமைச்சர் Kupfer பொலிசாரை உற்சாகப்படுத்தும் வகையில் இக்கலவரத்தில் "நன்கு செயல்பட்டீர்கள் இளைஞர்களே" என்று கூறிச் சென்றுள்ளார். அப்படியான ஒரு சனியன். இவரால் கமராவை நேரடியாகப்பார்க்க முடியாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**Paule:-** அரசியல்வாதிகளின் வாயை அகற்ற வேண்டும்.

**?** ஏன் உங்கள் கோபத்தினை பலவீனமானவர்களிடம் காட்டுகின்றீர்கள்?

**Ralf:-** எங்களுக்கு செய்வதற்கு ஒன்றும் இல்லாததால் இந்த சனியன் பிடித்த வேலைகளை செய்கின்றோம்.

**?** நீங்கள் மக்கள் மீதே யுத்தம் புரிகின்றீர்கள்.

**Raiko:-** ஆரம்பத்தில் இந்நோக்கத்திலேயே நடந்தது. ஜேர்மனிய கார்களை எரிப்பது முட்டாள்தனம்.

**?** வெளிநாட்டவர்களை எரிப்பது எவ்வகைப்பட்டது?

**Ralf:-** வெளிநாட்டவர்களை எரிப்பது முட்டாள்தனமற்றது.

**?** உங்களுக்குப் பொழுது போகவில்லை என்றால் என்ன செய்வீர்கள்?

**Paule:-** இடதுசாரிகளையும் செக்கோசெல வாக்கியர்களையும் சைபீரியாவிற்கு அனுப்புவோம்.

**Raiko:-** எல்லாமே விசர். நாங்களும் வெளிநாட்டவர்களாக வளர்ந்திருந்தால் எங்களுடைய வாழ்க்கை நன்றாக அமைந்திருக்கும்.

**Paule:-** ஆனால் நாங்கள் மேலும் வெளிநாட்டவர்களை வெளியேற்றுவதில் மும்முரமாக இருப்போம். எமது அமைதி என்பது கடைசி வெளிநாட்டவனை வெளியேற்றும்வரை கிடையாது.

**Ralf:- Mecklenburg** இல் இருக்கும் முழு வெளிநாட்டவர்களையும் வீடுவீடாக சென்று இழுத்தெறிவோம்.

---

**10** பக்கம் தொடர்

முஸ்லீம்கள் விழிப்புற்ற 84,85 காலப்பகுதியில் எழுதப்பட்ட சோலைக்கிளியின் கவிதைகள்கூட வாழ்வின்மீது நம்பிக்கையையும், சமூகத்துக்கு விழிப்புணர்வையும் ஏற்படுத்துவதாக அமையவில்லை. 85 இல் எழுதப்பட்ட **'வெள்ளை இரவு'** எனும் கவிதையில் மட்டும்,

***இனிவரும் இரவாச்சும்***
***இந்த மனிதனுக்காய்***
***வெள்ளை பூ சிக்கொண்டு வரட்டும் ........***

என்று சில வரிகள் ! . அதுவும் ஒருவித விரக்தித் தொனியுடன் வெளிப்படுகிறது. எனவே சோலைக்கிளி என்றுமே திகைத்துப்போன கவிஞனாக இல்லாமல் சமூகத்தில் விழிப்பை உண்டுபண்ணும் கவிஞனாக மாறவேண்டும். அதற்கு எம்.ஏ.நுஃமான் குறிப்பிடுவது போன்று 'இந்த உதிரிப்பாட்டில் நிலைகொண்ட அவர் இன்னும் மேலே போகவேண்டும். அவருடைய உணர்புலமும் உலகப்பார்வையும் இன்னும் விசாலமடைய வேண்டும்.

**6** பக்கம் தொடர்

அரசியல்வாதிகளும் பொருளாதாரவாதிகளும் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

இத் தேர்தல் முடிவடைந்து பெறுபேறுகள் வெளிவந்த அடுத்த கணமே பெரும்பான்மையான (65 சதவீத) சுவிற்சர்லாந்து மக்கள் மீண்டும் தேர்தலை நடாத்துமாறு அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர் என்பதை தொலைக்காட்சியும் பத்திரிகைகளும் தெரிவித்தன. அதுமட்டுமில்லாமல் மிக அண்மையில் சுவிற்சர்லாந்து பாராளுமன்றத்தின் முன்றலில் 6000 ற்கு மேற்பட்ட இளைஞர்கள் ஐரோப்பிய பொருளாதார சமூகத்தில் சுவிற்ச்ர்லாந்து இணைய வேண்டும் எனவும் சுவிற்சர்லாந்து ஐரோப்பிய சமூகத்தில் இல்லாதது 'பியரிற்கு அற்ககோல் இல்லாதது போன்றது' என தமக்கேற்றவாறு உவமானப்படுத்தினர்.

>> Die Schweiz ohne Europa <<
heisst es,
>> ist wie ein Bier ohne Alkohol.<<

..............................

www.tamilarangam.net

# இங்கேயும் சில,,,,,,,

லுசேர்ன் (Luzern) புகையிரத நிலையம் !
1.11.92 அன்று 'மனிதம்' இதழ்–18 இனை விற்கத் தொடங்கினோம். வழமைபோல் வெள்ளைத் தோல்களுக்கிடையில் தமிழ் முகங்களை தேடுவதும், 'மனிதம்' இனை நீட்டுவதுமாய் நாம் சுறுசுறுப்பானோம். வயதில் குறைந்த மெல்லிய தோற்றமுடைய இளைஞன் ஒருவன் மனிதம் இதழொன்றை வாங்கிவிட்டு,
" நீங்கள் புத்தகம் விற்க அனுமதி எடுத்திருக்கிறியளா? "என்று கேட்டார். எதிர்பார்க்காத கேள்விதான் !
"அண்ணை நான் TRO இலை ஒரு மெம்பர் (Member) இங்கை யாராவது புத்தகம், பேப்பர் (தமிழ்) விற்றால் தனக்கு அறிவிக்கச் சொல்லி 'சண்' அண்ணை சொன்னவர்". என்று மேலும் தொடர்ந்தான் அந்த இளைஞன்.
" TRO என்ன பொலிஸ் வேலையும் பார்க்குதா ? "
" இல்லை அண்ணை. எனக்குத் தெரியாது. நான் ஒரு 'மெம்பர்' எண்டதாலை நான் அவையள் சொன்னபடி செய்யிறன். உங்கடை ரெலிபோன் நம்பரைத் தாறியளோ ? "
" உங்களுக்கு அன்ரனைத் தெரியும்தானே. அவரிட்டை எங்கடை ரெலிபோன் நம்பர் இருக்கு. நாங்கள் இங்கைதான் நிற்பம். உங்கடை TRO ஏதாவது கதைக்க விரும்பினால் வந்து சந்திக்கச் சொல்லும் "
" அன்ரன் அண்ணையிடம் இருக்கா. அப்ப சரி – நான் வாறன் " என்றபடி அந்த இளைஞன் ரெலிபோன் பூத் இனுள் போனார்.

நாம் தொடர்ந்து புத்தக விநியோகத்தைச் செய்தோம். புலிகளின் பினாமி அமைப்பான TRO உத்தியோகபூர்வமாக தான் ஒரு சுயேச்சையான 'அகதிகள் புணர்வாழ்வுக் கழகமாக' சொல்லிக்கொள்வது எல்லோருக்கும் தெரிந்த ஒரு சாதாரண உண்மை. எனவே நாம் இரண்டையும் வேறுபிரித்து அறியவில்லை.

இரு பரிவுகளாக நாம் நின்றிருந்தோம். சிறிது நேரத்தின் பின் இன்னொருவர் வந்தார். டெனிம் Jacket உடன் வந்த அந்த நபர் சற்று ஆவேசத்துடன் காணப்பட்டார்.
" மனிதமா? ..... உது புளொட் புத்தகம் ..... "என்றபடி தீண்டக் கூடாத பொருளைக் கண்டவர்போல் விரைந்தார். சிறிது நேரத்தின்பின் மீண்டும் வந்த அதே இளைஞன்,
" புத்தகம் விற்கிறதுக்கு பொலிஸ் இடம் போய்ச் சொல்லப்போறன் ... "என்றபடி ரெலிபோன் பூத் இனுள் போனார்.

எதிர்பார்த்தபடி பொலிஸ் வந்தது. புத்தகம் விநியோகித்துக் கொண்டிருந்த மூன்று பெண்களையும் பொலிஸ் குறுக்கிட்டது.
" அனுமதியில்லாமல் புத்தகம் விற்கமுடியாது ... எங்களுக்குத் தெரியும் 2 Fr க்கு விற்கிறீர்கள் .... இது ஒரு அரசியல் புத்தகம் .... "என்றெல்லாம் பொலிசார் (டொச்சில்) கூறினர். இதுபற்றி நாம் அவர்களுக்கு விளங்கப்படுத்தினோம். நாம் கூறியவற்றையெல்லாம் நிராகரித்த பொலிசார் மூன்று பெண்களினதும் விபரங்களை மட்டுமே எடுத்தனர். சேர்ந்துநின்று புத்தகம் விற்றதுடன், இப்பிரச்சனையில் பொலிசாருடன் உரையாடிய ஆண்களின் விபரங்களை அவர்கள் கேட்கவேயில்லை. இந்நிகழ்வு 'காட்டிக்கொடுப்பு' இன் அப்பட்டமான வெளிப்பாடே ஆகும்.
" 3 பெண்கள் புத்தகம் விற்கிறார்கள் ..... அரசியல் புத்தகம் ....... 2 Fr ...... " இதுதான் பொலிசாருக்குக் கிடைத்த தகவலாக இருக்க வேண்டும் என ஊகிப்பதில் கஸ்டமேதுமில்லை.

ஏற்கனவே 2,3 முறை பொலிசார் (வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெவ்வேறு புகையிரத நிலையங்களில்) எம்மை எதேச்சையாகக் கண்டபோதெல்லாம் 'மனிதம்' பற்றி விசாரித்துவிட்டு .... பேசாமல் போய்விடுவார்கள். நாமும் தொடர்ந்து விற்போம். இம்முறை மட்டும் நிலைமை சற்று வித்தியாசமானதாக இருந்ததும் மேற்சொன்ன 'காட்டிக்கொடுப்புக்கு' ஆதாரமாகும்.

'புலிக்கு எதிர்ச்சொல் புளொட்' என்று மனப்பாடம் செய்துவிட்டு புலிகளை விமர்சிப்பவர்கள் புளொட் என்று இலகுவாக முடிவு செய்வது அப்பாவித்தனமானது. இதுபோலவே விமர்சனங்களை தமக்கெதிரான தாக்குதலாகக் காணும் புலிகளும், மனிதத்தை 'புலி எதிர்ப்பானதாகக்' காணவிழையும் புளொட் இனரும், 'புலிக்கு எதிர் புளொட்' என்ற சூத்திரமும் மனிதத்தை புளொட் சார்பான பத்திரிகையென சிலருக்கு பிரமையளித்து விடுகிறது. தொடர் பக்கம் 16



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அன்புள்ள தங்கச்சி

இளைய அப்துல்லா

சகோதரிக்கு,
மனமா ?
மனத்தை விடு !
அதைப்பற்றி இங்கு
கவலைப்படுபவர்கள்
யாருமில்லை.

நேசக்கரத்தின்
நேரிய பக்கங்கள்
இப்போது நீள்வதில்லை
நீ இருந்த
காலத்தைப் போலவல்ல ....

இப்போது எமது
வானம் கறுத்து விட்டது
இங்குள்ள துப்பாக்கிகளைப்போல ....
உள்ளங்களைப்போல ....

இனி –
நீ வரும்போது
சலவை இயந்திரம்
ஒன்று வாங்கி வா ....
தங்கச்சி !
உடைகளை அல்ல
மூளைகளைச் சலவை
செய்வதற்கு
சகோதரி !

பால் நிலவு எரியாமல்விட்டு
இன்றோடு ஆண்டுகள்
கணக்கில் இல்லை.

ஆம் !
கஜூர்னா பீச் , பொம்மை வெளி ,
இரயில்வே ஸ்டேசன் , முத்திரைச் சந்தை
ஏன் – வீரசிங்கம் மண்டபம் ,
கோட்டை , நியூ மார்க்கெட் என்று
இப்போது எல்லாமே சுடலைகளாக
மாற்றப்பட்டு விட்டன.

தங்கச்சி , கவலைப்படாதே
இத்தனை சுடலைகளுக்கும்
பிரேதம் எங்காலே என்றா கேட்கிறாய் ?
இங்குதான் மாவீரர்கள் , தேசத்துரோகிகள் என்று
பேசுபவர்கள் – கேட்பவர்கள் – பார்ப்பவர்கள்
எல்லோரும் முத்திரை குத்தப்படுகிறார்களே !
இவர்களே போதும்.

சகோதரி !
நீ வரும்போது என் ஆவி மிஞ்சினால்
அது நீயோ – நானோ –
முற்பிறப்பில் செய்த பலனாக இருக்கும்.

அன்புடன் ,
உன் அண்ணா
இலங்கை.

15 பக்கம் தொடர்

மாற்றுக் கருத்துக்களை மதிக்கும் –அவற்றைப் படித்து உண்மைகளை ஜீரணிக்கும்– மனோபாவம் இல்லாதவரை, கருத்துக்களை கருத்துரீதியில் சந்திக்கும் திராணி இல்லாதவரை இவ்வாறான குறுக்கு வழிகளை நாடவேண்டி ஏற்படுவது ஒன்றும் புதிதல்ல.

புலிகளுக்கு கருத்துக்களைச் சொல்ல உரிமை உள்ளதுபோலவே புளொட்டுக்கோ, மற்றைய இயக்கங்களுக்கோ, மனிதத்துக்கோ ..... எல்லோருக்கும் உரிமை உண்டு. கருத்துக்களைக் கருத்துக்களால் அணுகப் பழகிக்கொள்ள வேண்டும். மாறாக குறுக்கு வழிகளிலல்ல. இந்த அற்பத்தனமான வேலையைச் செய்தவர்கள் (புலிகளோ, TROவோ, தனிநபர்களோ) யாராக இருந்தாலும் மேற்சொன்ன உண்மையை மனங்கொள்ளட்டும்.

'மனிதம்' பத்திரிகையை எவரும் நிர்ப்பந்தத்தில் பெறவேண்டிய நிலைமை எதும் இல்லை. விரும்பியவர்கள் எடுக்கிறார்கள், மற்றவர்கள் வேண்டாம் என்றுவிட்டு போய்விடுகிறார்கள். அத்தோடு அகதிகள், அது .... இது என மனிதம் காசு சேர்ப்பதுமில்லை இந்த நிலையில்.... ரெலிபோன் பூத் இனுள் காசு போட்டு, பொலிசாருக்கு எடுத்து, டொச் மொழியில் சங்கடப்பட்டு சொல்ல வேண்டிய அவசியம் அப்படி எவருக்குத்தான் ஏற்பட்டதோ...!

– ஆசிரியர் குழு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



# மலையக மக்கள்

## — சில குறிப்புகள்

இன்று இலங்கையில் இனங்களுக்கிடையிலான முரண்பாடு கூர்மையடைந்து. அவர்கள் ஆளப்படும் இனத்தின் அடக்குமுறையிலிருந்து விடுபடுவதற்காக சுயநிர்ணய உரிமையும், தமக்கான நிர்வாக பரவலாக்கலையும் கோரி நிக்கின்றனர். இனப்பிரச்சனை முனைப்பான இக்காலகட்டத்தில் இந்நாட்டின் சகல தேசிய இனங்களிறதும் பிரச்சனைகள், நீண்டநோக்கில் தீர்க்கப்படவேண்டும். வடகிழக்கு தமிழ் மக்களுடைய பிரச்சனையும், முசுலீம் மக்களுடைய பிரச்சனையும் எரிகின்ற என்ற பிரச்சனைக்கு தள்ளப்பட்டிருப்பதால் அவர்கள் உடைய பிரச்சனைமாத்திரம் கணக்கிலெடுத்து, அரசோ அல்லது இந்நாட்டிலுள்ள சகல அரசியல் தாபனங்களும் செயல்பட்டு, மலையக மக்களின் பிரச்சினையை கணக்கிலெடுக்காவிட்டால், எதிர்காலத்தில் மேலும் ஒரு பிரச்சினையை கூட்டிக் கொள்வதாகவே அமையும். எனவேதான் இன்றைய இனப்பிரச்சினையில் மலையக மக்களின் இனப்பிரச்சினையும் ஒரு காத்திரமான பங்கை வகிக்கிறது.

ஏனைய இனங்கள் பற்றி தீர்வை மேற்கொள்ளும் போது இந்நாட்டில் வாழும் கிட்டத்தட்ட 10 இலட்சம் மக்களுக்கு மேற்பட்ட மலையக மக்களின் அபிலாசைகள் அவர்களது உணர்வுகள் மதிக்கப்படவேண்டும். மலையக மக்கள் ஏனைய தேசிய இனங்களைவிட சில விசேட அம்சங்களைக் கொண்டுள்ளனர். முதலாவது அவர்கள் தொழிலாளர்களை எண்பது வீதமாகக் கொண்ட தேசிய இனத்தவர்கள். இரண்டாவது இந்த நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்றுமதி வருமானத்தில் 50%த்திற்கு மேல் ஈட்டித்தரும் பெருந்தோட்ட தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளரைக் கொண்ட மக்கள் பிரிவினராவர். மூன்றாவது இலங்கையிலுள்ள தேசிய இனங்களைவிட பிரஜாஉரிமை பிரச்சனை, தமக்கென ஓரங்குல நிலம்கூட இல்லாத, 90%துக்கும் மேற்பட்ட மக்கள் கூட்டத்தைக் கொண்ட அடிப்படை உரிமைதானும் புறக்கணிக்கப்பட்டுள்ள மக்கள் இந்த மக்களே, என்பது வாதவிவாதங்களுக்கு அப்பாற்பட்டது.

ஆகவே இந்த ஆக்கம் அவர்களது தேசிய இன அடையாளத்தை வலியுறுத்தும் நோக்கிலும், அவர்களது பிரச்சினைக்குரிய கவனம் செலுத்தப்படவேண்டும், என்ற நோக்கிலும் முன்வைக்கப்படுகின்றது. மலையக மக்களுக்கு ஒரு பாரம்பரிய பிரதேசமுண்டு. அவர்கள் வாழும் செறிவான பகுதியினை இணைத்து அவர்களுக்கான ஒரு நிர்வாக அலகை ஏற்படுத்துவதன் மூலமே அவர்கள் தமது அடிப்படை உரிமையையும், பிரதேச ஒருமைப்பாட்டினையும் தனித்துவமான கலாச்சாரத்தையும் பேணமுடியும். மலையக மக்களுக்கான பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கமுடியும்.

www.tamilarangam.net

**இலங்கை பல தேசிய இனங்கள் வாழுகின்ற ஒரு நாடாகும்.**

இலங்கை பல் மொழிகளைப் பேசுகின்ற பல கலாச்சார தனித்துவம் கொண்ட, பல தேசிய இனங்கள் வாழுகின்ற நாடாகும். இக்கருத்து மிக அண்மையில்தான் அதுவும் பல தசாப்த போராட்டங்களின் பின் சிறுபான்மை தேசிய இனங்கள் பல்வேறு இன்னல்களுக்கும், பல இனக் கலவரங்களுக்கும் முகம் கொடுத்தபின் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் மலையக மக்களைப் பொறுத்தவரையில் ஒரு தேசிய இனமாக அங்கீகரிப்பதில் இன்னும் தயக்கம் காட்டப்படுகின்றது. அதாவது சிறுபான்மை தேசிய இனங்களில் வடக்கு கிழக்கு தமிழ் மக்களினதும், முசுலீம் மக்களினதும் தனித்துவம் கொள்கை அளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மலையக மக்களைப் பொறுத்த வரையில் எந்த விதமான நிலைப்பாடும் கிடையாது.

வடகிழக்கு தமிழ் சிறுபான்மை தேசிய இனத்தினதும், முசுலீம் சிறுபான்மை இனத்தினதும் தனித்துவமான கலாச்சாரம், அவர்களுக்கான பாரம்பரிய பிரதேசம், அவர்களுக்கான இனத்துவ அடையாளம், கொள்கை அளவிலானது ஏற்கப்பட்டுள்ளது. அவர்கள் தம்மைத்தாமே நிர்வகிக்கின்ற அதிகாரப் பரவலாக்களைக் கொண்ட நிர்வாக அலகுகள் பற்றி சிந்திக்கப்படுகின்றது. சிறுபான்மை இனங்களினது பிரச்சினை பல தசாப்தங்களாக இழுபறிப்பட்டு வன்முறை நிலைக்க தள்ளப்பட்டதும்தான், இந்த ஞானம்ஆட்சியாளர்களுக்கும் மற்றும் அரசியல் வாதிகளுக்கும் பிறந்துள்ளது. இந்த நிலையிலேயே இலங்கையின் ஒட்டு மொத்தமான நிலைகளைக் கருத்திற் கொண்டு பரச்பரம் ஒவ்வொரு தேசிய இனத்தினதும் தனித்துவம் அங்கீகரிக்கப்பட்டு தூர நோக்கில் இனப்பிரச்சனைக்கான தீர்வு மேற்கொள்ளல்படல் வேண்டும். இல்லாவிடின் இது எதிர்காலத்தில் இனப்பிரச்சினையை மேலும் சிக்கலாக்கிவிடும். இனமுரண்பாடு கூர்மை அடைந்துள்ள காலகட்டத்தில் மிகக்கறைந்த எண்ணிக்கையை அதாவது ஜனத் தொகையை கொண்ட தேசிய சிறுபான்மையினம் வேடர், பேகர் போன்றவர்கள் தவிர்ந்த இந்நாட்டின் சிறுபான்மை தேசிய இனங்களாகிய வடக்கு கிழக்கு தமிழ் மக்கள், முசுலீம் மக்கள், மலையக மக்கள் ஆகியோரது சகல பிரச்சினைகளும் கவனத்தில் எடுக்கப்படல் வேண்டும்.

இலங்கை பல தேசிய இனங்களைக் கொண்ட ஒரு நாடாகும். இங்கு சிங்கள மக்கள் சனத்தொகையில் 75%த்தினர் ஆவர். வடக்கு கிழக்கு மக்கள் 12.6%தைக் கொண்டு காணப்படுகின்றனர். முசுலீம் மக்கள் 7.8%க் கொண்டவர்களாக விளங்குகின்றனர். ஏனையோர் 8%மாக விளங்குகின்றனர்.

மிக அண்மையில் இந்திய இலங்கை அரசாங்கங்களால் மிகநீண்ட காலமாக இயக்கங்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தி மேற்கொள்ளப்பட்ட 1987ம் ஆண்டு இலங்கை ஒப்பந்தம் கூட பல இனமக்கள் பல கலாச்சாரத்தைக்கொண்ட அவர்களுக்கே உரித்தான பாரம்பரிய பிரதேசத்துடன் வடக்கு தமிழ் மக்களும், முசுலீம் மக்களும் வாழுவதாக ஒத்துக் கொண்டுள்ளது. ஆனால் நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்ட இந்த ஒப்பந்தம் கூட மலையக மக்களைப் புறக்கணித்து விட்டது. அவர்களைப்பற்றி ஒப்பந்தத்தில் ஒரு வார்த்தைகூட எழுதப்படவில்லை. மறுவார்த்தையில் கூறுவதானால் அவர்கள் ஒரு சிறுபான்மை தேசிய இனம் என்பதை அங்கீகரிக்க மறுத்துள்ளது. இதற்கு காரணம் இந்த மக்களின் பிரச்சினை இன்னும் விசுவரூபம் எடுக்காததா அல்லது அம்மக்கள் ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டுள்ளதா எனவே இலங்கையின் இனப்பிரச்சினைக்காக சுமூகமான தீர்வு இங்குள்ள சகல சிறுபான்மை தேசிய இனங்களிலும் அதாவது வடக்கு கிழக்கு தமிழ் மக்கள், முசுலீம் மக்கள், மலையக மக்கள் ஆகியோரின் தனித்துவம் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சமத்துவமாக மதிக்கப்பட்டு அவர்கள் தம்மைத்தாமே நிர்வகிக்கும் ஒரு நிர்வாக பிரிவை அங்கீகரிப்பதற் மூலமே இப்பிரச்சினைக்கான அர்த்தமுள்ள நிரந்தர தீர்வு கிட்டும்.

**இலங்கையிலுள்ள சகல தேசிய இனங்களும் வந்தேறு குடிகளே.**

இலங்கையிலே தேசிய இனங்களினது உருவாக்கம் பெருந்தோட்டப் பொருளாதாரம் வளர்ச்சியோடேயே ஆரம்பிக்கிறது. இப்பெருந்தோட்டத்தின் விளைவாகவே இங்கு முதலாளித்துவம் தோன்றி வளரத்தொடங்கி உள்ளது. பிரித்தானிய ஏகாதி பத்தியத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட பெருந்தோட்டத்தின் விளைவாகவே இலங்கையிலேயே முதலாளித்துவமும் தோட்ட தொழிளார்களும் அறிமுகப்படுத்தப்பட்டனர். பெருந்தோட்டத் தொழிலாளரை பெரும்பான்மையாகக் கொண்ட மலையக மக்கள், வடக்கு கிழக்கு தமிழ் மக்கள், முசுலீம் மக்கள், சிங்கள மக்கள் ஆகிய நான்கு இனங்களும் இந்த முதலாளித்துவ அமைப்பின் தோற்றத்தோடேயே அதாவது நிலப்பிரபுத்துவ அமைப்பிலிருந்து, முதலாளித்துவ சமூக அமைப்பு உருப்பெற்ற இந்த புறச்சூழலிலேயே தேசிய இனங்களின் மலையக மக்கள் மாத்திரம் ஏன் ஒரு சிறுபான்மை தேசிய இனமாகக்கணிக்கக் கூடாது.

இந்தியாவிலிருந்து வந்து குடியேறிய ஏனைய தேசிய இனங்களாகிய சிங்கள மக்களும், வடகிழக்கு தமிழ் மக்களும் ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கப்படக் கூடுமானால் ஏன் மலையக மக்கள் அந்தக்கண்ணோட்டத்தால் பார்க்கப்படக்கூடாது. மலையகமக்கள் ஒருநூற்றாண்டு கால வரலாறு கொண்டிருப்பதால் மற்ற இனங்களுக்குரிய

www.tamilarangam.net

உரிமைகள் இவர்களுக்கு செல்லுப்படியாகாதா ? தேசிய இனங்களைப் பொறுத்தவரையில் அவை சிறியதோ அல்லது பெரியதோ இவை உரிமைகளில் சமமானவை. ஒரு நாட்டிலிருந்து வெவ்வேறுபட்ட காலகட்டங்களில் முன்னும் பின்னும் வந்து குடியேறியவர்கள் என்பதால் அவர்கள் தேசிய இனமாக வளரவில்லை என்று வாதாட முடியாது. மாறாக அவர்கள் தனித்துவமான கலாச்சாரம் பாரம்பரிய பிரதேசம் இவை எல்லாவற்றிலும் மேலாக அவர்கள் தாம் ஒரு சிறுபான்மைத் தேசிய இனம் என்ற உணர்வைக் கொண்டுள்ளனரா என்பதே முக்கியமானது.

இலங்கையில் பூர்வீகக் குடிகள் வேடுவரே. இவர்களைத்தவிர சகலரும் இலங்கையின் பல்வேறு காலகட்டங்களில் வந்து குடியேறியவர்களே என்பது வரலாறு. இவர்களில் அண்மையில் வந்து குடியேறியவர்கள் மலையக மக்கள் என்பதால் அவர்களுக்கான இனத்துவ அடையாளம் மறுக்கப்படலாகாது. உலகில் எங்கெங்கெல்லாம் பெருந்தோட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோ அங்கெல்லாம் உழைப்புக்காக சென்ற பல்வேறு இன மக்கள் தாம் சென்ற காலனித்துவ நாடுகளில் அந்நாடுகளில் தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட்டு அந்நாட்டு தேசிய நீரோட்டத்தில் கலந்து விட்டனர்.

மலையக மக்களின் வருகை 19ம் நூற்றாண்டில் ஆரம்பித்து இன்று அவர்களது முன்றாவது, நான்காவது தலைமுறை மலையகத்தில் வாழ்கின்றனர். இவர்களின் மூதாதையர், உறவினர் தமிழ்நாட்டில் வாழ்ந்தாலும் புதிய பரம்பரையினர் மலையகத்தை தாயகமாகவே கொண்டு வாழ்கின்றனர். இதனை பின்வரும் புள்ளிவிபரம் தெளிவாகக் காட்டுகின்றது. ஒருகட்டத்தில் அவர்கள் இலங்கைவந்து இந்தியா திரும்பிப் போகும் நிலை காணப்பட்டாலும் ஒரு கட்டத்தின் பின் அவர்கள் இந்த மண்ணோடு மண்ணாக இணைந்து விட்டனர் என்பதை கீழ்காட்டப்பட்ட புள்ளிவிபரம் காட்டுகின்றது. எனவே இவர்கள் விருப்பத்திற்கு மாறாக இவர்களை இந்நாட்டுப்பிரஜையாக ஏற்றுக்கொள்வதில் காட்டப்படும் தயக்கமோ அல்லது அங்கீகரிக்க மறுப்பதோ அடிப்படை மனித உரிமை மீறலாகும்.

இந்த புள்ளி விபரங்கள் மலையக மக்கள் இந்தியாவில் இருந்து வந்து இங்கு நிரந்தரமாகவும், மலையக பகுதிகளில் நிலைத்து வாழ்வதையே காட்டுகின்றது. அத்துடன் 1927இல் இருந்து வந்த குடியேறியவர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் இம்மண்ணை தமது தாயகமாக கருதிவிட்டனர். என்பதையே இது குறிக்கிறது. 1928 டொனமூர் குழுவினரின் அறிக்கை இலங்கையில் வாழும் தோட்டத் தொழிலாளரின் 40% - 50%த்தினர் நிரந்தரமாக வாழ்பவர்கள் என்று சுட்டிக்காட்டி உள்ளது. 1938இல் ஜெக்சன் அறிக்கை இதனை 60%தும் என்று கூறியுள்ளது. சோல்பரிக்குழு 80% என்று கூறியுள்ளது. ஆகவே மலையக மக்கள்

மலையக மக்களின் குடியேற்ற அதிகரிப்பு.

இந்திய வம்சாவழி என்று அழைக்கப்படும் மலையக மக்கள்.

அட்டவணை - I

| ஆண்டு | தொகை |
|---|---|
| 1827 | 10.000 |
| 1847 | 50.000 |
| 1877 | 146 |
| 1901 | 457.765 |
| 1921 | 493.844 |
| 1931 | 692.540 |
| 1946 | 6,658,853 |
| 1961 | 9,49,684 |
| 1971 | 9,87,785 |
| 1981 | 8,25,253 |

மூலம்: சொர்ணவல்லி பத்மநாப ஐயர்

பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளால் என்ன நோக்கத்திற்காக கொண்டு வரப்பட்டனரோ அது ஒருபுறமிருக்க இலங்கையின் ஏனைய தேசிய இனங்கள் போன்றே இங்கு வந்து குடியேறி, 2000 அடிக்கும் மேற்பட்ட காட்டுப்பிரதேசத்தை அழித்து அதனை செல்வம் கொழிக்கும் பூமியாக மாத்திரமல்ல, அதனைத் தமது தாயகமாகக்கருதி ஒரு நூற்றாண்டுக்குமேல் வாழ்ந்து விட்டனர்.

**மலையக மக்கள் இலங்கையில் இரண்டாவது சிறுபான்மை தேசிய இனமாகத் திகழ்ந்தனர்.**

இன்று வடக்கு கிழக்கு தமிழ் மக்களினதும், முசுலீம் மக்களினதும் பிரச்சினை முனைப்பாக காணப்படுகின்றது. தேசிய ரீதியில் மாத்திரமல்ல, சர்வதேச கவனத்தையும் ஈர்த்துள்ளது. இப்பிரச்சினை தீர்க்கும்படி சர்வதேச சமூகங்கள் வலியுறுத்துமளவிற்கு நிலைமை வளர்ச்சியடைந்துள்ளது. பல தசாப்தங்களாக இழுபடும் இப்பிரச்சினை வடகிழக்கு மக்களினதும் தனித்துவம் அங்கீகரிக்கப்படுவதன் மூலமும் அவர்களுக்கான நிர்வாகப் பிரிவினை ஏற்படுத்துவதன்மூலமும் அவர்களது சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டு அம்மக்களின் அபிலாசைகளுக்கு ஏற்ப தீர்த்து வைக்கப்படவேண்டும். அதே நேரத்தில் மலையக மக்களின் பிரச்சினை முனைப்பாக இல்லாதபடியால் அதனைப்புறக்கணிப்பது நீண்டகால நோக்கில் சிக்கலை ஏற்படுத்துவதாக அமையும்.

www.tamilarangam.net

அவர்கள் அடிப்படை உரிமைகள்தானும் புறக்கணிக்கப்பட்ட நிலையிலேயே வாழ்கின்றார்கள். அவர்கள் கைகளால் உருவாக்கப்பட்ட மலையகத்திலேயே அவர்கள் அந்நியமாக்கப்பட்டுள்ளார்கள். ஓரங்குல நிலந்தானும் வழங்கப்படாததன் மூலம் அவர்கள் உருவாக்கிய மலையகத்தியேயே ஒரு சிறு வீட்டைத்தானும் சொந்தமாக வைத்திருக்கும் அடிப்படை உரிமையை, இலங்கையில் இதுவரை காலமும் மாறிமாறி வந்த அரசாங்கங்களும், அரசும் இல்லாதொழித்துள்ளது. அது மட்டுமன்றி 1948ம் ஆண்டு பிரஜாவுரிமைச்சட்டம் இந்நாட்டில் வாழ்வதற்கு இருந்த உரிமையை பறித்து விட்டது.

இந்த உரிமைப்பறிப்பு இன்றுவரையில் பல பிரஜாவுரிமைகள்சட்டம் நிறைவேற்றப்பட்டாலும் நவீன

புள்ளிவிபர அட்டவனை 11இந்திய வம்சாவளி மக்கள் என்று அழைக்கப்படும் மலையக மக்கள் 1881ம் ஆண்டிலிருந்து1931 வரை பெரும்பான்மை தேசிய இனமாகிய சிங்கள மக்களுக்கு அடுத்த பெரும்பான்மையாக வாழ்வதைக் சுட்டிக் காட்டுகிறது. 1953லிருந்து 1971ம் ஆண்டுவரை மலையக மக்கள், முசலீம் மக்களைவிட சனத்தொகையில் கூடுதலாக இருந்ததன் மூலம் இலங்கையின் மூன்றாவது சிறுபான்மை தேசிய இனமாக வாழ்ந்து வந்தனர். 1981ம் ஆண்டு புள்ளிவிபரத்தின்படி பல திட்டமிட்ட ஆள்கடத்தல் ஒப்பந்தங்கள் மூலமும் திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலம் 5.5% என்ற அடிப்படையில் இலங்கையின் 4ஆவது நிலையிலுள்ள சிறுபான்மை தேசிய இனம் என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இது ஒருவகையான திட்டமிட்ட இன ஒழிப்பு நடவடிக்கை என்றே கூறவேண்டும். இந்த மக்கள் அடிப்படை

1881 — 1981 வரை
சனத்தொகை அமைப்பில் இனரீதியான, விகிதாசார ரீதியான பரம்பல் அட்டவணை II

| ஆண்டு | சனத்தொகை ஆயிரங்கள் | சிங்களவர் | இலங்கை தமிழர் | இந்திய தமிழர் | முஸ்லீம் | பறங்கியர் | மலே | வேறு |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1881 | 2759.8 | 66.9 | | 24.9 | 6.7 | .7 | 0.3 | 0.5 |
| 1881 | 3007.8 | 67.9 | | 24.1 | 6.5 | .7 | 0.3 | 0.5 |
| 1901 | 3566.0 | 65.4 | | 26.7 | 6.4 | .6 | 0.3 | 0.6 |
| 1901 | 4106.4 | 66.1 | 12.5 | 12.9 | 6.5 | .7 | 0.3 | 0.8 |
| 1921 | 4898.6 | 67.1 | 11.5 | 13.4 | 6.3 | .6 | 0.3 | 0.8 |
| 1931 | 5306.9 | 65.5 | 11.3 | 15.4 | 6.1 | .6 | 0.3 | 0.8 |
| 1946 | 6657.3 | 69.4 | 10.9 | 11.7 | 6.2 | .6 | 0.3 | 0.5 |
| 1953 | 8097.9 | 69.0 | 10.9 | 12. | 6.3 | .6 | 0.3 | 0.1 |
| 1963 | 1582.0 | 71.0 | 11. | 10.6 | 6.5 | .4 | 0.3 | 0.2 |
| 1971 | 12698.8 | 72.0 | 11.2 | 9.3 | 6.7 | .4 | 0.3 | 0.1 |
| 1981 | 14850.0 | 74.0 | 12.6 | 5.5 | 7.1 | .3 | 0.3 | 0.2 |

மூலம் சனத்தொகை புள்ளிவிபரத் திணைக்களம்

பாணியில் அவர்களை ஒரு அடிமை நிலையில் அடிப்படை உரிமைகள் இழந்த நிலையில் வைத்துள்ளது. ஆனால் இன்றைய நிலை என்ன. இலங்கையின் சனத்தொகை புள்ளிவிபரங்களை கடந்த காலத்தில் எடுத்து நோக்கும் போது மலையக மக்கள் இந் நாட்டின் ஏனைய சிறுபான்மை தேசிய இனங்களைவிட சனத்தொகை அடிப்படையில் அவர்கள் வாக்குரிமை பறிக்கப்பட்டதாலும் பல்வேறு நாடுகடத்தல் ஒப்பந்தங்களாலும் சிறுபான்மை தேசிய இனங்களின் கடைசித்தானத்திற்கு அவர்களைத்தள்ளிவிட்டது. இது அவர்களை இந்நாட்டு சிறுபான்மை தேசிய இனமாக அங்கீகரிக்கவேண்டிவரும் என்று எதிர்பார்த்து, திட்டமிட்ட அடிப்படையில் அவர்களை இனரீதியில் அழிப்பதற்கும், அவர்களை திட்டமிட்டு சிறுபான்மைத்தேசிய இனம் என்று வளர்ப்பதை தடுப்பதற்குமான கபடநாடகமாகும்.

உரிமைகள் மறுக்கப்பட்டதன் மூலம் ஒரு புறம் நாடுகடத்தல், மற்றும் ஒப்பந்தங்கள், அரசு முன்னின்று நடத்திய திட்டமிடப்பட்ட குடியேற்றங்கள் மூலம் இனரீதியாகவும் அவர்களது பலம் குறைக்கப்பட்டுள்ளது.

**மலையக தமிழ் மக்களுக்கு சகல உரிமைகளும் வழங்கப்படும் என்ற உத்தரவாதத்தின் பேரிலேயே அழைத்து வந்தனர்.**

இந்தியாவிலிருந்து பிரித்தானியரால் இலங்கையில் பெருந்தோட்டத்தில் வேலை செய்வதற்காக அழைத்து வரப்பட்ட மலையக மக்களின் வரலாற்றை ஆழமாகப்பார்த்தால் அவர்கள் இந்நாட்டில் பூரண உரிமையுடன் வாழவேண்டியவர்கள் என்பதில்

www.tamilarangam.net

# எழுந்து வரும் எமது காலம்

தமயந்தி

கரைவந்த பேரலை
கடலுள் மீளவும்
மரம் மொய்த்த இலைகளும்
சருகாய் காற்றினில்.
குவிந்த கருமுகில்களும்
மழையாய் கடலினில்.

தூற்றிய பதரோ
காற்றில் மிதக்க,
குவிந்த அரிசியோ
மறைந்து போனது.

விடியும் என்று காத்துக் கிடக்க,
வெளிச்சம் கொஞ்சம் மட்டும் வந்தது.
சூரியன் எங்கே என்று தேட
பெருமுகிலொன்று கையை விரித்தது.

சோற்றுப் பானை அழுதுவடிய
தண்ணீர்க் குடமும் வற்றிப் போனது.
யௌவனம் பாடும் புலவர் படைக்கு
பசித்த மனிதன் கருவாய் ஆனான்.

பாடிப் பாடிப் புலவர் களைக்க
பசித்த மனிதன் மடிந்து போனான்
சவத்தை நீட்டி நிமிர்த்திக் கிடத்தி
புதிய மரணக் கவிதை தூறு.

சென்ற அலைகள் மீள வருக
உதிர்ந்த இலைகள் துளிர்த்தே எழுக
மழைநீர் பூமி நனைக்கப் பொழிக
பெருமுகில் விலத்திச் சூரியன் எழுக.

அழுது வடிந்த சோற்றுப் பானை
சிரிக்குங்காலம் எமக்கே சொந்தம்
எமது பசியை விலையாய்ப் பேசும்
கள்ளப் புலவர் ஓடி மறைக.

நிலத்தை உழுது விதைத்தவர் நாங்கள்
அறுவடை செய்ய உமக்கேதுரிமை ?
வரப்பை விட்டு வெளியே போங்கள்
எங்கள் பூமி எமக்கே சொந்தம்.

---

ஐயமில்லை. பிரித்தானியர் தமது குடியேற்ற நாடுகளில் வேலை செய்வதற்காக தமது ஒரு குடியேற்றத்திலிருந்து இன்னோரு குடியேற்ற நாட்டுக்கு தொழிலாளர்களை அழைத்துச் சென்றபோது அத் தொழிலாளர்கள் எந்தெந்த நாட்டிற்கு அழைத்துச் செல்லப்படுகிறார்களோ அந்தநாட்டிலுள்ள தேசிய இனங்களைப்போன்றே அவர்களுக்கும் சகல அடிப்படை உரிமைகளும் வழங்கப்படுவதோடு, எந்த விதமான பாராபட்சமும் காட்டப்பட மாட்டாது என்ற உறுதியை வழங்கினர்.

இதன் அடிப்படையிலேயே 1931ம் ஆண்டிற்கு முன்னைய சட்ட நிருபண, நிர்வாக சபைகளிலும் 1931ம் ஆண்டு டொனமூர் சிபாரிசின் பேரில் நடைபெற்ற முதலாவது தேர்தலிலும் 1936ம் ஆண்டு தேர்தலிலும் மலையக மக்கள் வாக்களிக்கும் உரிமை பெற்றனர். நுவரெலியா, தலவாக்கலை, நாவலப்பிட்டிய, மல்கெலியா, அலுத்நுவர, பதுளை, கற்றன், ஆகிய 7 தேர்தல் தொகுதிகளிலே நேரடியாக தமது பிரதிநிதிகளை தெரிவுசெய்ய முடிந்தது. இத் தேர்தல்களின் படி 1931ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் கற்றன் தேர்தல் தொகுதியில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பெரியசுந்தரம் தொழிலாளர் கைத்தொழில் அமைச்சராகவும் இருந்தார். அத்துடன் எல். வைத்திலிங்கம் நடேசர் ஐயர், ஜீ.ஆர். மேத்த, கே. ராஜலிங்கம், ம.ராமனுஜம், எல். எம். சுப்பையா, எல். தொண்டமான், வேலுப்பிள்ளை போன்றோர் இத் தேர்தல்களில் தலவாக்கொல்லை, கற்றன், மல்கெலியா, நுவரெலியா., அலுத்துவர, பதுளை, ஆகிய தேர்தல் தொகுதியில் இருந்து தெரிவு செய்யப்பட்டனர்.

இத் தேர்தல்களில் மலையக மக்கள் மும்மரமாக ஈடுபட்டு தம் பிரதிநிதிகளை தெரிந்தனர். இவ்விதம் இந்நாட்டில் பெருந்தோட்டத் தொழிலில் ஈடுவடுத்துவதற்காக அழைத்து வரப்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் பெற்றிருந்த வாக்குரிமை 1948ம் ஆண்டு பிரஜாவுரிமைச்சட்டத்தின்படி பறிக்கப்பட்டது. இது இந்த நூற்றாண்டில் இம்மக்களுக்கு இழைக்கப்பட்ட மாபெரும் அநீதியாகும். இதுவே இம் மக்களை திட்டமிடப்பட்ட அடிப்படையில் சகல உரிமைகளும் பெற்ற ஒரு தேசிய இனமாக சுயமாக வளர்ப்பதற்கு மாபெரும் தடையாக இருந்தது. ஆகவே இந்த அடிப்படையில் இந்த நாட்டில் ஏனைய தேசிய இனங்களுக்கு எவ்விதம் தம்மைத்தாமே நிர்வகிக்கும் உரிமை இருக்கிறதோ அந்த உரிமை மலையக மக்களுக்கும் உண்டு. அது மாகாண சபையா, சுயாட்சியா பிரிவா அல்லது வேறு எதுவோ அதை மலையக மக்களே தீர்மானிக்க வேண்டும். இவ்விதம் அமையாமல் அதனை தீர்மானிக்கும் உரிமை வேறு எந்த தேசிய இனத்துக்கும் கிடையாது.#

வளரும்............

லோரன்ஸ் (இலங்கை)

**சினிமா:**

# முதல் குரல்

ராகவன்



"கோயிலில் குழப்பம் விளைவித்தேன். கோயில்கள் கூடாதென்பதற்காக அல்ல. கோயில்கள் கொடியவர்களின் கூடாரமாகி விடக் கூடாதென்பதற்காக" — பராசக்தி).

"சுயநிர்ணய உரிமை"

"காவல் துறையா? கூலிப்படையா?"
"மீண்டும் ஓர் சுதந்திரப்போர் வருவது உறுதி"
தமிழகத்தில் நிலவும் தடாசட்டம், புலிகள் பூச்சாண்டி, எழுச்சிபெற்று வரும் தன்னுரிமைப் போர் போன்றவற்றின் வெளிப்பாடுகள் தமிழ்த் திரைப்படங்களிலும் எதிரொலிக்கத் தொடங்கியுள்ளது. அதன் ஆரம்பமாக வெளிவந்திருக்கும் "முதல் குரல்" படத்தில் இடம் பெற்ற கோசங்கள்தான் மேலே நீங்கள் பார்த்தது. என்ன? சுயநிர்ணய உரிமைபற்றி தமிழ்படத்தில் குரல் எழும்புகிறதா?" நீங்கள் ஆச்சரியப்படுவது புரிகிறது. அந்த அளவுக்கு இந்தப்பிரச்சனை படத்தில் முக்கியத்துவம் பெறவில்லையாயினும் தமிழ்ப்படத்தின் தன்மையை அறிய இதை உதாரணமாக கொள்ளலாம். நிலவுகிற கால நேர அரசியல் நிலமைகளுக்கு தகவமைந்தாற்போல் சுதந்திரம், புரட்சி,பகுத்தறிவு, சீர்திருத்தம் என எடுத்துக் கொள்ளும் தமிழ் சினிமா சுயநிர்ணயஉரிமை தன்னுரிமை போன்றவற்றையும் எடுத்துக் கொள்வதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. ஆனால் ஜனநாயகத்தின் உயிர்நாடி என்று கருதப்படும் பத்திரிகைத்துறையை, பத்திரிகையாளனை தனக்கு ஏற்ற விதத்தில் நெளிவு சுளிவுகளுக்கூடாக நகர்த்தி கொச்சைப் படுத்திவிட்டார்கள் என்பதுதான் சகிக்க முடியாதது. இதில் வரும் முக்கிய கதா பாத்திரமான பத்திரிகையாளன் வெறும் சினிமாத்தனம் கலந்த பத்திரிகையாளனாக சித்தரிக்கப்படுவதால் உண்மையான பத்திரிகையாளன்/பத்திரிகை எதிர் கொள்ளும் இடர்களையும் அடக்குமுறைகளையும் ரசிகர்கள் பார்வையில் இருந்து மறைத்து விடுகிறார்கள். சுருக்கமாகச் சொன்னால் உண்மையான பத்திரிகையாளனின் குரல் மறைக்கப்பட்டு சினிமாத்தனம் கலந்த சுயநல அரசியல் குரலாக ஒலித்திருக்கிறது "முதல்குரல்"

தமிழக அரசியலுக்கும் தமிழ் சினிமாவுக்கும் உள்ள வெளிப்படையான ஒற்றுமை இரண்டுமே மாசாலா என்பதுதான். அரசியலில் எப்படி தெளிவற்று கொள்கையற்று பதவியை மட்டுமே நோக்கமாகக்கொண்டு காய்நகர்த்தலைச் செய்கிறார்களோ அப்படியே சினிமாவிலும் வெற்றியை மட்டும் நோக்கமாகக் கொண்டு ஒவ்வொரு அடியையும் நகர்த்துவார்கள். என்ன சொல்கிறார்கள், தாம் சொல்வது தமக்கே முரணற்று காணப்படுகிறதா? என்பது பற்றியெல்லாம் அவர்களுக்கு அக்கறையில்லை. அதற்கு சிறந்த உதாரணம் முதல்குரல். அடிபட்டு தலைமறைவாக இருக்கும் ஒரு தீவிர வாதியை பத்திரிகையாளன் சந்தித்துக் கேட்கிறான் நீங்கள் தீவிரவாதிகளா? என்று அதற்கு அவன் இல்லை என்கிறான். "அப்படியானால் புரட்சிக்காரர்களா?" இல்லை என்கிறான். பொலீசார் தேடுவதால் தலை மறைவாக இருப்பதாக கூறுகிறான். ஆனால் இவனின் தலைவனோ பிறிதோர் சந்தர்ப்பத்தில் தாங்கள் புரட்சிக்காரர்கள் என தன்னை சந்திக்கும் பெண் அரசியல் வாதியிடம் சவால் விடுகிறான். வேலுத்தம்பி என்னும் தீவிரவாதிகளின் தலைவன் நீதிக்காகப் போராடினான் அநியாயமாக கொல்லப்பட்டான் என வாதிடும் கதாநாயகன் பிறிதோர் சர்ந்தப்பத்தில் "அவன் ஆயுதத்தை நம்பினான் அழிந்து போனான் நான் அகிம்சையை நம்புகிறவன்." என அவனை கொச்சைப்படுத்தவும் தயங்கவில்லை. இவர்களின்பார்வையில் அந்த இளைஞர்கள் நியாயத்துக்காகப் போராடுபவர்களாக , புரட்சிக்காரர்களாக , ஆயுதத்தை நம்பி அழிந்துபோபவர்களாக , பயங்கரவாதிகளாக சந்தர்ப்பத்துக்கு ஏற்றமாதிரி தோற்றமளிப்பார்கள். ஆனால் கதாநாயகன் மட்டும் தனித்து நின்று நியாயத்துக்காக போராடி இறுதியில் சமூக விரோதிகளை அழித்தும் விடுவான். அப்போதும் கூட அகிம்சைக்காகவேகுரல்கொடுப்பான்.



www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தப்படத்தில் கவனிக்க வேண்டிய முக்கியமான அம்சம் பாத்திரங்கள் சித்தரிக்கப்பட்டிருக்கும் விதமும், வசனங்கள் எழுதப்பட்டிருக்கும் விதமுமாகும். இவை ஜெயலலிதாவின் இன்றைய நிலமைகளை சித்தரிப்பதாகவே அமைந்துள்ளது. ஆணவமும், தலைக்கனமும் சர்வாதிகாரத்தன்மையும் பொருந்திய பெண் அரசியல்வாதியின் பாத்திரம் ஜெயலலிதாவையே சித்தரிக்கிறது. போதாக்குறைக்கு சாரயவியாபாரியுடன் கூட்டு வேறு.
"நீங்க பத்திரிகைக்காறங்கள தவறா எடை போட்டிருக்கீங்க. அவங்க உங்க வீட்டு வாசல்ல தவம் கிடக்கிறது, நீங்க விடுவீங்களே அதிரடி அறிக்கைள், பரபரப்பான செய்திகள் அத வாங்கிறதுக்குத்தான். ஆனா எனக்கு அந்த மாதிரி த்திரிலிங் ஜோர்னலிசத்திலெல்லாம் நம்பிக்கை இல்லை."
எனச்சொல்வதும் - இது பத்திரிகைகளுக்கு ஒரு கிண்டல் - "தலைவன் தலைவி என்ற பேர்ல இந்த நாட்டில சர்வாதிகாரம் தோன்ற என் பேனா அனுமதிக்காது." என்பதும் ஜெயலலிதாவுக்கே சமர்ப்பணம்.

இத்திரைப்படம் சிவாஜி கணேசனின் வழமையான படங்களில் இருந்து வித்தியாசப் படுகின்றது. இதில் நேரடியாகவே அரசியல் பிரச்சாரம் செய்கிறார். படமும் அவருக்காகவே எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இதனை வெறுமனே பத்தோடு பதினொன்றாக பார்க்காமல் அதற்கப்பாலும் பார்க்க வேண்டியுள்ளது. பத்திரிகையாளன் என்ற பாத்திரத்தின் மூலம் தன்னை ஒரு பகுத்தறிவாளனாக , ஜனநாயகவாதியாக , நேர்மையாளனாக காட்டமுனைகிறார் சிவாஜி. முன்பு இதே பகுத்தறிவுக்கொள்கைகளை துறந்து இந்திய தேசியம் பேசிக்கொண்டு இந்திராகாங்கிரசில் இணைந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. திராவிட இயக்கங்களில் நடந்த உட்பூசல்கள், பதவிப்போட்டிகளினால் ஓரம்கட்டப்பட்டு அதன் தாக்கத்தால் எதிர் நிலைக்கு சென்றவர். பகுத்தறிவுக்கொள்கைக்கு விரோதமாக குடும்பத்துடன் திருப்பதிக்கு சென்று மொட்டைஅடித்துவிட்டு திரும்பியவர். இக்காலத்தில் இவரது பழைய நண்பர்கள் இச் செயலையொட்டி "திரும்பிப்பார் கணேசா நீ நடந்துவந்த பாதையை திரும்பிப்பார் கணேசா" என்று மேடைகளில் கேலி பேசியதும் உண்டு. அதன் பின் இந்திராகாங்கிரசில் ராஜீவின் தலைமையால் ஓரம்கட்டப்பட்டு "என் தமிழ் என் மக்கள் " என வந்தவர் இப்போது "முதல்குரலாக" ஒலிக்கிறார். தமிழகத்தில் தற்போதுள்ள அரசியல் நிலமைகளுக்கேற்ப தன்னையும் பகுத்தறிவுப் பாசறையில் வந்தவனாக காட்ட விரும்புகிறார். படத்தில் இடம்பெறும் ஒரு காட்சியில் மேடம் என்னும் பெண் அரசியல் வாதி இவரை சந்திக்க இவரது வீட்டுக்கு வருகிறார் அங்கு மாட்டியிருக்கும் பெரியாரின் படத்தையும் அவரையும் பார்த்துவிட்டு நீங்க எங்கிருந்து உருவானவர் என்பது எனக்கு தெரியும்" என்கிறாள். அவரும் புன்சிரிப்புடன் நிற்கிறார். நமக்கோ சந்தர்ப்பவாதமே அவர் உருவில் வந்து நம்மை பார்த்து சிரிப்பது போல் தெரிகிறது.



தந்தை பெரியார்

"சுயநல அரசியல்வாதிகளால் படித்த இளைஞர்கள் மத்தியில் தேர்தல், பாராளுமன்றம், ஜனநாயகம் என்பவற்றில் நம்பிக்கை இல்லாமல் போகிறது. அது மாறணும்ண்ணா இந்த மாதிரி குற்றவாளிகளை அம்பலப்படுத்தியே தீரணும்." என்பதன் மூலம் நிலவுகிற அரசியல் அமைப்பை கட்டிக்காப்பதிலுள்ள அக்கறையும் புரிகிறது.

இன்னுமோர் விடயத்தையும் அவதானிக்க முடிகிறது. தமிழீழ விடுதலைப்போராட்டம் தமிழகத்தில் ஏற்படுத்தியிருக்கும் தாக்கத்தையும் தன்னுரிமைப் போராட்டத்துக்கு அது உந்துதலாக இருக்கு என்பதையும். . . .


" ஆண்டசாதி மீண்டும் ஆளுவோம் . .
வீரவேங்கை ஒன்றுகூடுவோம். . . .
வேங்கைஎன்ன பாய்விரித்து தூங்குமா?"
என்ற பாடல்மூலமும். . .
" புயல் ஓய்வதில்லை "
" புலிகள் அழுவதில்லை "
" புரட்சி தோற்பதில்லை "
என்ற வசனத்திலும் அவதானிக்க முடிகிறது. இப்படத்தின் சாராம்சத்தை விளக்க பத்திரிகையாளர்களுக்கு அளிக்கும் பேட்டியில் " அகிம்சைவாதியான நீங்கள் ஆயுதம் தூக்கியது எழுத்தாளர் வர்க்கத்துக்கு அவமானம் இல்லையா? " எழுத்தாளர் வர்க்கத்துக்கு மட்டுமா? இந்த நாட்டுக்கும், ஜனநாயகத்துக்கும் அவமானம் "

என்கிறார். தனது துப்பாக்கியில் இருந்து வெடித்த முதல் குரல் ஒரு எச்சரிக்கை குரல். அது தொடரக்கூடாது. சீர்கெட்ட அரசியல்வாதிகள் அவர்களை ஆட்டிப்படைக்கும் பணமுதலைகள் திருந்த வேண்டும் என்கிறார், எல்லோரையும் திருந்தக் கோருகிறார். தன்னை மன்னிக்கும்படி கூறுகிறார் சிவாஜி. இல்லாவிட்டால் தங்களைப் போன்றவர்களுக்கு எழுச்சியுறும் இளைஞர்களால் ஆபத்து ஏற்படும் என்று குரல் கொடுத்திருக்கிறார்.


26 தொடர் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


THE TRAPPEI - PEOPLE

AMONG

PEACE MAKERS AND WAR MONGERS

Report no.9

by

University Teachers for Human Rights (Jaffna)

Issued: 18 February 1992

UTHR (Jaffna)
University of Jaffna
Thirunelvely, Jaffna
Sri Lanka

## தமிழீழ வி... (Telo) தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் (PLOTE) மற்றும் ஈழ தே...யக விடுதலை முன்னணி E.N.D.L.F) உறுப்பினர்கள்

இலங்கை அரச படைகளுக்குப் பக்கத் துணையாக நின்று இப்போது Telo வும், Plote உம் விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போர்புரிந்து வருகிறார்கள். இந்த இயக்கத்தின் உறுப்பினர்களது நிலை பற்றிச் சொல்வது அவர்களுடைய தலைவர்கள் தங்கள் கடமையை மீள்பரிசீலனை செய்ய உதவும் என்று கருதுகிறோம்.

கிழக்கு மாகாணத்தில் பொதுமக்களைத் துன்புறுத்துவதில் தமிழீழ விடுதலை இயக்க உறுப்பினர்கள் பங்குபற்றுகிறார்கள் என்று முன்பும் குறிப்பிட்டிருந்தோம். அதிக எண்ணிக்கையில் உறுப்பினர்கள் இந்த இயக்கங்களிலிருந்து விலகி வெளிநாடுகளுக்கும் அகதிகளாகவும் சென்று விட்டனர். தரத்திலும் இயல்பிலும் இந்த இயக்கங்கள் எல்லாமே ஒரேமாதிரியானவைதான். ஏனென்றால் இவர்கள் ஒருவரிடமுமே சீரிய வேலைத்திட்டம் ஏதும் இருக்கவில்லை. இந்த இயக்கங்களுக்கிடையேயான பிரதான ஒற்றுமை இவற்றின் உறுப்பினர்கள் பெரும்பாலானோர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்பதே. வடக்கிலுள்ளவர்கள் ஏதோ ஒரு வழியில் வெளிநாடுகளுக்குத் தப்பிச்செல்லும் சாத்தியம் இருக்கிறது. ஆனால் கிழக்கு மாகாணத்திலிருந்தோ வறிய பின்னணியிலிருந்து வரும் உறுப்பினர்கள்தான் அதிகம். இவர்கள் வெளிநாடு தப்பிச் செல்வது அசாத்தியம். இவர்களுக்கு அரசியல் கண்ணோட்டமும் இல்லை. எதிர்காலத்தைப் பற்றியும் இவர்களுக்கு நிச்சயமில்லை. புலிகளால் எப்போதுமே வேட்டையாடப்படுவதால் சாதாரண பொதுவாழ்வுக்கும் இவர்கள் திரும்ப முடியாமலுள்ளது.

இலங்கை இராணுவத்திற்கும் இவர்கள்மீது வெறுப்புத்தான் உள்ளது. பல கொலைகளிலும் கொள்ளைகளிலும் இவர்கள் சம்பந்தப்பட்டிருந்தாலும் அதுபற்றி இவர்கள் அலட்டிக்கொள்வதில்லை. கிழக்கு மாகாணத்தில் புலிகள் ஆயுத முனையில் பணம் பறிப்பது உண்மை. அதுபோலவே தமிழீழ விடுதலை இயக்கத்தினரும் வருகின்றனர். ஒரு எளிமையான காரணம் அவர்களுக்கு கிடைக்கிறது. புலிகளுக்கு கொடுக்கலாம் என்றால் ஏன் எங்களுக்குத் தரக்கூடாது ? கொழும்பிலும் ENDLF கொள்ளைகளில் ஈடுபட்டுள்ளது.

வெளிநாட்டில் வாழும் ஒரு தமிழீழ மக்கள் விடுதலைக் கழக உறுப்பினர் ஒருவர் அண்மையில் தன்னுடைய அனுபவம் ஒன்றைச் சொன்னார். எப்படிக் கொழும்பில் தாங்கள் கொலை செய்தார்கள் என்பது பற்றிய அவலக்கதை அது :

அவர்களுடைய பழைய உறுப்பினர் ஒருவர் பூஸா தடுப்பு முகாமில் இருந்த பின்னர் ENDLF இயக்கத்துடன் சேர்ந்து

மனித உரிமைகளுக்கான பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் (யாழ்ப்பாணம்) வெளியிட்ட ஒன்பதாவது அறிக்கையி லிருந்து சில பகுதிகளைத் தமிழில் தரு கிறோம். The Trapped People Among Peace - makers and War Mongers என்ற தலைப்பில் வெளியாகியுள்ள இந்த அறிக்கையின் (பக்கங்கள் 62; விலை ரூபா 35.00) பிரதிகள் தேவைப் படுவோர் இனங்களுக்கிடையே நீதிக் கும் சமத்துவத்துக்குமான இயக்க அலு வலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

www.tamilarangam.net

கொண்டார். ENDLF என்பது PLOTE இலிருந்து பிரிந்த ஒரு சிறு இயக்கமாகும். ENDLF அதிகார உன்னதத்தில் இருந்தபோது கிளிநொச்சிப் பகுதிக்குத் துணைப் பொறுப்பாளராக இருந்தார் அவர். ENDLF இல் சேர மறுத்த PLOTE இயக்கத்தினர் சிலரைக் கொலை செய்ததாக அவர்மீது குற்றச்சாட்டுகள் இருந்தன. இந்திய இராணுவம் வெளியேறிய பிற்பாடு அவர் கொழும்பில் தஞ்சம் புகுந்திருந்தார். ஒருநாள் தங்களுடைய இராணுவ கொமாண்டருடன் வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது PLOTE இயக்கத்தினர் தற்செயலாக அவரைக் கொழும்புத் தெரு ஒன்றில் கண்டனர். உடனடியாகவே அவரைப் பிடித்து வாகனத்தில் ஏற்றிய பின்னர் தாக்கத் தொடங்கினார்கள்.

பின்னர் வாகனத்துள் இருந்த PLOTE உறுப்பினர் ஒருவர் அவருடைய கழுத்தைக் கத்தியால் வெட்டினார். எல்லா இடமும் குருதி தெறித்தது. பின்னர் உடலைக் கொண்டு போய்க் கடலில் போட்டுவிட்டார்கள். மறுநாள் காலை பத்திரிகைகளில் 'அடையாளம் காணப்படாத ஒரு உடல் கரையொதுங்கிற்று' என்ற செய்தி வெளியாயிற்று.



## முகாமில் எரிப்பு

நவம்பர் மாத நடுப்பகுதியில் மட்டக்களப்பு வனத்திணைக்களக் கட்டிடப்பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமில் ஐந்து அல்லது ஆறு உடல்கள் எரிக்கப்பட்டமை அவ்விடத்து மக்களுக்குத் தெரியவந்தது. மட்டக்களப்பு சமாதான குழுவினர் பொலிஸ் மேலாளரை இதுதொடர்பாக அணுகியபோது இராணுவத்தினர் அடையாளம் காணப்பட முடியாத சில உடல்களை எரிக்கும்படி கேட்டுக் கொண்டதாகவும், அதனால்தான் அந்த உடல்களை எரிக்க வேண்டி நேர்ந்தது என்றும் தெரிவித்தார். அடையாளம் காணப்படாத உடல்களாய் இருந்தாலும் அவற்றை எரிப்பது தொடர்பாக ஒரு ஒழுங்கான நடைமுறை பேணப்பட்டிருக்க வேண்டும் என்றும் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து இராணுவத்தினர் நடந்துகொள்ள வேண்டும் என்றும் சமாதானக் குழுவினர் எதிர்ப்புத் தெரிவித்தனர். பொலிஸ் மேலாளர் இவ்வகையான சம்பவங்கள் இனி நடைபெறாதென உறுதியளித்த போதிலும் டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் கல்லடிப் பாலத்தருகே ஒரு அதிகாலையில், பத்து உடல்கள் எரிக்கப்பட்டன. அரைகுறையாய் எரிந்த கைகளும் வேறு அங்கங்களும் பாலத்தையண்டியுள்ள வளவுகளுக்குள் காணப்பட்டன.

தம்பிராஜா தியாகராஜா, தேவநாயகம் தம்பிராஜா ஆகிய இருவருக்கும் வயது 21. இருவரும் 9.11.91 காலை ஏழு மணியளவில் மட்டக்களப்பு பார் அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். இந்த இடத்திற்கு வந்த இராணுவம் ரெலோவின் தகவலின் அடிப்படையில் இவர்களைக் கைதுசெய்தது. ஏறாவூரின் ஆறுமுகத்தான் குறிப்புப் பகுதியில் இருந்து, சாவற்குடி படுகொலைக்குப் பின்னர் மட்டக்களப்பு வந்திருந்தவர்கள் இந்த இருவரும். இரண்டு மூன்று தினங்களாக இவர்களைப் பற்றி உறவினர்களால் எதுவித தகவலும் பெறமுடியவில்லை. சமாதானக்குழு இராணுவத்தை அணுகியது. கொலோனல் விபுலகுண, தான் இவர்கள் பற்றி கண்டுபிடிப்பதாக உறுதியளித்த பின்னர், இராணுவத்தினரிடமே இவர்கள் இருப்பதாகக் கண்டுபிடித்தார். நெருங்கிய உறவினர்கள் எவரும் பார்க்க அனுமதிக்கப்படவில்லை. படுகொலைகளிலிருந்து தப்பி மட்டக்களப்பு வந்த பலரும் ரெலோவின் நடவடிக்கைகளால், பாதுகாப்பற்ற நிலைமையை உணர்கின்றனர். பெருமளவில் அப்பாவிகள் கைதாவதற்கு உறுதியான ஆதாரங்களோ, நியாயமான காரணங்களோ இல்லை. ரெலோவின் தனிப்பட்ட காரணங்கள் அல்லது சிறு சந்தேகங்கள், ஒரு கிராமத்தைப் பற்றிய தப்பெண்ணங்கள் போன்றவையே காரணமாக அமைகின்றன. ரெலோ உறுப்பினர்கள் எழுந்தமானமாக சிலரைப் புலிகள் என அடையாளம் காட்டி, அவர்களது வாழ்க்கையை ஆபத்துக்கு உள்ளாக்குகின்றனர்.

## கனிஸ்ரன் மைக்கேலின் கொலை

நாவற்குடாவைச் சேர்ந்த கனிஸ்ரன் மைக்கேல், இராணுவத்தால் கைதாகி விடுவிக்கப்பட்டவர். ஒவ்வொரு வாரமும் இராணுவ முகாமிற்குச் சென்று வருமாறு அவர் சொல்லப்பட்டிருந்தார். அவர் அவ்வாறே செய்து வந்தார். நவம்பர் மாதம் 12 ஆம் திகதி அவர் ரெலோவால் கொண்டு செல்லப்பட்டார். மறுதினம் அவரது உயிரற்ற உடல் பிளேட் வெட்டுக் காயங்களுடன் காணப்பட்டது. ரெலோவின் நடவடிக்கைகளால் கோபம் கொண்ட மக்கள் இதுபற்றி இராணுவத்திடமும், பொலிசாரிடமும் முறையீடு செய்துள்ளனர். தாம் ரெலோ பற்றி ஒன்றும் செய்யமுடியாது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனப் பொலிசார் கூறியுள்ளனர். ரெலோவின் நடவடிக்கைகள் பற்றி ஒன்றும் புரியாத மக்கள், தமக்கு விருப்பமான, ஆனால் மோசமான நடவடிக்கைகளைச் செய்யவும் அவற்றுக்கான பழியைப் பொறுப்பெடுக்கவும் இராணுவம் ரெலோவைப் பயன்படுத்துகிறது என நம்பகின்றனர். ரெலோவை இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுத்திய கப்ரன் 'எம்' வேறு இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளார். சமூகத்தின் முக்கிய பிரமுகர்கள் சிலர் , ரெலோ தன்னிச்சையாக திரிவதாகவும் ஒரு தண்டனை வழங்கும் குழு போலச் செயற்படுவதாகவும் கூறியுள்ளனர்.

## நாவற்குடாவில் டிக்கின் கொலை (8.12.91)

ரோமன் கத்தோலிக்கரான டிக் என்ற இளைஞர், மதகுருவாவதற்காக செமினரியில் கற்றுக் கொண்டிருந்தார். எட்டாம் திகதி இரவு உணவிற்காக அவர் தனது வீட்டிற்கு வந்தார். வழியில் ரெலோ அவரை நிறுத்தியது. உடன் அவர் அருகிலிருந்த வீட்டுக்குள் ஓடினார். அவருக்கு அடைக்கலம் வழங்கிய அந்த வீட்டுப் பெண், வீட்டின் வாசலில் நின்று கொண்டிருந்தார். 'டிக்' கைத் தங்களிடம் தருமாறு ரெலோ கேட்டு அந்தப் பெண்ணைக் காயப்படுத்தினர். டிக் ரெலோவால் கைதானார். வீட்டுப் பெண்மணி டிக்கின் வீட்டிற்கு ஓடிச்சென்று அவர் கைதான தகவலைத் தெரிவித்தார். டிக்கின் தாயாரும் சகோதரியும் அருகிலுள்ள இராணுவ முகாமிற்குச் சென்று படையினருக்கு இதுபற்றித் தெரிவித்தனர். அவர்கள் இவ்வாறு ஒரு சம்பவமே நிகழவில்லை என மறுத்தனர். மறுநாள் காலை ஆற்றங்கரையில் டிக்கின் உடல் பெற்றோரால் அடையாளம் காணப்பட்டது. உடல் பிளேட்டால் வெட்டப்பட்டுக் காணப்பட்டது. தொண்டை வெட்டப்பட்டு வாயினூடாக தொண்டைவரை செபமாலை செலுத்தப்பட்டிருந்தது. பிளேட்டும் வாயினூடு செலுத்தப்பட்டிருந்தது.

## எலிசபெத்தின் மர்மக் கொலை

16 வயதான எலிசபெத்தின் மரணம் மட்டக்களப்பு நகரில் பெரும் பீதியை ஏற்படுத்தியது. கொன்வென்டில் படித்துக்கொண்டிருந்த எலிசபெத் ஒரு பொலிஸ்காரருக்குத் திருமணம் செய்துவைக்கப்பட நிச்சயம் செய்யப்பட்டிருந்தார். அவரது உடல் ஏரியில் காணப்பட்டது. பலரால் பாலியற் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்பட்டிருந்த அடையாளங்கள் உடலில் காணப்பட்டன. ரெலோ உறுப்பினர்களுடன் அவர் சிறிது நேரம் முன்னர் ஆனைப்பந்திப் பிள்ளையார் கோயிலடியில் காணப்பட்டார். ஒரு சிவப்பு நிற கார் ஏரியை அண்மித்ததைச் சிலர் கண்டுள்ளனர். எவ்வாறு இந்தக் கார் தடை முகாம்களைக் கடந்து வந்தது என்பது மக்களுக்கு புரியவில்லை. இந்த அருவருப்பான நிகழ்ச்சியில் இராணுவத்தின் மறைமுக ஆதரவு இருந்ததா அல்லது இதில் சம்பந்தப்பட்ட ரெலோ உறுப்பினர்களுக்கு விரும்பியபடி திரிய இராணுவத்தின் அனுமதி இருந்ததா என்பது தெளிவாகவில்லை. அண்மையில் உக்கன் என்பவர் இது தொடர்பாகக் கைதாகியுள்ளார். மக்களின் மீதான உதாசீனப்படுத்தும், அதிகார நடவடிக்கைகளுக்கப் புகழ்பெற்ற இவர் முன்னர் ENDLF குழுவில் இருந்தவர். பின்னர் ரெலோவுடன் திரிந்தவர்.

## பச்சைப் படகுப் பயணம்

விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து மேல்மட்ட உறுப்பினர்கள் சிலர் வெளியேறிய பிற்பாடு தெரியவந்த தகவல்களில் பச்சைப் படகுப் பயணம் முக்கியமானது. இது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் குணாம்சத்தைப் பற்றி நிறையவே சொல்கிறது. இந்தியாவில் பயிற்சியளிக்கப் படும்போதே விடுதலைப் புலிகள் தமது புதிய உறுப்பினர்களை மிகவும் அவதானமாகக் கவனித்து வருவது வழக்கம். சுயமாகச் சிந்திக்கத் தெரிந்தவர்களும் சரி, எது பிழை ? சரி எது ? என்று இனங்கண்டு கொண்டு செயற்படக்கூடியவர்களும் கேள்வி எழுப்பக் கூடியவர்களும் இயக்கத்திற்கு ஆபத்தானவர்களாக எதிர்காலத்தில் விளங்க நேரிடலாம் என்று கவனித்து வைத்துக் கொள்ளப்படுவார்கள். பயிற்சி முடிவடைந்த பிற்பாடு உறுப்பினர்கள் பல படகுகள் மூலம் வடக்குக்கும் கிழக்கிக்கும் அனுப்பப்படுவார்கள். எதிர்காலத்தில் ஆபத்தானவர்களாக வரலாம் என்று குறிக்கப்பட்டவர்கள் பச்சை நிறப் படகு ஒன்றில் அனுப்பப்படுவார்கள். இந்தப் பச்சைப் படகில் பயணம் செய்தவர்கள் ஒருநாளும் கரைசேர்ந்ததில்லை. கடலின் நடுவில் அவர்களது தலைவிதி தீர்மானிக்கப்படும். அவர்களைக் கொன்ற பின்பு வயிறு வெட்டிப் பிளக்கப்பட்டு உடல் கடலுள் வீசப்படும்.

நன்றி : சரிநிகர்

23 பக்கம் தொடர்

சினிமா உலகின் இன்றைய யுத்திகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் ஒதுங்கிய இயக்குனர் குகநாதனும், அரசியல் உலகில் அநாதையான சிவாஜிகணேசனும் இணைந்து (முதல்) "குரல்" கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இந்தக்குரல் ரசிகர் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தாமல் தியேட்டருக்குள்ளேயே முடங்கிவிடப்போகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கல்யாண திரணகம உடன் ஒரு நேர்காணல் !

? திராணகம அவர்களே! உங்களைப் பற்றி சுருக்கமாக அறியத்தருவீர்களா?

0 நிட்சயமாக! நான் முன்பு இலங்கை கம்யூனிசுட்டு கட்சியிலிருந்த போது யாழ்ப்பாணத்தில் பல இடங்களுக்கு வந்திருக்கிறேன். பின்பு ஒரு மாவோயிசுட்டாக இருந்து சண்முகதாசனுடன் சேர்ந்து வேலை செய்திருக்கிறேன். 1971 J.V.P கிளர்ச்சியின் போது சிறிலங்கா அரசினால் சண்முகதாசன் கைதுசெய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் நானும் கைதுசெய்யப்பட்டு 3 வருடங்கள் யாழ்ப்பாணச்சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்தேன்.

1986 இல் இருந்து மனித உரிமைகளுக்கும் அதன் உருவாக்கத்திற்குமான சட்டதரணிகள் சங்கத்துடன் (L.H.R.D) இணைந்து இலங்கையில் மனித உரிமை மீறல்களுக்கு எதிராகப் பணியாற்றி வருகிறேன்.

? முன்னால் பொலிசு மா அதிபர் பிரேமதாசா உடுகம்பொல; ஜே.வி.பி இற்கு எதிரான பலவித சித்திரவதைகளை உதாரணமாக காதுக்குள் பேனை அல்லது பென்சிலை வைத்து செவிப்பறை கிழிய அடிப்பது-மேற்கொண்டவர். இவரது குடும்பமே-தாய், மனைவி, குழந்தை ஜே.வி.பி இனரால் அழிக்கப்பட்டனர். ஜே.வி.பி யை அழித்தொழிப்பதில் இவர் பெரும் பங்காற்றினார். ஆனால் அரசு இவரை பதவியிலிருந்து கட்டாய ஓய்வில் நிறுத்தியிருந்தது. இவர் இன்று பிரேமதாசா பற்றிய பல இரகசியங்களை வெளிக்கொணருகிறார் என்று அறிகிறோம். இது பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன என்று கூறுவீர்களா?

0 நிட்சயமாக! முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேயரத்தினாவின் கொலை தொடர்பான தீவிர விசாரணையை மேற்கொண்ட போதுதான் தாம் பதவியிலிருந்து கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டதாக உடுகம்பொல கூறுகிறார். இன்னும், ரஞ்சன் விஜேயரத்தினாவின் கொலை தொடர்பான தீவிர விசாரணை ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு பாதகமாக அமையும் என்பதும் உடுகம்பொலவின் கூற்றாகும்.

மேலும் கறுப்புப் பூனை (Black Cats) சிறிலங்கா சுதந்திரக்கட்சியினதும், இடதுசாரி ஆதரவாளர்களையும் கொலை செய்வதற்காக உருவாக்கப்பட்ட அரசபடை என்றும், ஏற்கனவே இரண்டு சிறிலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளர்களை இதே கறுப்புப்பூனை கொலை செய்தது போன்ற பல தகவல்களையும் வெளியிட்டுள்ளார் உடுகம்பொல.

(மனித உரிமைகளுக்கும் அதன் உருவாக்கத்திற்குமான சட்டத்தரணிகள் சங்கத்தின் (Lawyers For Human Rights And Development) சார்பில் இலங்கையில் இருந்து, ஒக்ரோபர் மாத நடுப்பகுதியில் சுவிஸ் வந்திருந்த கல்யாண திரணகம அவர்களை 16.10.92 அன்று சந்தித்து உரையாடினோம். உரையாடலின் போது இலங்கையில் மனித உரிமை மீறல்கள் சார்பாக அவரிடமிருந்து பெற்ற சாரங்களைக் கீழே நோக்குவோம்

ஆ - ர் குழு

? ஜே.வி.பி நீதிபதி வில்லியாராச்சியின் கொலையில் உடுகம்பொலவிற்கு பங்கு உண்டா?

0 வில்லியாராச்சி பொலிசாரினால்தான் கொல்லப்பட்டார் என்பது உண்மை. இவரது கொலைக்கு எதிராக பொலிசு மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்ட போது, அரசுக்கு (பொலிசாரிற்கு) ஆதரவாக தோற்றுவதற்கு இலங்கையிலுள்ள சட்டதரணிகள் எவருமே முன்வரவில்லை. இது சட்டதரணிகள் சங்கத்தின் அரசுக்கு எதிரான ஒரு தீவிர நடவடிக்கையும்கூட. இந்நிலையில் லண்டனில் இருந்துதான் ஒரு சட்டதரணியை அரசு வருவித்திருந்தது.

? உடுகம்பொலவின் கைது தொடர்பான அரசின் முயற்சி பற்றி கூறுவீர்களா?

0 அவரைக் கைது செய்வதற்கு பொலிசார் எவரும் தயாராக இல்லை என்பதே உண்மை. அதனால்தான் அவர் " அரசு என்னைக் கைது செய்து பார்க்கட்டும் " என்று பத்திரிகைகளுக்கு அறிக்கைகூட கொடுத்திருக்கிறார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

? உடுகம்பொல பற்றி இறுதியாக ........

0 நாளைக்கு ஒரு அரசியல் தலைவராக தோற்றினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

? தென் இலங்கை மக்களின் இன்றைய அரசியல் நிலைமை, அரசிற்கு எதிரான உணர்வு பற்றி கூறுவீர்களா?

0 இன்று தெற்கு பேச ஆரம்பித்திருக்கிறது. " அத்த " (கம்யூனிசக்கட்சி) பத்திரிகை சுதந்திரமாக கருத்தைத் தெரிவிக்கும் முயற்சியில் முன்நிற்கிறது. இது தென் இலங்கையைப் பொறுத்தவரை ஒரு புதிய விருத்தி என்று கூட கூறலாம்.

சில மாதங்களுக்கு முன்பு கொழும்பிலிருந்து கதிர்காமம் வரை தொடர்ச்சியாக 20-30 ஆயிரம் பேர் வரை கலந்து கொண்ட வெகுசன அமைதி ஊர்வலம் ஒன்று அன்னையர் முன்னணியினால் நடாத்தப்பட்டது. சகல கட்சியினரும் இவ் ஊர்வலத்திற்கு தமது ஆதரவை தெரிவித்திருந்தனர்.

மேலும் நீதிபதிகளுக்கு எதிராக கூட மக்களின் எழுச்சி நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன.

தம்புள்ளவில் உள்ள கட்டல எனும் இடத்தில் உல்லாச விடுதி ஒன்றை அமைக்கின்ற அரசின் முயற்சிக்கு எதிராக மக்களின், பௌத்த குருமாரின் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. இதனால் பௌத்த குருமாரின் நூல்நிலையம் ஒன்றும் அரச படையினால் தீ வைக்கப்பட்டுள்ளது. இதற்கெதிரான பிரச்சாரம் தொடர்கிறது.

? மனித உரிமை மீறல்கள் இந்தியாவிலா இலங்கையிலா அதிகம் என்று நினைக்கிறீர்கள்?

0 இந்தியாவிலும் மனித உரிமை மீறல்கள் உண்டுதான். உதாரணமாக பஞ்சாப், காசுமீரைக் குறிப்பிடலாம். ஆனால் ஒப்பீட்டளவில் இலங்கையை விட இந்தியா பரவாயில்லை. ஜனநாயக மறுப்புக்கூட இலங்கையில் அதிகம். பத்திரிகைகள் சுதந்திரமாக கருத்துக்களை எழுத முடியாது. இலங்கைப் பிரச்சனைகளைக்கூட ராய்ட்டர் தெரிவித்ததாகவே பத்திரிகைகள் குறிப்பிடுகின்றன.

? இனப்பிரச்சனைக்கான தீர்வில் அரசின் இன்றைய நிலைமை .........

0 அரசின் தீர்வை முன்வைக்கும்படி அரசை வலியுறுத்த வேண்டும்.

? தமிழர்களுக்கு சம உரிமை வழங்கப்படுமானால் சிங்கள மக்களின் கருத்துநிலை எப்படி இருக்கும்?

0 இது தமிழ்-சிங்கள மக்களின் பிரச்சனையல்ல. தமிழ்-சிங்கள அரசியல் கட்சிகளின் நிலை. குறிப்பாக தமிழ் இனவிரோத நடவடிக்கை. களுகல்லவில் 25 தமிழ் கடைகளுக்கு மேல் உண்டு. அமைதியாகவே வியாபாரம் நடக்கிறது. இனக்கலவரங்களை கூடுதலாக கொழும்பு சிங்கள-முசுலீம் (அரசு ஆதரவு) குண்டர்கள்தான் நடாத்துகின்றார்கள்.

இச்சந்தர்ப்பத்தில் கவலை தரும் செய்தி ஒன்றை குறிப்பிட வேண்டும். பெரும் சிங்கள வர்த்தகர்களைக் கொண்ட கெல உறுமை (Helaurumai) எனும் இனவாதக்குழு ஒன்று தென் இலங்கையில் ஆரம்பமாகி இருக்கின்றது.

? நாடு பிரிவதை விரும்புகின்றீர்களா?

0 எனது விருப்பம் ஒன்றாக வாழ்வதே.

? இன்னும் எமது கேள்விகள் தவிர நீங்களாக ஏதாவது கூறவிரும்புகின்றீர்களா?

0 சகல தமிழ் குழுக்களும் (E.P.R.L.F நீங்கலாக) அவசரகால சட்டத்தை ஆதரிப்பது ஏன் என்றுதான் எமக்குப் புரியவில்லை.

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் இன்றும் இரகசியப் பேச்சுவார்த்தைகள் ஏன் நிகழ்கின்றன என்பதும் புரியவில்லை.

* வணக்கம் *



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**விடுதலைப் புலிகள் :::**

# தேசியசக்தியும் பாசிச சக்தியும்

**சி.சிவசேகரம்**

**வி**டுதலைப் புலிகளை எவராவது தேசியசக்தி என்று குறிப்பிட்டால் சிலர் மிகவும் கோபிக்கிறார்கள். தேசிய சக்தி என்று அவர்கள் அழைப்பது அவர்களை அங்கீகரிப்பது என்ற மாதிரி இவர்களால் விளங்கிக் கொள்ளப்படுகிறது. தேசிய சக்தி என்ற பதம் ஒரு பாராட்டோ, விருதோ அல்ல. மாக்ஸியவாதிகளும் மாக்ஸியரல்லாதோரும் ஒரு அரசியல் நிலைப்பாட்டைக் குறிக்கவே அப்பதத்தைப் பாவிக்கின்றனர். அது ஒரு அரசியல் இயக்கம் பற்றிய அடையாளங்காணலே ஒழிய வேறல்ல. ஒரு இயக்கம் தேசிய சக்தி என்பதால் அது நல்லதா ? கெட்டதா ? என்ற விதமான தீர்மானத்திற்கு நாம் எவ்வாறு வரமுடியும் ? ஒரு தேசியசக்தி முற்போக்கானதா ? இல்லையா ? என்றுநாம் எவ்வாறு முடிவு செய்கிறோம். ஒருவரது உலகப்பார்வையும், சமுதாய நோக்கும், வர்க்க நிலைப்பாடும் அவர் பயன்படுத்தும் அளவுகோல்களை நிர்ணயிக்கின்றன. அவற்றுக்கும் அப்பாற்பட்ட வர்க்க சார்பற்ற சமுதாய உணர்வு கடந்த மதிப்பீடுகள் நடைமுறையில் இல்லை.

மாக்ஸிய நோக்கில் தேசியவாதம் சாரம்சத்திற் பிற்போக்கானதே. அதனால் அது உலக வரலாற்றில் எப்போதுமே பிற்போக்கான பங்கை வகித்ததில்லை. தேசியவாதம் மனிதரை மனிதர் தேசிய அடிப்படையில் ஒடுக்குவதை ஊக்குவிக்கும் நிலைகளின் பிற்போக்கானது. அவ்வாறான ஒடுக்கலை எதிர்க்கும் நிலையில் அது முற்போக்கானது ஆகிறது. கொலனித்துவவாதிகளதும் ஏகாதிபத்தியவாதிகளதும் தேசியவாதம் பிற்போக்கானது. கொலனித்துவ ஏகாதியத்திய ஒடுக்கலினின்று விடுபடமுனையும் தேசிய விடுதலை இயக்கம் முற்போக்கானது. ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களிடையிலும் முரண்பாடுகள் உள்ளன. இவற்றை சினேக பூர்வமாகத் தீர்க்க முடியும். அவ்வாறான தீர்வை மதிக்கும் தேசியவாதம் இயல்பாகவே பிற்போக்கான ஒன்றாகி விடுகிறது.

தமிழர் விடுதலை இயக்கங்கள் தமிழ்த் தேசிய இனத்தின் மீது சிங்களப் பேரினவாத அரச ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராடிய அளவில் முற்போக்கான வரலாற்றுப் பணியை ஆற்றின. அந்த அடிப்படையிலேயே அவை தேசிய சக்திகள் என்ற காரணந் தொட்டு தேசிய சக்திகள் முற்போக்கானவை என்ற கருத்து நம்மிடையே நிலைபெற்றது. தேசிய சக்திகளது தன்மையும் செயற்பாடும் அவற்றின் வர்க்க நிலைப்பாட்டையும் அரசியல் நிலவரங்களையும் சார்ந்தன.அவை காலத்துடன் மாறுபடுவன. முக்கிய தமிழர் விடுதலை இயக்கங்கள் யாவுமே தம்மைப் சோசலிஸ சக்திகளாகவும், அவசியமானபோது மாக்ஸிய சார்புடையனவாகவும் காட்டிக் கொண்டதை நாம் அறிவோம். மாக்ஸிய முனைப்பு இந்த இயக்கங்களின் வர்க்க அடிப்படையையொட்டி அமைந்த ஒன்றல்ல. 1970களினதும், 1980களினதும் உலக நிலைமைகள் இளைஞர் மத்தியில் மாக்ஸிய சோசலிசச் சிந்தனைகள் பற்றிய அக்கறையை ஓரளவு தூண்டின. பழைய அரசியற் தலைமைகள் வெற்றிகரமாகத் தமிழரின் பாராளுமன்ற அரசியயிலிருந்து ஒதுக்கிய இடதுசாரிச் சிந்தனைகள் 1970க்குப் பின் இளைஞர்களைக் கவர்ந்த காரணங்கள் நாட்டின் உள்ளேயும் இருந்தன. தமிழ்த் தேசியவாதத் தலைமையின் வலதுசாரி அரசியலின் இயலாமையும், 1971 ஏப்ரல் கிளர்ச்சியும், 1970களுடாகப் படிப்படியாக விரிவடைந்து 1977க்குப்பின் உக்கிரமடைந்த அரச ஒடுக்குமுறையும் வலதுசாரி அரசாங்கத்தின் கீழ்த் தமிழர் முன் கண்டிராத இனவாத வன்முறைக்கு முகங்கொடுக்க நேர்ந்தமையும் இடதுசாரி முனைப்புக்கட்கு ஆதாரமாக இருந்தன.

1983 வன்முறையின் பின் இந்தியாவின் தலையீடு விடுதலை இயக்கங்களின் போக்கில் முக்கிய மாற்றங்களைப் புகுத்தியது. 1987இல் இந்தியா இலங்கை உடன்படிக்கையை அடுத்து விடுதலை இயக்க அரசியல் மேலும் வக்கிரமானது. எந்தப் பேரினவாத அரசாங்கத்தை எதிர்ப்பதாக விடுதலை இயக்கங்கள் பிரகடனஞ் செய்தனவோ அதே அரசாங்கத்துடன் ஒத்துழைக்கும் நிலையும் அதன் உதவியுடன் சகோதர விடுதலை இயக்கங்களை அழிக்கும் அவலமும் முக்கிய விடுதலை இயக்கங்கட்கு நேர்ந்துள்ளது. அயல் நாடொன்றின் பிராந்திய நலன்களை முதன்மைப்படுத்தி விடுதலைப் போராட்டத்தின் பாதையைத் தீர்மானிக்கும் நிலையிலும் ஒன்றுக்கு மேற்பட்ட இயக்கங்கள் உள்ளன. இன்று விடுதலைப்புலிகள் அரசாங்கத்தின் இன ஒடுக்கல் யுத்தத்திற்கு முகங்கொடுக்கும் போராட்டச் சக்தியாக உள்ளனர்.ஆயினும் இந்த நிலைமை மாறக் கூடியது. தேசிய விடுதலையின் இலக்காக பிரகடனஞ் செய்யப்பட்ட தமிழீழப் பிரிவினையை மற்ற இயக்கங்கள் போல அவர்களும் கைவிடக்கூடும். இதற்கான சாத்தியக் கூறுகள் பல தடவைகளிற் தென்பட்டுள்ளன. இதனால் அவர்கள் தேசியசக்திகளில்லாது வேறேதோவாக

www.tamilarangam.net

மாறிவிடுவார்களா ?

தேசிய இயக்கங்கள் தமக்கிடையே உள்ள முரண்பாடுகளைச் சினேகமான முறையிற் தீர்க்கத் தவறும் போது அயல்நாடுகள் தலையிடவும், ஏகாதிபத்தியவாதிகள் அவற்றைத் தமது வசதிற்கேற்ப பாவன்படுத்தவும் போராட்டத்தைத் திசை திருப்பவும் இடமுண்டு. அங்கோலாவில் சோவியத் யூனியனின் குறுக்கீடு ஒரு விடுதலை இயக்கத்தை அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் தென்னாபிரிக்க நிற வெறியரதும் கைக்குள் தள்ளி விடவே உதவியது. அதன் விளைவான உள் நாட்டு யுத்தம் 15 வருடகாலமாகத் தொடர்ந்தது. ஸிம்பாப்வேயிலும் இவ்வாறான ஒரு சாத்தியப்பாடு இருந்தது. ஆயினும் அதன் விளைவுகள் அவ்வளவு பாரதூரமாகப் போகவில்லை. எவ்வாறாயினும் தேசிய இனப் பிரிவுகளிடையேயும் குலங்களிடையேயும் (Tanban ) உள்ள முரண்பாடுகள் அவசியமற்ற உயிரிழப்புகட்கு காரணமாயின.

இவ்வாறான பிறழ்வுகள் ஒரு விடுதலை இயக்கத்தின் முற்போக்கான தன்மையின் மறுதலிப்பாகலாம். இவற்றினூடு அந்த இயக்கத்தின் போராட்டத்தடம் புரளலாம். ஆயினும் இவை ஒரு இயக்கத்தின் தேசியத்தன்மையை மாற்றி விடுவதில்லை. தேசிய முதலாளித்துவ வர்க்கம் ஒன்று எவ்வாறு மாறுபடும்? தேசிய சர்வதேசிய நிலவரங்கேட்ப ஏகாதிபத்தியத் துடனும் தனது நாட்டின் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களுடனும் தனது உறவை மாற்றிக் கொள்கிறது. அவ்வாறே பாட்டாளி வர்க்கத் தலைமையற்ற ஒவ்வொரு தேசிய விடுதலை இயக்கமும் ஊசலாட்டத்துக்கு உள்ளாகிறது. அவற்றின் அரசியல் தேசியத்தையே அடிப்படையாகவே கொண்டு செயற்பட்டாலும் அவற்றின் வர்க்க நலன்களும் அரசியல் நிலவரங்களும் அவற்றைத் தமது பிரகடனஞ் செய்யப்பட்ட இலக்கினின்று விலக்க இடமுண்டு. ஒரு இயக்கத்தின் தோற்றமும், விருத்தியும், எழுச்சியும், வீழ்ச்சியும், சிதைவும், சீர்குலைவும், அழிவும் பல்வேறு சூழ்நிலைகளாற் தீர்மானிக்கப்படுகின்றன. குறிப்பிட்ட ஒரு சூழ்நிலையில் அதன் வெற்றியையும் தோல்வியையும் மட்டுமே அளவுகோலாக வைத்து அதன் தன்மையைத் தீர்மானித்து விடமுடியாது. ஒரு இயக்கத்தின் நடத்தை அதன் வர்க்கத் தன்மையாலும், அது சமுதாயத்தையும் வரலாற்றுச் சூழலையும் உலக நிலவரத்தையும் எவ்வளவு தூரம் சரிவர அறிந்துள்ளது என்பதாலும் தீர்மானிக்கப்படுவது. நேற்றைய தேசியவாத இயக்கமோ தேசியசக்தியோ நாளை மாறாது என்பதற்கு உத்தரவாதமில்லை. ஆயினும் ஒரு இயக்கத்தின் செயற்பாட்டின் அடிப்படை சேவையை புறக்கணித்து அதன் செயற்பாட்டின் குறைநிறைகளைக் மேலோட்டமாகப் பார்த்து அந்த இயக்கம் தேசிய சக்தியா இல்லையா என்று முடிவு காண முடியாது.

இந்தளவில் விடுதலைப் புலிகளது அரசியல் இருப்பு தமிழ்த் தேசியவாதத்திலும் இன விடுதலைக்கான போராட்டத்திலுமே முக்கியமாகத் தங்கியுள்ளது. "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" என்ற கோஷம் 'அடைந்தாற் திராவிட நாடு அன்றேல் சுடுகாடு' என்ற கோஷத்தின் கதியையே நாளை அடையலாம். திராவிடப் பிரிவனை தமிழ் நாட்டின் சுயாட்சி போன்ற கொள்கைகளைக் கைவிட்டதால் தி.மு.க போன்ற சக்திகள் தேசிய சக்திகளாக இல்லாது போய்விடவில்லை. இன்று விடுதலைப் புலிகளின் வர்க்கச் சார்பு பற்றிய கேள்வியே நமக்கு முக்கியமானது. அவர்களது நேச சக்திகள் யார் ? எதிரிகள் யார் ? என்பதை அந்த வர்க்க நலன்களோ தீர்மானிப்பன. இன்னும் பேரினவாத ஒடுக்கலே தமிழ் மக்களை எதிர் நோக்கும் பிரதான முரண்பாடாக உள்ளது. அந்த நிலமை தொடரும் வரை அந்த ஒடுக்கலுக்கு எதிராக விடுதலைப் புலிகள் போராடும் வரை அவர்களது போராட்டத்தின் நோக்கஙகள் பற்றிய நமது ஐயங்களையும் விமர்சனங்களையும் மீறி அவர்கள் ஒரு தேசிய சக்தியாகவே செயற்படுவதை நாம் ஏற்க வேண்டியுள்ளது. அவர்களது போராட்டத்தை நாம் ஆதரிக்க வேண்டுமா இல்லையா என்பது அப்போராட்டத்தின் செல் நெறி பற்றிய நமது மதிப்பீட்டைப் பொறுத்தது. இதில் நமக்குள் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம் ஆயினும் அவர்களை ஆதரிப்பதற்கோ எதிர்ப்பதற்கோ அவர்கள் தேசிய சக்தியா இல்லையா என்ற கேள்வியை மட்டுமே நாம் பயன்படுத்த முடியாது.

விடுதலைப் புலிகள் தேசிய சக்திகளல்ல என்போர் அவர்களை பாசிசசக்திகள் என்று அழைப்பதைக் கேட்டிருக்கிறோம். பாசிசம் என்பது தேசிய வாதத்தின் மிகவும் கொடூரமான வடிவமாக இருக்கையில் தேசிய சக்தியல்லாத ஒரு இயக்கம் பாசிச சக்தியாக எவ்வாறு விருத்தியடைய முடியும் ? அவர்களை பாசிச வாதிகளாக கருதுவோர் பாசிசம் பற்றிய ஆழமான அறிவின் பேரில் அவ்வாறு கருதுகிறார்களெனத் தெரியவில்லை. சர்வாதிகார அரசியற் போக்கும் அடாவடித்தனமும் எதேச்சாதிகாரமும் மட்டுமே பாசிசத்தின் அடையாளங்களாயின் தம்முள்ளும் சக இயக்கங்களுடனும் கருத்து முரண்பாடுகளைத் தீர்க்க முக்கிய இயக்கங்கள் கைகொண்டுள்ள நடைமுறைகள் நமக்கு எதை உணர்த்துகின்றன ? பாசிசவாதி என்பது வசைச்சொல்லாக ஸ்ராலின்வாதி, ட்றொஸ்கியவாதி, குட்டி பூர்ஷ்வா போன்ற பதங்கள் எவ்வாறு எதிராளிகளை மட்டந்தட்டும் நோக்குடன் மட்டுமே பயன்படுகின்றனவோ அவ்வாறு கவனயீனமாகப் பயன்படுகிறது. ரொமெனிய சர்வாதிகாரியாக இருந்து 1989ல் பதவியிழந்து மரணதண்டனைக்காளான சாஸெஷ்குவையும் 'மாக்ஸிய பாசிசவாதி' என்று சிலர் அழைத்துள்ளனர். இவை பாசிசம் பற்றிய அறிவு போதாமையாலோ தெளிவீனத்தாலோ நேர்வன

தொடர் பக்கம் 32



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அயோத்தி:

சி. வசந்தன்



# வரலாற்றில் ஏற்படுத்திய காயம்

இந்தியா என்ற தேசத்துள் எரிமலையாக கணகணத்துக்கொண்டிருந்த அயோத்தியா பிரச்சனை டிசம்பர் மாதம் 6ம் திகதி 2,இலட்சம் இந்துவெறியர்கள் பாபர் மசூதியை இடித்து தரைமட்டமாக்கியதில் இருந்து மதக்கலவரகள் தீப்பிழம்புகளாக வெடித்து சிதறி இந்தியாவையே எரித்துக் கொண்டிருக்கிறது. இதுவரை 1000 க்கு மேற்பட்ட மனிதப்பலிகளையும் இலட்சக்கணக்கான பொருட்சேதத்தையும் இக்கலவரம் விளைவித்துள்ளது.

அரசியல் அதிகாரப்போட்டிகள், இன,மத வெறி பயங்கரங்கள், இலஞ்சம்,ஊழல் போன்றவற்றுள் சிக்கி சிதைந்து கொண்டிருப்பதுதான் இன்றைய இந்தியா.

இந்துமதவெறியர்கள் "இந்து,இந்தியா,இந்தி" என்ற கோசத்தை அடிப்படையாக வைத்து இந்தியா முழுவதையும் "இந்து இராச்சியம்" ஆக்க வேண்டும் என்ற வெறியினால் சிறுபான்மை மதத்தவர்களான முசுலீம்களை இந்தியாவில் இருந்து துரத்துவதற்காகவும், அரசியல் சாயம் பூசிக்கொண்டுள்ள இந்து மதவெறிக்கட்சியான பாரதிய ஜனதா கட்சி இந்தியாவின் ஆட்சிக்கட்டிலில் குந்துவதற்காகவும் எழுப்பிய பிரச்சனையே ராமஜென்ம பூமி விவகாரம்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இராமாயணக்கட்டுகதைகளில் இருந்தும், புராணங்களில் இருந்தும் ராமர் கோயில் இப்போது பாபர் மசூதி இருக்கும் இடத்தில்தான் இருந்தது என்று இந்து மதவெறியர்கள் கூறுகிறார்கள். ஆனால் வரலாற்று ஆய்வாளர்கள் பலரும் பாபர் மசூதி இருக்கும் இடத்தில் ராமர்கோயில் இருந்தற்கான ஆதாரங்கள் இல்லை என்று கூறுகிறார்கள். இதனால் உயர் நீதிமன்றம் இவ்விவகாரத்தில் தனது தீர்ப்பை அறிவிக்கவேண்டும் என்று மதவெறி பயங்கரத்துள் தம்மை ஈடுபடுத்திக்கொள்ளாத பலரும் எதிர்பார்கிறார்கள். முசுலீம் மதத்தவர்கள்கூட கி.பி.1528 இல் ஏற்கனவே இருந்த ராமர் கோயிலை இடித்துத்தான் மசூதி கட்டப்பட்டது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கினால் பாபர் மசூதி மீது உரிமை கொண்டாடுவதை விட்டுவிடுகிறோம் என்று பெருந்தன்மையுடன் நடந்து கொண்டார்கள். ஆனால் விடுவார்களா இந்து மதவெறியர்களும் இதையே பிழைப்பாகக் கொண்டு அரசியல் நடத்தும் பாரதிய ஜனதா கட்சியினரும். ராமர் கோயிலை இடித்து மசூதி கட்டப்பட்டதா என்பதை நிர்ணயிக்கும் உரிமை நீதிமன்றத்திற்கு இல்லை மதவிவகாரங்களிலெல்லாம் நீதிமன்றம் தலையிடக்கூடாது என்று சாதிக்கிறார்கள். உண்மையில் நீதிமன்றத்தீர்ப்பு தங்களுக்கு சாதகமாக அமையாது போய்விடும் என்ற பயமே இதற்குக்காரணம். ஏனென்றால் இப்போதுள்ள பாபர் மசூதியுள் ராமர் சிலையை கள்ளமாக கொண்டுபோய்வைத்தவர்களும் அவர்களே.

1991ம் ஆண்டு அக்டோபர் மாதம் இந்துமதவெறியர்கள் முதல் கரசேவையை ஆரம்பித்தார்கள் அதன் நோக்கம் பாபர் மசூதி இருக்கும் இடத்திற்கருகில் இந்துக்கள் இதுவரை வழிபட்டுவந்த ராமர் கோயில்கள் சிலவற்றை இடித்து தரைமட்டமாக்கியதே இல்லாவிட்டால் யாரவது அவற்றுள் ஒன்றுதான் இந்து மதவெறியர்கள் கூறும் ராமர் கோயில் என்று கூறிவிட்டால் பாபர் மசூதியை இடிக்கும் தங்கள் கனவு வீணாகிபோய்விடுமே என்பதே காரணம். பின்னர் 1992 யூலையில் தங்களது அடுத்த கரசேவையை தொடங்கி பாபர் மசூதியை இடித்து ராமர் கோயிலை கட்டுவது என்று அறிவித்தார்கள்.

பிரதமராய் பதவியேற்ற நாளிலிருந்தே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எந்தப்பிரச்சனைகளாயிருந்தாலும் ஆறப்போட்டு முடிவெடுக்கமுடியாது திண்டாடி, சித்துவேலைகள்புரிந்து காய்நகர்த்தும் நரசிம்மராவ், இந்து வெறியர்களின் கரசேவை அறிவிப்பால் சுடலை ஞானம் வரப்பெற்றவராய் விழித்தெழுந்து இந்து மதவெறி சாமியார்களுடன் நான் இந்து என்றும் சாத்திர வேதங்கள் அறிந்தவன் என்றும் எல்லாவற்றையும் கவனிக்கிறேன் ஒரு மூன்று மாதகால அவகாசம் கொடுங்கள் என்று சமசுகிருதத்தில் உச்சாடனம் செய்து சாமியார்களை மகிழ்வித்தார். அதே சமயம் மறுபுறத்தில் முசுலீம் தலைவர்களைச் சந்தித்து உருதுவிலும், பாரசீகத்திம் உரையாடி நீங்கள் சற்றுப்பொறுங்கள் எனது சாணக்கியத்தால் எல்லாவற்றையும் வெல்லுவேன் என்று நம்பிக்கையூட்டினார். இறுதியில் 3 மாதகால கேடு முடிந்துவிட்டது. இந்துமதவெறியர்கள் டிசம்பர் 6ம் திகதி மசூதியை இடிக்கப்போவதாக அறிவித்தனர். உண்மையில் நரசிம்மராவ் இம்மூன்று மாதகால அவகாசத்தை எடுத்துக்கொண்டு பல இந்து, முசுலீம் அமைப்புகளுடன் பேச்சுக்களில் ஈடுபடுவதுபோல் காட்டிக்கொண்டு இந்துமதவெறிக் கட்சியான பாரதீய ஜனதாக் கட்சியை பிளவுபடுத்துவதிலேயே குறியாக இருந்து பல தில்லு முல்லுகளை செய்தார். இறுதியில் நரசிம்மராவின் சாணக்கியம் தோல்வியடைந்ததுமட்டுமல்ல இருதரப்பிலும் நம்பிக்கையற்ற நிலைக்கு தள்ளப்பட்டார். கரசேவை குறிப்பிட்டபடி 6ம் திகதி நடக்குமென்று இந்துமதவெறியர்கள் அறிவித்தபோது கூட தாங்கள் பீற்றிக்கொகின்ற மதசார்பற்ற ஜனநாயக நாடு என்ற அளவிற்காவது அதை தடுப்பதற்குரிய ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கையும் செய்யாமல் ராமர்கோவில் கட்டுவதை என்னால் நிறுத்தமுடியாது, நான் பாரதீய ஜனதாவை எதிர்த்துப்போராட முடியும், ராமனை என்னால் எதிர்க்க முடியாது என்று தன்னுள் ஒளிந்துகொண்டிருக்கும் இந்துத்துவத்தை வெளிப்படுத்தினார்.

இந்த வகையில் பார்க்கும்போது முன்னாள் பிரதமர் வி.பி.சிங், முன்னாள் உத்தர பிரதேச முதல்வர் முலாயம்சிங் யாதவாவ் போன்றவர்கள் அயோத்திப்பிரச்சனையில் நடுநிலை வகித்தவர்கள். பாபர்மசூதிவிவகாரத்தில் இந்துவெறியர்களுடன் இந்தளவுக்கு கீழான நிலைக்கு சென்று சமரசம் செய்துகொள்ளாது உறுதியாக நின்றவர்கள். ஆனால் நரசிம்மராவ் அரசு இறுதி நேரத்தில்கூட 500 வருடங்கள் பழமைவாய்ந்த மசூதி இடிக்கப்படப்போகிறது எனத்தெரிந்தும் அதைத்தடுப்பதற்கு உருப்படியான நடவடிக்கைகள் எடுக்காததிலிருந்து இந்துவெறியர்களின் செயல்கள் அவர்களுக்கும் உடன்பாடானதே என்று தெரிகிறது. மசூதி இடிக்கப்பட்டவுடன் அத்வானி கைது, உத்தரப் பிரதேச கல்யாண்சிங் அரசை நீக்கியது என்பதெல்லாம் தாங்களே சொல்லிக்கொள்ளும் 'நடுநிலை' என்பதற்கான வெறும் கண்துடைப்புகளேயன்றி வேறென்ன.

தமிழ்நாட்டில் காங்கிரசிற்கும் அ.தி.மு.க விற்குமுள்ள தேன்நிலவில் கசப்பேற்படத் தொடங்கியதும் நரசிம்மராவ் போன்றவர்கள் சுப்பிரமணியசுவாமி என்ற அரசியல் புரோக்கன் மூலம் ஜெயலலிதாவின் ஊழல்விவகாரங்களை அம்பலப்படுத்தி ஜெயலலிதாவை பதவியிறக்கம் செய்ய நடவடிக்கை எடுத்துவரும் நிலையில் "பட்டத்துராணி" ஜெயா உடனடியாக டெல்லியில் பாரதீய ஜனதாக் கட்சியின் இந்து வெறியன் அத்வானியை சந்தித்து நானும் ஒரு பார்ப்பனிய இந்து உங்களுக்கு எனது ஆதரவை தருவேன் என்று இந்துமதவெறியர்களுடன் கைகோர்த்தார். இப்போ பாபர்மசூதி இடிக்கப்பட்டு இந்தியா எங்கும் இந்துமதவெறி அம்பலப்பட்டதும் தாங்கள் கறைபடிந்தவர்கள் இல்லையென்பதைக் காட்ட கண்டண ஊர்வலங்கள், தன்னிலைவிளக்கக்கூட்டங்களை நடத்துகிறது ஜெயா அரசு. பெரியார் போன்றவளின் கடும்முயறசியாலேயே தமிழகம் இன்னும் மதவெறி என்னும் பயங்கரத்துள் தன்னை இணைத்துக்கொள்ளவில்லை. ஆனால் இபபோது உள்ள திராவிடர் கழகங்கள் பெரியார் கொள்கைக்கு துரோகமிழைத்தே கால்நூற்றாண்டுகளுக்கு மேலாகிவிட்ட நிலையில் தாம்பதவிக்கு வருவதற்காக எந்தளவிற்கு இறங்கவும் தயாராக இருக்கிறார்கள்.

இந்திய ஆட்சியாளர்கள் சிறுபான்மையின, மதத்தவர்களின் உணர்வுகளை புரிந்துகொள்ளாது தங்கள் பதவி வெறிக்காக எப்போதும் இன,மத வெறிகளை தூண்டி குறுகிய லாபமீட்டுவதிலேயே குறியாக இருந்து வந்துள்ளனர். அவர்கள் வளர்க்கின்ற இந்த தீயில் கருகி சாமபலாவது அப்பாவி மக்களென்பதே வேதனைக்குரியது. பாபர் மசூதியை இடித்ததன் மூலம் முசுலீம்களின் வரலாற்றில் ஏற்படுத்திய காயத்தை இன்னொரு மசூதியை கட்டுவதன்மூலம் ஆற்றமுடியாது.

**30** பக்கம் தொடர்

*என்றால் அதை நாம் திருத்திக் கொள்வது பயனுள்ளது.*

*பாசிசத்தின் பிரதான தன்மை வலதுசாரி, தேசியவாத, சர்வாதிகார அரசியலாகும். இனமேன்மை, பிற இனங்கள் பற்றிய இழிவான கருத்து என்பன தவிர்க்க முடியாது அதன் சிந்தனையில் ஒரு பகுதியாகின்றன. ஐரோப்பாவிலும் லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் தென் ஆபிரிக்காவிலும் தம்மைப் பெருமையுடன் பாசிசவாதிகள் எனக் அழைத்துக் கொள்ளும் இயக்கங்கள் உள்ளன. பாசிச நடைமுறையில் சில கொடுஞ் செயல்களைத் சில விடுதலை இயக்கங்கள் வரித்துக் கொண்டுள்ளன. அத்தகைய பாசிசப் பண்புகளையும் பிறமக்கள் விரோத நடவடிக்கைகளையும் மிகவும் வன்மையாகக் கண்டிக்க நாம் தயங்கக் கூடாது. பாசிசவாதி என்ற சொல் வெறும் வசையாகப் பயன்படும் போது அரசியற் தெளிவீனத்திற்கே இடம் ஏற்படுகிறது.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காலம் காலமாக உருவெடுத்த சிங்கள இனவெறி அரசுகளின் இன ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடப் புறப்பட்ட தமிழினத்தில் கணிசமானோர் இன்று அந்நிய நாடுகளிலும் நமது நாட்டிலும் அரசாலும் மற்றும் இயக்கங்களாலும் கருத்துச் சுதந்திரத்தை மட்டுமல்ல, வாழ்வுக்கான அடிப்படை உரிமையைக்கூட இழந்து பரிதவிக்கின்றார்கள்.

இந்த நிலையில் பலர் நாட்டிலும் வெளிநாடுகளிலும் அந்நியமாகியுள்ளதும், பல குடும்பங்கள் –தாய் ஒரு நாட்டில் ..... தகப்பன் ஒரு நாட்டில் .... பிள்ளைகள் வேறு நாட்டில் .... என– பல நாடுகளிலும் சிதறிப்போய் ஒண்டிக் கொண்டுள்ளதும் வேறெந்த இனத்துக்கும் இல்லாத அவலமாகும். இதனை 'உலகெங்கும் தமிழர்கள் பரந்து வாழுகின்றார்கள்', 'உலகெல்லாம் ஒலிக்கும் தமிழ்' என்றெல்லாம் சிலர் (அரசியல் லாபத்துக்காகவும் தமது சுயலாபத்துக்காகவும்) 'பெருமையடித்துக்' கொள்ளலாம். இப்படி சொல்வதனால் அவர்களது உரிமைகளை, அதற்காக அவர்கள் போராட வேண்டிய நிலைமையை மாற்றி ஒரு புளகாங்கித நிலையில் வைத்துள்ளமை வருந்தத்தக்கதே. இது பல வர்த்தக நோக்கமுள்ளவர்களாலும் பல வெளிநாட்டு பிரயாண முகவர்களாலும்கூட மேற்கொள்ளப்படுகிறது.

இந்நிலையில் வெளிநாடுகள் ஒவ்வொன்றிலுமுள்ள தமிழர்கள், முஸ்லிம்கள் பொதுவாக இலங்கையர்கள் அனைவருமே அந்தந்த நாட்டு அரசுகளாலும், வெளிநாட்டவர்களுக்கு எதிரான அமைப்புகள் இயக்கங்களாலும் தனிநபர்களாலும் தொல்லைகளுக்கு உட்படுத்தப்பட்டு மூன்றாந்தரப் பிரஜைகளாக நடத்தப்படுவதோடு பொருளாதார ரீதியிலும் சுரண்டப்படுகிறார்கள். இதுமட்டுமல்ல அகதிகள்மீதான எத்தனையோ தாக்குதல் சம்பவங்களில் பல அகதிகள் உயிரிழந்தும்கூட நாம் சும்மாவே இருந்து விடுகிறோம். அத்தோடு இப்படி அகதிகளாக உள்ள தமிழ் பேசும் மக்களுக்காக ஒரு அரசியல்சாராத இதயசுத்தியுள்ள சமூகசேவை மனப்பான்மையுள்ள ஒரு அமைப்பை நாம் உருவாக்கி, அதில் எல்லா அகதிகளையும் இணைத்து அவர்களின் தனிப்பட்ட பொதுவான (அகதி சம்பந்தப்பட்டதும் தொழில் வதிவிடப் பிரச்சனைகளும் அதன் விளைவுகளுக்குமான) பிரச்சனைகளில் கரிசனையோடும் சமுதாய நோக்கோடும் உதவ முன்வராதிருப்பதுவும் ஒருபெரும் சாபக்கோடாகும்.

எமது நாட்டிலுள்ளவர்களுக்கு அந்நிய நாடுகளில் உள்ள அநேகமானோர் தமது கஸ்டங்களை, தமது நிரந்தரமில்லாத் தன்மைகளை, தாம் சுரண்டப்படுவதை, தாம் பயமுறுத்தப்படுவதை, தம்மில் பலர் தாக்கப்பட்டதை, தம்மில் சிலர் சாகடிக்கப்பட்டதை தெரிவிப்பதில்லை. இதனை ஒரு கௌரவக்குறைவாகவும், அதேநேரம் தாம் வெளிநாட்டில் ஆடம்பரமாகவும் வசதியாகவும் சந்தோசமாகவும் இருப்பதாகவும் காட்டிக் கொள்வதனால் நாட்டிலுள்ள இன்னும் பலருக்கு புலம்பெயரும் எண்ணம் மனதை சதா அரித்துக்கொண்டே இருக்கிறது.

நாளை விடியுமா? என்பது கூட நிச்சயமற்றதான நிலமை பெரும் மனவிரக்தியை அளிக்குமல்லவா? சமுதாயமாக தாய், தகப்பன், சகோதரம், துணைவன், துணைவி மற்றும் உற்றார் உறவினர் பெரியோர் போன்ற பலரின் ஆசியும் ஆலோசனையும் வழிநடத்துதலும் உள்ள ஒருவனோ அல்லது ஒருத்தியோ பிரிந்திருந்து தனித்து பிரச்சனைகள் பற்றி யோசிப்பதும் தாங்குவதுமானது மனதைப் பாதிப்பதும் விரக்தியடையச் செய்வதும் இதனால் பலர் மதம் மாறல்களும், சமூகவிரோத செயல்களும், மதுவுக்கு அடிமையாதலும் மாதுவுக்கு அலைதலும், பாலியல் படங்களில் லயித்துவிடுவதும் தனிமையை விரும்புவதும் தற்கொலையை நாடலும் எமது இளம் சமுதாயத்தை ஆரோக்கியமற்றதாக்கும் விடயங்கள் என்பது வேதனைக்குரியதல்லவா.?

இதற்காக ஒவ்வொரு நாட்டிலும் உள்ள புத்திஜீவிகள், சமூக நலன்விரும்பிகள் ஒரு அமைப்பாக சேர்ந்து இப்படியானவர்களுக்கு நேரிலே உதவுவதும் ஒரு குறிப்பிட்ட நேர நியமனத்தோடு தொலைபேசி மூலமான தகவல் தருநிலையமாகச் சேவை செய்வதும் மிகச்சிறந்த பலன்தரும் விடயங்களாகும். இவற்றில் பிரதேச அரசியல், தமிழ், முஸ்லிம் வேறுபாடு இருக்கக் கூடாது.

இத்தகைய அகதி வாழ்வில் நாம் நமது இனஅடையாளங்களை எமது கலை கலாச்சாரம், பண்பாடு, மொழி, மதம் போன்றவற்றை அலட்சியம் செய்வதும், மறந்து விடுவதும் ஏளனம் செய்வதும் பல இளம் சந்ததியினரிடையே காணக் கூடியதாக உள்ளது. உலகிலுள்ள ஒவ்வொரு சமுதாய இனங்களும் தமக்குரிய மொழி, கலை, கலாச்சாரம், பண்பாட்டைப் பேணி வரும்போதும் அவற்றையே பெரியதெனவும் முதன்மைப்படுத்தியும் வரும்போது நமது கலை, கலாச்சாரங்களை பல மேலை நாட்டவரே மெச்சும்போதும்

**வெளிநாடுகளில் தமிழர்களின் அந்நியமாதல்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாராட்டும்போதும் ஒரு சிலர் அதனைக் கைக்கொள்ள முன்வரும்போதும் நாம் ஏன் எமது பண்பாட்டையிட்டு வெட்கப்பட வேண்டும் ?

அப்படி வெட்கப்படுவதாயின் சீதனம், பெண்அடிமை, சாதிமுறை, முதலாளிகளையும், பதவியாளர்களையும் துதிக்கின்ற இயல்புகளுக்காக வெட்கப்படலாம். இப்படி எதுவுமே மற்ற சமுதாயங்களில் இல்லை என எம் இளம் சந்ததியினர் கருதுவதே இதற்குக் காரணம் என நினைக்கத் தோன்றுகிறது. எனவே மேலைத்தேய கலாச்சாரத்தில் மூழ்க நினைப்பவர்கள் இந்த குறைபாடுகளை ஒழித்து எமது முற்போக்கான சமுதாயக் களத்தில் இணைய முன்வரவேண்டும். நாம் எம்மை நிறவேற்றுமை காட்டுவதை எப்படி கோபித்து எதிர்க்கிறோமோ அதைவிட எந்த நிறவேற்றுமையோ குணவேற்றுமையோ தெரியாத தமக்கென எந்தவிதமான தனித்துவமான அடையாளங்களையும் கொண்டிராத அதே நேரம் திட்டமிட்டே மற்றவர்களால் தாழ்த்தப்பட்டு அடக்கப்பட்டிருந்த சாதி முறையை நாம் எப்படி அங்கீகரிக்க முடியும் ? இது தமிழர்க்குள் காணப்படும் ஒரு சாபக்கேடு என்று கவலை கொள்ள வேண்டாமா ?

எமது இளம் சந்ததியினர் பலர் இயக்கங்களின்மீது வெறுப்படைந்து அதிலிருந்து வெளியேறி வந்ததாலும், பலர் இயக்கங்களாலும் அரச துருப்புக்களாலும் மோசமாகப் பாதிக்கப்பட்டதாலும், அவர்கள் நாட்டுப்பற்று, இனப்பற்று, சமுதாயப்பற்று, நன்நோக்கு எதுவுமே இல்லாத வெறும் மனித இயந்திரங்களாக, சுயநலப்போக்கு மிக்கவர்களாகக் காணப்படுகின்றனர். இதனால் வலிமை, ஆற்றல், உழைப்பு மிக்கதொரு இளம் சந்ததியின் (நாட்டிற்கும் இனத்திற்கும் சமுதாயத்திற்குமான) பங்களிப்புகளும் பொதுநல சிந்தனைகளும் வீணடிக்கப்பட்டு மறுக்கப்பட்டு யாருக்கும் உதவாத வகையாகப் போய்விடக் கூடிய அபாயம் உள்ளது.

அந்நிய கலாசாரத்தில் மூழ்கிவிட்டோம் மூழ்கப்போகிறோம், ஐரோப்பிய பண்பாடு என தம்பட்டம் அடித்துக்கொள்ளும் அதே சிலர் பூப்புனித நீராட்டு விழா, திருமணம் என்பனவற்றை கோலாகல நிகழ்வுகளாக கொண்டாடுவதும் பெரும் அதிர்ச்சியையே அளிக்கிறது.

மிக அமைதியாக எதனையும் கொண்டாட நினைக்கும் இந்நாட்டு மக்களுக்கு இது மனதில் ஒரு வெறுப்பை ஏற்படுத்தலாம் என்பது எனது தனிப்பட்ட எண்ணம். அகதிகளாக வந்த நாம் வதிவிட அனுமதி பெறாமலே இப்படி மாபெரும் களியாட்டங்கள்போல கொண்டாட்டங்களை நடத்துவதும், சொந்தக் காலிலேயே ஒவ்வொருவரும் நிற்ககூடியதான ஐரோப்பிய பொருளாதாரத்தில் பணத்தை எதிர்பார்த்து திருமணம் பிறந்தநாள்விழா கொண்டாடுவதும் தவிர்க்கப்படலாம் என நினைக்கிறேன். திருமணத்தை, பிறந்தநாளை இதற்காகக் கொண்டாட வேண்டாமென்றில்லை. ஆனால் சிக்கனமாக கொண்டாடலாமல்லவா ?

மற்றையது சீரழிவுச் சினிமா ! இலங்கைத் தமிழர் இன்னல்படுவதைக் காணாத எந்தக் கமாராவும் இயக்குநரும் தயாரிப்பாளரும் கருவில்லாத வெறும் மசாலாப் படங்களையே படமாக்கி பிழைத்து வருகிறார்கள். இதனை எம்மவரும் ஊக்குவிப்பதானது கவலைக்குரியதே. அல்லாமலும் நாம் படும் துன்பங்களும் அவலங்களும் தமிழக சினிமாவின் நகைச்சுவைக்கும் கிண்டலுக்கும் உள்ளாக்கி இருப்பதானது கவலை தரும் விடயமாகும்.

உ - ம் . 'இலங்கை இனப்பிரச்சனை போல இழுபட்டுக் கொண்டே இருக்கிறது' என்பதும், 'ஸ்ரீலங்கா ... ஸ்ரீலங்கா ... கொப்பறத் தேங்கா' என்பதும், அண்மைய படமொன்றில் இலங்கையிலிருந்து வந்த அகதிகள் (அவர்கள் உண்மையான அகதிகளல்ல எனக் காட்டப்பட்டுள்ளனர். கண்டியிலிருந்து வந்ததாக பாத்திரங்கள் பேசிக் கொள்கின்றன) இலங்கைத் தமிழ் பேசுவதுபோல நடிப்பது, இலங்கைத் தமிழை கொச்சையாக்குவது ........ போன்றவை. மேலும் பஞ்சு அருணாசலம் 'இலங்கையில் தமிழ்ப் படங்கள் இறக்குமதிக்கு அரசு விதித்த தடையே போராட்டத்துக்கு காரணம்' என முட்டாள்த்தனமாக பேட்டி கொடுத்ததையும் நாம் அறிந்தும் எதுவித எதிர்ப்பும் இன்றி இருந்து விட்டோம். இவற்றிற்கு நாம் இலங்கையர்கள் என்ற வகையில் எதிர்ப்புக் காட்ட முடியாதா ? மாறாக அந்த சினிமாக் கலைஞர்களை அழைத்து மாலை, மோதிரம், சங்கிலி அணிவித்து 'மானசீக திருமணம்' செய்ய நினைக்கின்றோம் நமது அகதிகள் நாட்டில் படும் வேதனையை உணர்கின்றோமா?

வட - கிழக்கு பகுதியில் இந்திய சினிமாக்களுக்கு தடைவிதித்துள்ள புலிகள் இயக்கத்தை இவ்விடயத்தில் பாராட்டலாம். ஆனால் அண்மையில் 'சுவிஸ் தமிழர்' என வெளிவரும் பத்திரிகை ஒன்று அதிகமாக சினிமாவுக்கே முக்கியத்துவம் கொடுத்துள்ளது. ஐரோப்பாவில் வாழும் ஈழத்தமிழரையும் தமிழ்நாட்டுப் பாமர மக்கள்போல 'சினிமாவே உலகு! சினிமா நாயகர்களே அரசியல், சமய, மொழி சமூகத்தவர்கள் என்ற நிலைக்கு மாற்றிவிடுவதோடு சினிமா பார்த்தே பேசப்பழக, பண்பாட்டை கலாசாரத்தை அறிய வேண்டுமென்ற நிலைக்கு மாற்றிவிடும். இவற்றை ஐரோப்பாவில் தடுக்க வழி என்னவென்பதை இட்டு நாம் சிந்திக்க வேண்டும்.

மேலே ஆராயப்பட்ட பிரச்சினைகள் சுமத்தும் கடமைக்கு ஒவ்வொரு சமூக நலன் விரும்பியும் பதில் சொல்லவேண்டியே இருக்கிறது.

● தனங்கிளப்பூர் ஆனந்தராசா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பதுங்குகுழி முகவரிக்கு .......

குண்டுகள் விழுங்கிய
விமானத்தின் இரைச்சலில்
பொழுதொன்று
பங்கருக்குள் வீசப்படும்.
நட்சத்திரங்கள் உதிர்ந்த
வானம்
கவிழ்ந்து
தலைமேல் கிடக்கும்
பயம் கௌவும்

தென்றலுக்கும்
அசைந்தாட அஞ்சி
மனிதக் காட்டுக்குள்
அமைதி நிலவும்
உயிர்கள் ஓடிந்து
பிணமாய் வீழும்
ஓலங்கள் கேட்கும்
மிருகங்கள்
மோந்து திரியும்
அச்சம் கௌவும்.

மீண்டும் நீங்கள்
கூனிக்குறுகி
நடந்து திரிவீர்கள்
பேச மறுப்பீர்கள்
சோகங்களைச் சுமப்பீர்கள்

இங்கோர்
பரந்து விரிந்த வானில்
நட்சத்திரங்களை
கண்கள் தேடும்
பருவகாலங்கள் விரலசைக்க
நீள்வதும் குறுகுவதுமாய்
பொழுதுகள் இயங்கும்
கடிகார முள்ளில்
எம் வாழ்வு
தொங்கும்.
காலங்கள் தொலையும்.

நிறவெறி எம்மை
துரத்தும்போது
துருவம்வரை நாம்
ஓட நினைப்போம்.

இடைவெளி நீளும்
நினைவுகள் மீள
மீண்டும்
கூனிக்குறுகி
நடந்து திரிவோம்.

வேலையும்
நித்திரையும்
பொழுதைப் பங்கிட்டுக் கொள்ளும்.

சிந்தனை மழுங்கி
உணர்வுகள் சாக
தேய்ந்து தேய்ந்து
ஓர் வளர்ச்சிக்காய்
இரகசியக் கனவுகளுடன்
நாம்,
ஓர் விடிவிற்காய்
நீங்கள் ஏங்குவது போல !

பாலமோகன் *

www.tamilarangam.net

**சிறுகதை**

"டமார்" என்றொரு பயங்கர சத்தம் என்னைத் திடுக்கிட்டு எழுந்து உட்கார வைத்தது. நான் உயிருடன்தான் இருக்கிறேன் என்றால் இது வேறு ஏதோ சத்தம். அக்காதான் குசினிக்குள் எதையோ போட்டு உருட்டிக்கொண்டிருக்கிறாள். கரண்ட் இல்லாமல் போன நாள் தொடக்கம் வேலை இல்லாமல் அரைப்பட்டினியும், முழுப்பட்டினியுமாய் நித்திரையே வாழ்வதற்கு எனக்கு ஒரே ஒரு வழியாகிவிட்டபோது நித்திரை குழம்புவது எனக்கு பெரிய சித்திரவதை. முன்னர் என்னவோ மனம் மட்டும் உற்சாகமாய் தான் இருந்தது. எமது வாழ்க்கையிலும் ஒரு விடிவு பிறக்கும் என்ற நம்பிக்கை தளர்ந்து இந்த தற்கொலை மனம் எப்படி வந்தது. இந்த மனநிலை எனக்கு மட்டுமா? ரகு கூட இப்படித்தான் நினைக்கிறான். "மனிதனாக வாழ்வதற்கு எங்களுக்கு ஒரு காலம் இல்லாமலே போய்விடும் போலிருக்கிறதடா" அவன் சொல்ல வந்த வார்த்தைகளை நிறுத்த வேண்டும் என்பதற்காக நான் அர்த்தமில்லாத உற்சாகப் பேச்சில் இறங்கினேன். ஆனால் அவன் தனது பேச்சிலேயே தொடர்ந்தான்.

"இந்த உலகில் எமது இருப்பைக் காப்பாற்றிக் கொள்வதற்காக சொற்பமாக சேகரித்து வைத்திருக்கும் மனிதம் அடித்து விரட்டப்படும் போது, நசுக்கப்படும்போது நாம் வளர்க்க நினைத்த மானுடம் வாழும் என்ற நம்பிக்கையை இன்னும் வைத்திருக்க முடியுமா? மூடிய எமது உதடுகள் இறுக்கிக் கொள்ளுமா? அல்லது துப்பாக்கிக்குண்டுகளை விழுங்கி-துரோகியாய் ஒரு நாள், எம்மை அறிந்திராத ஓர் ஊரின் காக்கை எம் கண்ணைப் பிடுங்கி உதிரம் தோய்ந்த மண்ணில் புரட்டும்-இதைவிட சமுத்திரத்திற்கு எம்மை இரையாக்கி தற்கொலை எண்ணிக்கையில் இடம் பிடிக்கலாம்."

கண் விழித்தவுடன் இந்த நினைவுகள், வயிற்றைத் தின்னும் பசிக்கு மேலாய் எப்படி பிடுங்கித் தின்கிறது. பசி! ஓ! அக்கா சமைக்கிறாளோ? எப்படி? வீட்டில் என்ன இருக்கிறது சமைப்பதற்கு எம் சுற்றாடலில் யாரிடமும் எதுவும் இல்லை. பனம்பழம் புளியங்காய் சீவியம் நடக்கிற இடம் எப்படி கடன் கிடைக்கும். ஆவல் கால்களை இழுக்க குசினிப்பக்கம் போனேன்.

மரத்தட்டிலிருந்த பேணி, போத்தல் எல்லாம் கீழே இழுத்துப்போட்டு அக்கா ஒவ்வொன்றாக திறந்து ஆராய்ந்துகொண்டிருந்தா. அக்காவின் நோக்கம் எனக்கு தெரிந்தது. ஒவ்வொரு பேணியாகத் திறந்து மூடும்போதும் அவள் முகத்தில் தோன்றி மறைந்த உணர்ச்சிகள் என் முகத்திலும் பிரதிபலித்துக்கொண்டிருந்தது என்பது எனக்குப் புரிந்தது. எனக்கு அக்கறையற்ற விசயம்போல் "அக்கா என்ன புதைபொருள் ஆராய்ச்சியா?" என்று சிரிப்புடன் கேட்டேன். பதிலின்றி நிமிர்ந்து என்னைப் பார்த்து மெலிதாகப் புன்னகைத்துவிட்டு தனது வேலையில் தொடர்ந்தாள்.



# பசி தீர்ந்தது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அக்கா! செல்வந்த நாட்டின் செய்தி நிறுவனம் ஒன்று தடைகளைத் தாண்டி உயிரையும் பொருட்படுத்தாமல் வீரசாகசம் செய்து எமது பிரதேசத்தில் வந்து நிற்கிறதாம். உன்ரை புன்னகையோட எமது கோலத்தைப் படம் எடுத்து அவனுடைய பத்திரிகையில் போட்டான் என்றால் ஓகோ என்று விற்கும். "உறா! உறா!" என்று நானும் சிரித்தேன். சிரிப்பு என்பது மகிழ்ச்சியின் வெளிப்பாடு என்று யார் சொன்னது?

"சும்மா தேவையற்ற கதை கதைத்து இருக்கிற சக்தியையும் வீணாக்காதே. ஏய் மனோ இங்கே" என்றபடி அந்த பழைய நெல்பிறே பேணியைத் தூக்கிக் கொண்டு அக்கா வேகமாக எழுந்தாள்.

"பாணடா" நான் ஒரு எட்டில் உள்ளே போய் அதில் ஒரு துண்டு எடுத்து வாயில் போட்டேன். இது பாணா? வாயிலிருந்து திரும்பக் கையில் எடுத்துப் பார்த்தேன். எனது சந்தேகம் அக்காவுக்கும் வந்திருக்க வேண்டும். "நீண்ட நாள் பாண் இப்படித்தான் இருக்கும் சாப்பிடு தம்பி" என்றவள் வாயில் இருந்த பாணை வெளியே துப்பிவிட்டு "நானும் ஒரு தாயா?" என்று விம்மி அழுதாள். எனக்கும் அப்போதுதான் நெஞ்சில் சுருக்கென்றது.

வெளியில் ஓடிவந்து ரதன்,மீராவைக் கூப்பிட்டேன். அவர்களால் இந்த பாண் துண்டுகளை கடிக்க முடியவில்லை. "அம்மா! தொண்டைக்குள்ளே குத்துது. இடித்துத் தூளாக்கிக் கரைச்சுக் குடிப்பமா?" என்று மீரா சிணுங்கினாள்.

"இல்லை வேண்டாம். இந்த தண்ணிக்குள்ளே ஊறப்போட்டு சாப்பிடு" அக்கா பிளாஸ்ரிக் கோப்பைகளில் தண்ணீர் கொண்டு வந்து வைத்தாள் "நல்லாய் இருக்கு அம்மா. மீனா, ரூபன், ரூபிக்கும் கொடுப்பமே"
"ஏய் சத்தம் போடாமல் சாப்பிடு. பிறகு எங்களுக்குப் போதாமல் போய்விடும்" ரதன் மீராவை மிரட்டினான்.

இதைக் கேட்டு அக்காவின் முகம் மீண்டும் வாடியது. "ரதன் இது என்ன பழக்கம். அதுகளும் நேற்று முழுக்க ஒன்றும் சாப்பிடவில்லை. போய் கூட்டிக்கொண்டு வா" ரதன் பக்கத்து வீட்டிற்குப் போனான்.

அக்காவின் வேதனை எனக்கு விளங்கியது. தகப்பனை அகாலமாக இழந்த இந்த குழந்தைகளின் உணர்வுகள் பற்றி அவள் பெரிதாக கவலையடைகிறாள். ஒரு குழந்தையின் குணத்தை அவள் தாயினால் மட்டும் வளர்த்துவிட முடியுமா? இல்லையே. "அக்கா! இவர்களுக்குரிய அடிப்படை உரிமையான உணவைக்கூட எங்களால் கொடுக்கமுடியவில்லை. ஆனால் நல்ல உணர்வுகளை மாத்திரம் எதிர்பார்க்கிறோம். நசுக்கப்படும் மனிதனுக்கு வரும் சாதிக்குணம் மாதிரி பசி தீர்க்க உரிமையற்ற இந்த குழந்தைகளுக்கும் ஒரு சாதிக்குணம் வந்துதானே தீரும். 14 வயது வரை செய்யும் தவறுகளுக்கு கடவுளிடம் கூட தண்டனை இல்லை என்று வேதங்களில் சொல்லி வைத்திருக்கிறார்கள். ஆனால் இங்கே பார். இத்தனை லட்சம் குழந்தைகளை பசியிலும் நோயிலும் விட்டு தண்டனை கொடுப்பது யார்? அதிகாலை எழும்பி பயிற்சி செய்து குரலை இனிமையாக்கி தனது வசீகரக் குரலில், தெய்வீக ஒளி வீசும் தனது முகம் என்ற நினைவுடன் அமைதியாகப் பேசுகிறான் "குழந்தைகளே நீங்கள் முற்பிறப்பில் செய்த பாவத்தினாலேயே இன்று துன்பப்படுகிறீர்கள். பட்டினி கிடந்தாலும் மற்றவன் சொத்துக்கு ஆசைப்படாதீர்கள்." இவர்கள் பட்டினிக் கூட்டத்தைப் படைப்பார்கள் பின்னர் ஒன்று சேர்ந்து முகாம் அமைத்து சேவை புரிவார்கள்-நிவாரணம் வழங்குவார்கள்...... பட்டினிக் கூட்டம் இல்லாமல் போனால் இவர்களுக்கு மறுபிறப்புக்கு புண்ணியம் தேடிக்கொடுப்பது யார்?.........

மனோ! சத்தம் போடாதே. வெளியில் யாராவது கேட்கப்போறாங்கள்" என்ற அக்கா முன்னுக்கு அவசரமாய் போய் " என்னென்டால் தேவி, சும்மா குசினிக்குள்ளே போய் தேடினேன். ஒரு பேணிக்குள்ளே வறுத்த பாண்துண்டுகள் இருந்தது. அதுதான் பிள்ளைகளுக்குக் கொடுப்பம் என்று கூப்பிட்டனான்."
"மெய்யே! நீங்கள் இவ்வளவு நாளும் காணேல்லையோ!"
புதையல் கண்டமாதிரி இவர்களுடைய சிரிப்பைப்பார்த்து எனக்கு இப்போது ஆத்திரம்தான் வந்தது.
"இல்லை தேவி நான் நினைக்கிறேன்,இது அம்மாதான் வைத்திருக்கிறா. கூலிக்கு போன கடைசி நாட்களிலை அவவுக்கு பாண் சாப்பிட நெஞ்சுக்குள்ளே எரிகிறது என்று சாப்பிடாமல் பாணைக் கொண்டு வருவா. அதிலே மிஞ்சினதைத்தான் வாட்டி காய வைத்து வைத்திருக்கிறா...."

ஓம் தேவி அக்கா. அம்மாவோட உடம்பு பாணிலேயும் வெறும் தேத்தண்ணியிலேயும் தானே சீவித்தது. அதுதான் அவவால எங்களுக்காக பாணையே சேகரித்து வைக்க முடிந்திருக்கிறது.

எல்லோருடைய சிந்தனையும் அம்மாவையே சுற்றி வந்தது. வேலியில் மாட்டியிருந்த அந்த கூடையை நோக்கி எல்லோருடைய கண்களும் திரும்பி நிலைபெற்றது. கேட்பாரற்றுக் கிடப்பது போலிருந்த அது மாத்திரமே அம்மாவின் ஞாபகச்சின்னமாய் இந்த மூன்று மாதமாய் எங்கள் கண்களுக்கு இருந்தது.

"இவ்வளவு கஸ்ரப்பட்டும் என்ன பிரயோசனம். பாக்கியம் மாமிக்கு கடைசிநேரம் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கக்கூட ஒரு மணி அரிசி எங்களிடம் இல்லை. இந்தளவுடன் அந்த மனுசி போய்ச்சேர்ந்தது புண்ணியம்தான். எல்லாப்பக்கத்தாலேயும்

www.tamilarangam.net

எங்களைத்தான் இடிக்கிறாங்கள். பார். ஆண்டவன் எண்டாலும் ஆண்டுகொண்டிருக்கிறவன் எண்டாலும் எங்கட வயித்திலதான் நெருப்பை மூட்டிறாங்கள். தேவி அக்கா ஆத்திரமும் அழுகையுமாய் புலம்பிக் கொண்டிருந்தாள்.

தேவி அக்கா இப்படித்தான் இனி இப்போதைக்கு ஓயமாட்டா. யோசித்து யோசித்து ஏதாவது ஆத்திரப்பட்டு கத்திக்கொண்டிருப்பா. அக்கா அமைதியாக கேட்டுக்கொண்டு புன்னகையோட இருப்பா. அத்தானின் மரணத்திற்குப் பின்னர் தோன்றிய இந்த சோகப் புன்னகை அவளுடன் ஒட்டிப்பிறந்த மாதிரி நிலை நின்றுவிட்டது.

"நீ யோசிக்காதே தேவி அக்கா. பிறகு இன்னும் நாலுபேர் சேர்ந்து யோசித்து ஏதாவது பாபச்செயலில் இறங்கி மற்றவனுடைய வாழ்க்கையில் சிக்கலை உண்டாக்கி போடுவீங்கள். பேசாமல் ஆண்டவன் திருவடியில் வேண்டிக்கொள். மறுபிறப்பில் உயர் குடும்பத்தில் பிறக்கவேண்டும்....

ஏன் தேவி இவனிட்டை வாயைக் கொடுத்தனீர். நேற்று அம்மன்கோவில் பாலாபிசேகம்தானே. அங்கே பிரசங்கம் கேட்டுவிட்டு வந்திருக்கிறான். அவனை விடு உன்ரை மனுசன் வவுனியாவிலிருந்து இன்றைக்கு வருவாரோ? இனி வவுனியா வியாபாரமும் செய்ய முடியாதாம்.

அதுதான் நெஞ்சை இடித்துக்கொண்டிருக்குது சரோ. பார் இன்னும் வரவில்லை. 5 லீற்றர் மண்ணெண்ணெய்யை இந்தப்பாடுபட்டு கொண்டு வந்து சாப்பிடுவது தேவையோ. பிள்ளையளோடை செத்துப்போகலாம் போலிருக்கிறது. போதாததற்கு இந்த ஆள் யாரிடமாவது நியாயம் கதைத்து வம்பு வாங்கிக்கொண்டுவருவாரோ என்றும் பயமாயிருக்கிறது. இன்னும் நாங்கள் நல்ல காலத்திலே நம்பிக்கை வைத்துக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பார் இதுதான் அதிசயம். ஒழுங்கையிலேயே கண்ணை வைத்துக் கொண்டிருந்த தேவிஅக்கா அவசரமாக எழுந்துபோனா.....
அங்கே மோகன் வந்துகொண்டிருந்தான். அவனை சூழ்ந்து பக்கத்தில்போன எல்லோருடைய கண்களும் எல்லாவற்றையும் துருவிப் பார்த்து, அவன் முகத்தையும் பார்த்த போது எதுவோ நடந்திருக்க வேண்டும் என்று உணர்ந்து கொண்டோம்.

மோகன் எதுவும் பேசாமல் ஒரு தென்னை மரக்குத்தியில் போய் அமர்ந்தான். தேவி அக்காவும் தொடர்ந்து போய் என்ன? என்று கேட்டுக்கொண்டிருந்தா. மீனா ஓடிப்போய் அவன் மடியில் ஏறியிருந்து "அப்பா! அரிசி கொண்டு வரவில்லையோ?" என்று கேட்டாள்.

ஓ! இவன் அரிசி வியாபாரத்தடை தெரியாமல் அகப்பட்டுக்கொண்டிருக்கிறான். என்ன நடந்திருக்கும் என்பது எமக்கெல்லோருக்கும் விளங்கிவிட்டது.

"எனது சுசுரநிலையை கருத்தில் கொண்டு அபராதம் கட்டுவதிலிருந்து எனக்கு விலக்களித்திருக்கிறார்களாம்." அவன் பைத்தியக்காரன் போல் வானத்தைப்பார்த்து சிரித்தான். அக்காவும் தேவிஅக்காவும் ஏமாற்றமும் வேதனையும் மண்டிய முகத்துடன் வீட்டை நோக்கிப் போனார்கள். நான் மோகன் முன்னால் போய் நின்றேன். எனது நடுங்கும் கைகளை ஒன்றுடன் ஒன்று சேர்த்து இறுக்கிக் கொண்டேன். என் கைகள் பலவீனத்தால் மட்டும் நடுங்கவில்லை என்பதை மோகன் பார்த்து சிரிப்பை நிறுத்திக் கொண்டு, "என்ன மனிதாபிமானம் பார்த்தியா? அதைவிடு..." என்றான்.

பொம்மர் சத்தமும், படுவேகமாக வரும் வாகன சத்தமும் கேட்டது. நாங்கள் பேச்சை நிறுத்தி அமைதியானோம். ஒழுங்கை முலையில் "சர்" என்று பிரேக் போட்டு வாகனம் நின்றது. "சட ......சட" என்று வெடிச்சத்தங்கள் கீழிருந்து தொடர்ச்சியாக மேலே எழும்பியது. பிள்ளைகள் ஓடி வந்து கட்டிப்பிடித்துக் கொண்டார்கள். நாங்கள் சிறிது நேரத்தில் எழும்பிப் பார்த்தபோது பொம்மர் போய்விட்டது. அந்த வாகனமும் போய்விட்டது. சில நிமிடங்கள் சென்றிருக்காது மீண்டும் பொம்மர் சத்தம்.....

"எல்லோரும் ஓடி வாங்கோ. குத்திறான் இதிலே தான் போடப்போறான்" தேவிஅக்கா எங்கேயோ நின்று பொம்மரைக் கண்டுவிட்டு பதறித்துடித்து கத்தினாள். ஆனால் அந்த பயங்கரச் சத்தம் உடனே அங்கு அமைதியை உறையவைத்தது.

என் கண்களை சிரமப்பட்டு திறந்தேன். உடம்பு, முகம், கண் எல்லாம் ஒரே மண். ஏதோ நடந்திருக்கிறது. பொம்மர் ஞாபகம் வர, திகிலும்,ஆச்சரியமுமாய் எழுந்து உட்கார்ந்தேன். உடம்பில் சின்னச் சின்ன கீறல்கள்,காயங்கள்தான் இருந்தது. ஆனாலும் வலி அதிகம். கண்களைத் துடைத்துக்கொண்டு எல்லோரையும் தேடினேன்.

மீனாவின் காலில் இரத்தம் ஓடிக்கொண்டு இருந்தது. மயங்கிக் கிடந்தாள். யாரோ இரத்தத்தை நிறுத்த பிரயத்தனம் செய்து கொண்டிருந்தார்கள். உடனடியாக ஆசுபத்திரிக்குக் கொண்டு போக வேண்டும். எப்படிக் கொண்டுபோவது?

அதற்குள் மோகன் ஒரு மாட்டுவண்டிலுடன் வந்து விட்டான். அவனுக்கும் பெரிய காயம் ஒன்றும் இருக்கவில்லை.

மாட்டுவண்டிலில் ஆசுபத்திரிக்குப் போவதற்கிடையில் எவ்வளவு இரத்தம் போய் விடும். மீனாவை உயிர் பிழைக்க செய்ய முடியுமோ? நான் நம்பிக்கை

www.tamilarangam.net


சந்தாவிபரம்

இலங்கை இந்தியா – இலவசம்

தனிப்பிரதி 3sfr
ஒருவருட சந்தா 22sfr
ஐரோப்பிய நாடுகளிற்கான சந்தா 25sfr
(தபால் செலவு உட்பட)

வங்கிக்கணக்கு இல:–
Spar Konto 0094-157146-60-1

வங்கி முகவரி:–
Bücher Verkauf
Scwezerische Kreditanstalt
Switzerland



**நூல் அறிமுகம்**

தோன்றி வளர்ந்து
சிதைந்து அழிந்து
மறுபடியும் மறுபடியும்
புதியன தோன்றும்

# ஆகவே

எல்லா வகையான தொடர்புகளுக்கும்

*M. I. A. JABBAR*
*71, Rojawarodhayam Road*
*Trincomalee*
*Sri Lanka*

இருமாத இதழ்


*

இழந்து கொண்டிருந்தேன்.

ஆனால் அந்த நேரம் "ரெட் குறசு" வாகனம் வந்து சேர்ந்துவிட்டது. எல்லார் முகத்திலும் நிம்மதி வந்தது.

அதன் பின்னர் கைவிடப்பட்ட நிலையிலிருந்த சிறிய பாடசாலை ஒன்றிற்கு நாங்கள் குடிபுகுந்திருந்தோம். சிலநாட்களில் ஆசிரியர்களும் ஒரு சில மாணவர்களும் வந்து சில மணித்தியாலங்கள் படித்துவிட்டு போய்விடுவார்கள். 5ம்,6ம் ஆண்டு மாணவர்கள் பாடசாலைக்கே வருவதில்லையாம்.அது எங்களுக்கு வசதியாகி விட்டது. வானொலி செய்திகள் பலர் காதுவழியாக எம்மிடம் வந்து சேர்ந்தது. "கட்டுவனில் விமானத்தாக்குதல் நடைபெற்றது. இரண்டு குடிசைகள் மாத்திரமே சேதம். சில பொதுமக்களும் காயமடைந்தனர்."

"கட்டுவன் விமானத்தாக்குதலில் பயங்கரவாதிகளின் முகாம் நிர்மூலமாக்கப்பட்டது."
"கட்டுவன் விமானத்தாக்குதலில் பத்து பொதுமக்கள் கொல்லப்பட்டனர். எமது பதில் தாக்குதலில் விமானம் சேதமாக்கப்பட்டது."

10 நாட்கள் ஓடிவிட்டது. மீனா இன்னும் ஆசுபத்திரியிலிருந்து வரவில்லை. நானும் அக்காவும் மீராவும் ஆசுபத்திரிக்கு போனோம். தேவிஅக்கா கண்ணீருடன் மீனாவின் காலையே பார்த்துக்கொண்டிருந்தா. ஆனால் மீனா சந்தோசமாகவே இருந்தாள்.

ஒரு முழங்காலுக்குக் கீழ் ஒன்றுமேயில்லை. மற்றக்காலிலும் பெரிய பாண்டேஜ்! போட்டிருந்தது. மீரா மீனாவின் பக்கத்தில் ஓடிப்போய் " மீனா கால் வலிக்குதா? நீ இனி எங்களோட விளையாட வருவியா? என்று கேட்டாள்.

"ஓ! ஒரு காலாலேயே விளையாடலாம் மீரா. இங்க பார் எவ்வளவு பேருக்குக் காலில்லை. இங்கே மூன்று நேரமும் சாப்பாடு தருவார்கள். நான் சோறு சாப்பிட்டேன்..... மனோ மாமா இங்கே சோறு கிடைக்கும்"

கன்னத்தில் அறைபட்டதுபோல் நான் நிமிர்ந்தேன். ஆம். இழப்பதற்கு எம்மிடம் இன்னும் உடலின் அங்கங்கள் இருக்கிறது உண்மைதான்.


@@@@@@

• சசி (இலங்கை)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இரத்தப் புயல்



மாற்றியுடுக்க
கோவணமே இல்லை
சகோதரனே
இராமனுக்கு கோயில் கட்டவா
ஓடுகிறாய் ஓடு !

ஈட்டியும் வேலும்
இரத்த வெறியும்
அயோத்தி நாட்டில்
கரகம் ஆடும்

நெருப்புப் பொறியை
காற்று சுமக்கும்
நிலவுத் துண்டில்
குருதி தெறிக்கும்
மனித உடல்களில்
யாகம் நிகழும்
மசூதி சிதறி
மண்ணில் வீழும்

பதிலுக்குப் பதில்
இரத்தப் புயல்
இந்துக் கோயிலை
உடைத்து வீழ்த்து
இருக்கவே இருக்கிறார்
பெண்கள்
இழுத்து
மானம் வாங்கி
தீயில் வீசு !

பதிலுக்குப் பதில்
இரத்தப் புயல்
கடவுள் வெறியில்
சாவோம் நாம் !

தீபன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்